Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 28| விலை - 30 ரூபா செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் : 35 கதிர் : 68 தை 21ஆம் நாள் செவ்வாய்க்கிழமை 04 பெப்ரவரி 2020 வள்ளுவர் ஆண்டு 2051

## மரக்கறி விலை உச்சத்தில்!

யாழ்ப்பாணம்,பெப்.4
யாழ்ப்பாணத்தில் மரக்கறிகளின் விலைகள் தொடர்ந்தும் அதிகரித்துச் செல்வதாக மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.
தை மாதத்தில் இடம்பெ 25




உலகில் மூன்றாவது உயர்ந்த முருகன்சிலை மலையகத்தில்
(விரிவு - பக்:15)

## 512 கைதிகள் இன்று விடுவிப்பு

கொழும்பு, பெப். 4
இலங்கையின் சுதந்திர தினத்தை முன்னிட்டு 512 கைதிகளுக்கு ஜனாதிபதி கோத்தாபய பொது 25

## சுழற்சி மின்வெட்டை அரசு கைவிட்டது!

கொழும்பு, பெப். 4
நாடு முழுவதும் தினமும் 2 மணித்தியாலயத்துக்குச் சுழற்சிமுறை மின்சார விநியோகத்தை இடைநிறுத்துவதற்கு இலங்கை மின்சார சபையால் எடுக்கப்பட்ட தீர்மானம் கைவிடப்பட்டுள்ளதாக மின்சக்தி மற்றும் 25



# சுதந்திர நாள் நிகழ்வில் கூட்டமைப்பு பங்கேற்காது

### தமிழர்களைப் புறக்கணிப்பதால் இந்த முடிவு என்கிறார் சம்பந்தன்



யாழ்ப்பாணம், பெப்ரவரி 4
இலங்கையின் தேசிய சுதந்திர தின நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரைக் கலந்து கொள்ளுமாறு ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார். இருப்பினும் நாம் கலந்து கொள்ளப் போவதில்லை. தமிழர்களையும், தமிழ் மொழியையும் புறக்கணிக்கும் அவர்களின் செயற்பாடுகளை ஆதரிக்க முடியாது. இதன் காரணமாக இன்றைய தேசிய சுதந்திர தின நிகழ்வில் நாங்கள் கலந்து கொள்ள மாட்டோம். 25

## இலங்கை அரசு மீது நடவடிக்கை எடுங்கள்

### ஐ.நாவிடம் நாடு கடந்த தமிழீழ அரசு கோரிக்கை

கொழும்பு, பெப். 4
போரின் இறுதிக் கட்டத்தில் வலிந்து காணாமலாக்கப்பட்ட தமிழர்கள் எவரும் இப்போது உயிருடனில்லை என்ற கோத்தாபயவின் கூற்றுத் தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு ஐ.நாவிடம் நாடு கடந்த தமிழீழ அரசு வலியுறுத்தியுள்ளது.
கோத்தாபயவின் ஒப்புதல் வாக்குமூலத்தை அடிப்படையாக வைத்து ஏழு கோரிக்கைகளை ஐ.நாவிடம் நாடு கடந்த 27

## அரசின் கொலையாளிக்கு சுவிஸுக்கான தூதுவர் பதவி

### சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான அமைப்பு குற்றச்சாட்டு

ஜெகனஸ்பேர்க், பெப். 4
1980ஆம் ஆண்டுகளின் பிற்பகுதியில் தென்னிலங்கையில் மனித உரிமை சட்டத்தரணிகள், பத்திரிகையாளர்கள், மாணவர்கள் உட்பட நூற்றுக்கணக்கானவர்களைக் கொலை செய்த, அரசின் அனுச 26

முச்சந்தி முரளி



"இனி பொங்கல் பானையை வித்தாலும் உந்தாளுக்கு சம்பளம் குடுத்து முடியாது போல..."

## பியர்களுடன் பெண் கைது

கிளிநொச்சி, பெப். 4
பளை வெற்றிலைக்கேணி பகுதியில் அனுமதியின்றி வீட்டில் 'பியர்ரின்' களை விற்பனை செய்தார் என்ற குற்றச்சாட்டில் 26

## கூட்டமைப்பின் தலைமையை தீர்மானிப்பது 3 கட்சிகளுமே

### செல்வம் எம்.பி. அழுத்தமாகத் தெரிவிப்பு

மட்டக்களப்பு, பெப். 4
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை பற்றி அண்மையில் பலரும் பலவாறு சொல்லிக் கொள்கிறார்கள். அது அவரவர்களின் தனிப்பட்ட கருத்துக்களேயன்றி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 25

## டெனீஸ்வரனுக்கு 4 மாதச் சம்பளம்

### வழங்கியது மாகாண சபை

யாழ்ப்பாணம், பெப். 4
வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனால் பதவி நீக்கப்பட்டது தவறு என்று நீதிமன்றம் வழங்கிய இடைக்கால கட்டளைக்கு அமைவான 4 மாதங்களுக்குரிய சம்பளம், முன்னாள் அமைச்சர் டெனீஸ்வரனுக்கு வடக்கு மாகாண 04

## 21 வயதுக்கு குறைந்தோருக்கு புகைத்தல் பொருள்கள் விற்பனை வடக்கு—கிழக்கு முன்னிலை!

யாழ்ப்பாணம், பெப். 4
இலங்கையில் 21 வயதுக்கு உட்பட்டோருக்கு புகைத்தல் பொருள்கள் விற்பனை செய்தமை தொடர்பான வழக்குத் தாக்கல் நடவடிக்கைகள் வடகிழக்கு 27

## யாழ். பல்கலை பேரவைக்கு 14 உறுப்பினர்கள் நியமனம்

யாழ்ப்பாணம், பெப். 4
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் பேரவைக்கு 14 உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த விவரங்களை பல்கலைக்கழகங்கள் மானியங்கள் 25

# கரிநாள் போராட்டத்துக்கு முன்னணி முழு ஆதரவு

யாழ்ப்பாணம், பெப். 4

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் ஏற்பாட்டில் கிளிநொச்சி கந்தசுவாமி கோவில் முன்றிலிலும், மட்டக்களப்பு கல்லடி பாலத்தடியில் ஆரம்பமாகி இன்று நடைபெறும் கவனவீர்ப்புப் போராட்டத்துக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினராகிய எமது முழுமையான ஆதரவைத் தெரிவித்துக் கொள்வதுடன், அனைத்து பொது மக்களையும் மேற்படி பேராட்டத்தில் கலந்து கொண்டு ஆதரவு வழங்குமாறும் வேண்டுகோள் விடுக்கின்றோம். இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கோரியுள்ளது.

அந்தக் கட்சி விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கை அரசானது கடந்த 72வருடங்களாக இலங்கைத்தீவிலுள்ள தமிழர்களை உயிருடன் அழித்தல் அல்லது தமிழ்த் தேசத்தின் தாங்கு தூண்களான மொழி, கலாசாரம், பொருளாதாரம், கல்வி, நில ஆதிக்கம் போன்றவற்றின் மீதான கட்டமைப்பு சார் இனவழிப்பை மறைமுகமாகவும், நேரடியாகவும் மேற்கொண்டு வருகின்றது.

அரச கட்டமைப்பு ஊடாகவே தமிழ்த் தேசத்தின் மீது இனவழிப்பு அரங்கேற்றப்பட்டுள்ளது. இனவழிப்பு வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதற்கு ஆயுதப் படைகளே மிகப் பெருமளவில் பங்காற்றியுள்ளன. இனவழிப்புச் செய்த இராணுவம் எந்தவொரு கட்சிக்கும் சொந்தமானதல்ல. மாறி மாறி வரும் ஆட்சியாளர்கள் சிங்கள பௌத்த மனநிலையில் இருந்து கொண்டே தமிழரை அழிக்கும் செயற்பாட்டினை மேற்கொண்டு வந்திருந்தனர். சகல சிங்களக் கட்சிகளும் இராணுவத்தை பாதுகாக்கவே முனைந்து நின்றன.

இத்தகைய சிங்கள பௌத்த மனநிலை கொண்ட சிங்களப் பேரினாவாத அரசால் கொண்டாடப்படும் தினமாகவே பெப்ரவரி 4ஆம் திகதியன சுதந்திரதினம் அமைந்துள்ளது. தமிழினத்தை அழித்து, அடிமைப்படுத்தி, இலங்கையை தனிச் சிங்கள பௌத்த தேசமாகக் கருதி, சிங்கள பௌத்தம் கொண்டாடும் சுந்திரதிர நாளை அதற்கு எதிர்மாறாகவே பாதிக்கப்பட்ட தமிழத் தேசம் கடந்த 72 ஆண்டுகளாக கறுப்பு நாளாக கடைப்பிடித்து வருகின்றது.

எமது தேசத்தின் மீதான அடக்குமுறை நீங்கி, தமிழ்த் தேசத்துக்கான அங்கீகாரம் கிடைக்கும் வரை தமிழினம் தொடர்ந்தும் சிங்கள தேசத்தின் சுதந்திரநாளை புறக்கணித்து, கரிநாளாகக் கடைப்பிடிக்குமாறு வேண்டுகின்றோம், என்றுள்ளது.

(ஒ,5,26)

# பிளவை ஏற்படுத்துவது என் நோக்கம் அல்ல!

## விக்னேஸ்வரன் விளக்கம்

யாழ்ப்பாணம், பெப். 4

நான் உண்மையெனக் கண்டு கூறுகின்றேனேயொழிய மக்களுக்குள் பிளவை ஏற்படுத்த நான் முனையவில்லை. சிங்கள மக்கள் மத்தியில் பிறந்து, படித்து, வாழ்ந்து வந்தவன் நான். என் அன்புமிக்க மருமகள்மார்கள் சிங்களவர்கள். சிங்கள மக்கள் மீது எனக்குப் பகையோ வெறுப்போ இல்லை. ஆனால் பொய்மையில் இலங்கை உழல்வதைக் காணப் பொறுக்க முடியாது இருக்கின்றது. இவ்வாறு வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அவர் அனுப்பி வைத்துள்ள கேள்வி பதில் அறிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

'அத்துரலிய ரத்ன தேரர் நீங்கள் இனங்களுக்கிடையில் பிளவை ஏற்படுத்த முயற்சிப்பதாகக் கூறியுள்ளார். அது பற்றிய உங்கள் கருத்து என்ன?' என்ற கேள்வியைக் குறிப்பிட்டு அதற்குரிய பதிலாக,

நான் இனங்களுக்கிடையில் பிளவை ஏற்படுத்த முயல்கின்றேன் என்பதை என்ன அடிப்படையில் அவர் கூறினார் என்பது எனக்குத் தெரியவில்லை. நான் உண்மைகளை வெளியிட்டால் இனப் பிளவுகள் ஏற்பட வாய்ப்பிருப்பதாக அவர் கருதியிருந்தால் அதை நான் மறுக்கின்றேன். பொய்களைக் கூறி முழு சிங்கள மக்களையும் பிழையாக வழிநடத்திய ஒரு நாட்டில் நான் உண்மை இதுதான் என்றால் அதற்குப் பொறுப்பு நானா அல்லது பிழைகளை இதுவரை காலமும் வெளிப்படுத்திய வணக்கத்திற்குரிய தேரர் போன்றவர்களா? நான் பிளவை ஏற்படுத்தப் பார்க்கின்றேன் என்று அவர் கூறும் போது எனது உண்மைக் கூற்றுக்களை மறுக்க முடியாததால் தான் அவர் அவ்வாறு கூறுகின்றரோ என்று நான் நினைக்க வேண்டியுள்ளது.

இதுவரை காலமும் நாட்டை சிங்கள பௌத்த நாடு என்று கூறி அதை ருசுப்படுத்த உழைத்த பலர் இன்று நான் கூறும் உண்மைகளை அடியோடு வெறுப்பதை நான் உணர்கின்றேன். ஒன்றில் நான் கூறும் உண்மைகளை அவர்கள் ஏற்க வேண்டும், அப்போது பிளவு ஏற்படாது. அல்லது நான் கூறுவன உண்மைக்குப் புறம்பானவை என்பதை நிரூபிக்க வேண்டும். அப்போதும் பிளவு ஏற்படாது. எனக்குத் தலைகுனிவு மட்டும்தான் அப்போது ஏற்படும்.

நான் உண்மையெனக் கண்டு கூறுகின்றேனேயொழிய மக்களுக்குள் பிளவு ஏற்படுத்த நான் முனையவில்லை. சிங்கள மக்கள் மத்தியில் பிறந்து, படித்து, வாழ்ந்து வந்தவன் நான். என் அன்புமிக்க மருமகள்மார்கள் சிங்களவர்கள். சிங்கள மக்கள் மீது எனக்குப் பகையோ வெறுப்போ இல்லை. ஆனால் பொய்மையில் இலங்கை உழல்வதைக் காணப் பொறுக்க முடியாது இருக்கின்றது. நான் உண்மையைக் கூறி வருகின்றேன்.

நான் கூறும் உண்மைகளில் பலவற்றை பேராசிரியர் இந்திரபால 2005ஆம் ஆண்டு எழுதிய நூலில் காணலாம். நான் கட்டுக் கதைகளை வெளிக்கொண்டு வரவில்லை. இனத்துவேசம் மிக்கவர்களே இது வெறும் பொய்களையும் புனைகதைகளையும் உண்மையென சிங்கள மக்களை நம்ப வைத்துள்ளார்கள். ஆகவே பிளவு ஏற்படப் போகின்றதென்றால் புனைகதைகளை முதலில் அரங்கேற்றியவர்களே அதற்குக் காரணம். நான் அல்ல என்றுள்ளது.

(ஒ,5)

# முதியவர் சாவு

மட்டுவில் தெற்கு சாவகச்சேரியில் தவறான முடிவெடுத்து நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை இரவு ஒருவர் உயிரை மாய்த்துள்ளார் என்று சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்தனர். அதேயிடத்தைச் சேர்ந்த சி.சுந்தரலிங்கம் (வயது -61) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார். அவரது உயிரிழப்புக்கு குடும்பப் பிரச்சினை காரணமாக இருக்கலாம் என்று தமது முதல் கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதாகப் பொலிஸார் கூறுகின்றனர்.

(த-159)

# சட்டத்தால் மாத்திரம் அழிவுகளைத்தடுக்க முடியாது

கொழும்பு,பெப்.4

"சட்டதிட்டங்களினால் மாத்திரம் இயற்கை மற்றும் கலாசார அழிவுகளைத் தடுக்க முடியாது" என ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

பத்தரமுல்லையில் உள்ள அபேகம வளாகத்தில் நேற்று முற்பகல் இடம்பெற்ற உலக ஈர நில தின தேசிய நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"அபிவிருத்தியின்போது உயிர் பல்வகைத் தன்மையை பாதுகாப்பதற்கு அனைவரும் கவனம் செலுத்த வேண்டும். முறையற்ற அபிவிருத்தி நடவடிக்கைகள் சுற்றாடல் அழிவுக்கும் சதுப்பு நிலங்கள் அழிவடையவும் காரணமாகின்றன. உயிரினங்கள் மற்றும் தாவரங்களின் மூலம் கிடைக்கும் பெரும் பயன்களை நாம் இழந்து வருகின்றோம்.

இயற்கை அழிவைப்போன்றே கலாசாரமும் அழிவடைந்து வருகின்றது. சட்டதிட்டங்களினால் மட்டும் இந்த நிலைமையை மாற்ற முடியாது. சுற்றாடல் பற்றிய மக்களின் நல்ல மனப்பாங்கும், தெளிவும் மிகவும் முக்கியமானதாகும்.

மக்களின் வாழும் உரிமையை உறுதிப்படுத்துவதற்கு சுற்றாடல் அழிவுகள் தடுத்து நிறுத்தப்பட வேண்டும். என்றாலும், அபிவிருத்தி நடவடிக்கைகள் பின்னடையக் கூடாதென்பதுடன், முதலீடுகளும் சுற்றாடல் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டவாறு மேற்கொள்ளப்பட வேண்டும்.



ஒரு கிராமத்தின் அழகும் கலாசார பெறுமானங்களும் எதிர்காலத் தலைமுறையினரிடம் பாதுகாப்பாகக் கையளிக்கப்பட வேண்டும். எமது நாட்டுக்கே உரித்தான தாவரங்கள், மூலிகைகள் போன்றே உயிரினங்களையும் பாதுகாத்து சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தித் துறையின் சவால்களை வெற்றிகொள்வதற்கு அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டுமென்றும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் ஈர நிலங்களின் பெறுமானம் பற்றி பாடசாலை பிள்ளைகளினதும் மக்களினதும் மனப்பாங்கை மேம்படுத்துவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நாடளாவிய சித்திரப் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு அன்பளிப்புகளையும் சான்றிதழ்களையும் ஜனாதிபதி வழங்கி வைத்தார்.

அமைச்சர்களான பந்துல குணவர்தன, எஸ்.எம்.சந்ரசேன, இராஜாங்க அமைச்சர் ஜயந்த சமரவீர, மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தலைவர் எஸ்.அமரசிங்க, பணிப்பாளர் நாயகம் ஹேமந்த ஜயசிங்க ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

(ந)

# வாகனங்களுடன் சாரதிகள் கைது

கிளிநொச்சி, பெப். 4

அனுமதிப்பத்திரம் இன்றி மணல் அகழ்ந்து ஏற்றினரென்று டிப்பர் மற்றும் 3 உழவியந்திரங்களுடன் அவற்றின் சாரதிகள் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பளைப் பொலிஸார் தெரிவித்தனர்.

தர்மக்கேணி பகுதியில் மணல் அகழ்ந்து ஏற்றினார் என்று அவர்கள் மீது பொலிஸார் குற்றஞ்சாட்டினர்.

(த-6)

# லைசன்ஸ் இன்றி சாரத்தியம்: டிப்பர் சாரதி கைது

கிளிநொச்சி, பெப். 4

சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி மணல் ஏற்றிய டிப்பரைச் செலுத்திச் சென்றவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பளைப் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்துக்களைத் தடுக்கும் நோக்கில் அந்தச் சாரதி கைதுசெய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

விசாரணையின் பின்னர் அவர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். வாகனம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படும் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

(த-6)

# யானையே சின்னம் ரணில் அணி உடும்புப்பிடி

கொழும்பு, பெப். 4

2020ஆம் ஆண்டு ஏப்ரல் இறுதி வாரத்தில் நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் யானைச் சின்னத்தின்கீழ் போட்டியிட வேண்டும் என்பதே ஐக்கிய தேசியக் கட்சியின் பெரும்பான்மையான உறுப்பினர்களின் நிலைப்பாடாக இருக்கின்றது என்று ரணில் ஆதரவு அணி உறுப்பினரான பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று முற்பகல் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய தேசியக்கட்சி தலைமையில் அமையும் அரசியல் கூட்டணியின் சின்னம் தொடர்பில் கட்சியின் மத்திய செயற்குழுவின் ஒப்புதல் பெறப்படவேண்டும்.

எமது கட்சியிலுள்ள 58 நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் தலைவரை (ரணில் விக்கிரமசிங்க) சந்தித்தேன். யானைச் சின்னத்தின்கீழ்தான் போட்டியிட வேண்டும் என்று அவர்கள் குறிப்பிட்டனர். மீதமுள்ள 19 உறுப்பினர்களையும் சந்தித்து இது தொடர்பில் கலந்துரையாடவுள்ளேன்.

இலங்கை அரசியல் பெரும்பாலான தேர்தல்களை வரலாற்றில் யானைச் சின்னத்தின் கீழ்தான் ஐக்கிய தேசியக்கட்சி சந்தித்துள்ளது. ஜனாதிபதித் தேர்தல்களின் போது, பொதுவேட்பாளர்கள் களமிறக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் மட்டுமே அன்னம் சின்னம் தேர்வாக இருந்தது.

எனவே, வருகின்ற பொதுத்தேர்தலில் யானைச் சின்னத்தின்கீழ் போட்டியிட வேண்டும் என்பதே ஐக்கிய தேசியக்கட்சியிலுள்ள பெரும்பான்மையான உறுப்பினர்களின் உறுதியான நிலைப்பாடாக இருக்கின்றது. எதிர்வரும் 6 ஆம் திகதி கட்சியின் செயற்குழு கூடவுள்ளது. இதன்போதும் இவ்விடயம் கலந்துரையாடப்படும்.' என்றும் ரங்கே பண்டார குறிப்பிட்டார்.

சஜித் தலைமையில் மலரவுள்ள புதிய அரசியல் கூட்டணியின் பெயர், சின்னம் ஆகியன தொடர்பில் இன்னும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை. இவ்வாறானதொரு பின்புலத்திலேயே யானைச் சின்னமே தேர்வாக இருக்க வேண்டும் என ரணில் தரப்பு திட்டவட்டமாக அறிவித்துள்ளது. (ஒ,5,44)



## வெற்றுப் பெட்டிகளே மீட்பு

முல்லைத்தீவு, பெப். 4

கைவேலி கணேசா வித்தியாலய மைதானத்தில் படையினரால் புதைக்கப்பட்ட வெற்று வெடிபொருள் பெட்டிகள் மீட்கப்பட்டுள்ளன.

புதுக்குடியிருப்பு கைவேலி கணேசா வித்தியாசாலையில் கடந்த 31ஆம் திகதி விளையாட்டுப் போட்டிக்காக கொடிக்கம்பம் நடுவதற்கு கிடங்கு தோண்டியபோது பெட்டிகளில் அலவாங்கு குத்திச் சத்தம் கேட்டுள்ளது. புதுக்குடியிருப்பு பொலிஸார் அங்கு வந்து இடத்தை அடையாளப்படுத்தி பொலிஸ் பாதுகாப்பு வழங்கினர். அந்தப் பகுதியை உடனடியாக அகழ்வதற்கு நீதிமன்ற அனுமதி பெற்றுக் கொள்ளப்பட்டு, சிறப்பு அதிரடிப்படையினர் வரவழைக்கப்பட்டு நேற்று அகழ்வு முன்னெடுக்கப்பட்டது. 81 மில்லிமீற்றர் எறிகணைகள் வைக்கும் 13 பெட்டிகள் மண்கள் போட்டு நிரப்பப்பட்ட நிலையில் நிலத்திலிருந்து மீட்கப்பட்டுள்ளன. (ஒ,5)

## வெடிபொருளுடன் ஒருவர் கைது

கிளிநொச்சி,பெப்.4

வெடிபொருள் என சந்தேகிக்கப்படும் பொருளை உடமையில் வைத்திருந்த ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார். பளைப் பொலிஸாருக்கு கிடைத்த அமையமாமுனை குடாரப்பு பகுதியில் வெடிபொருள் என சந்தேகிக்கப்படும் சுமார் 5 கிலோவுக்கும் மேற்பட்ட குறித்த பொருளினை, உடமையில் வைத்திருந்த 32 வயதுடைய நபர் ஒருவரைத் தாம் கைதுசெய்துள்ளதாகப் பளைப்பொலிசார் தெரிவித்தனர்.

குறித்த நபர் கடல் தொழிலில் ஈடுபடுபவர் என தமது ஆரம்பக்கட்ட விசாரணைகளில்

தெரியவந்துள்ளதாக மேலும் அவர்கள் தெரிவித்தனர். குறித்த நபரையும் சான்றுப் பொருளையும்

கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த உள்ளதாகவும் நீதிமன்ற அனுமதியுடன் குறித்த வெடிபொருள் எவ்வகையானது என்பதனை நீதிமன்ற அனுமதியுடன் ஆய்வுக்கு அனுப்ப உள்ளதாகவும் பளைப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ந-6)

## கைதுசெய்ய உத்தரவு!

சிறிலங்கன் விமான சேவையின் முன்னாள் நிறைவேற்றதிகாரி கபில சந்திரசேன மற்றும் அவரது மனைவி பிரியங்கா நியோமாலி விஜேநாயக்க ஆகியோரைக் கைது செய்யுமாறு குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு சட்டமா அதிபர் உத்தரவிட்டுள்ளார்.

இவர்களைக் கைது செய்வதற்காக நீதிமன்றத்தில் அறிக்கையிட்டு பிடியாணை உத்தரவைப் பெற்றுக்கொள்ளுமாறும் சட்டமா அதிபர் அறிவித்துள்ளார். இருவர் தொடர்பிலும் குற்றப்பு லனாய்வுத் திணைக்களம் முன்னெடுக்கும் விசாரணைகளின் முன்னேற்றத்தைக் கவனத்திற்கொண்டு சட்டமா அதிபர் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார். நிதித்தூய்தாக்கல் சட்டத்தின் கீழான குற்றச்சாட்டுக்களின் பேரில் கபில சந்திரசேன மற்றும் அவரது மனைவி பிரியங்கா நியோமாலி விஜேநாயக்க ஆகியோரை கைது செய்வதற்காக நீதிமன்றத்தில் விடயங்களைத் தெளிவுபடுத்துமாறு குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு சட்டமா அதிபர் பணிப்புரை விடுத்துள்ளார்.

சிறிலங்கன் விமான சேவைக்கு எயார் பஸ்களைக் கொள்வனவு செய்வது தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட கொடுக்கல் வாங்கலில் இடம்பெற்ற முறைகேடுகளை அடிப்படையாகக் கொண்டு இந்த விசாரணை முன்னெடுக்கப்படுகின்றது. (ஒ,5,22)

## ரஞ்சித் மத்தும பண்டாராவே கூட்டணியின் செயலாளர்!

### இதுவே என் கட்டளை என்கிறார் சஜித்

கொழும்பு, பெப். 4

புதிய அரசியல் கூட்டணியின் பொதுச் செயலராக ரஞ்சித் மத்தும பண்டாரவை பெயரிடுகின்றேன். அதற்கான அதிகாரம் எனக்கு வழங்கப்பட்டுள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார். ஐக்கிய தேசியக் கட்சியின் தொகுதி அமைப்பாளர்களுடன் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று நடைபெற்ற சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே சஜித் பிரேமதாச மேற்கண்டவாறு கூறினார்.

புதிய அரசியல் கூட்டணியின் செயலர் பதவிக்கு போட்டி இருக்கவில்லை. குறிப்பிட்ட சிலருக்கு அந்தப் பதவியை வழங்கவேண்டாம் என எனக்கு அவரும் நிபந்தனை விதிக்கவும் இல்லை. செயலரை நியமிக்கும் அதிகாரம் எனக்கு வழங்கப்பட்டுள்ளது. அந்தப் பதவிக்கு எமது கட்சியின் மூத்த உறுப்பினரான ரஞ்சித் மத்தும பண்டாரவை பெயரிடுகின்றேன். அவரே செயலராவார் என்பதையும் அறிவிக்கின்றேன், என்றார் சஜித். (ஒ,5,44)

## வலி.கிழக்கு மக்களுக்கு தண்ணீர் விநியோகம் சீர்

யாழ்ப்பாணம், பெப். 4

வலி.கிழக்குப் பிரதேச சபைக்கு உட்பட்ட கிராம மக்களுக்கு குடிதண்ணீர் தொடர்ந்து வழங்கப்படு கின்றது என்று தெரிவிக்கப்பட்டது.

புத்தூர், ஊறணி, சிறுப்பிட்டி, பன்னாலை, இருபாலை கிழக்கு போன்ற கிராமங்களிலுள்ள மக்களுக்கு இரண்டு பவுசர் வாகனங்களில் குடி தண்ணீர் விநியோகம் தொடர்ந்து இடம்பெறுகின்றது.

இந்தப் பகுதியில் இதற்கென வைக்கப்பட்டுள்ளன குடிநீர் விநியோக தாங்கி ஊடாக குடிதண்ணீர் கிராம மக்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

வறட்சியான காலப்பகுதியில் கிராம மக்களுக்கு குடிதண்ணீர் வழங்கல் மேலும் விஸ்தரிக்கப்படும்.

இதேசமயம், இருபாலை கிழக்கு கிராம மக்களுக்கு நிலத்தடிக் குழாய் மூலமாக குடிதண்ணீர் வழங்கப்பட்டு வருகின்றது. (த-17)

## நாடு திரும்பினார் பஸில்! ‘மொட்டு’ அணிக்கு விசில்!

கொழும்பு, பெப். 4

மக்களால் கோரப்படும் வெற்றிச் சின்னத்தின் கீழ்தான் பொதுத்தேர்தலில் களமிறங்குவோம். இவ்வாறு சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

தனிப்பட்ட பயணமொன்றை மேற்கொண்டு அமெரிக்காவுக்கு பயணம் மேற்கொண்டிருந்த பஸில் ஒரு மாதத்துக்கு பின்னர் நேற்று முற்பகல் நாடு திரும்பினார். சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி யின் முக்கிய உறுப்பினர்கள் சிலர் விமான நிலையத்துக்கே சென்று பஸிலை வரவேற்றனர். விமான நிலைய வளாகத்தில் வைத்து ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட பஸில், மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள வாக்குறுதிகளை உரிய வகையில் நிறைவேற்றி முன்நோக்கி பயணிப்பதற்கு பலமானதொரு நாடாளுமன்றம் அவசியம். நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலத்தை சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி தலைமையிலான அணி பெற்றுக்கொள்ள வேண்டும். அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியுடன் இணைந்து இன்னும் புதிய கூட்டணி அமைக்கவில்லை. ஆனால், கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது எம்முடன் இணைந்து செயற்பட்டார். எதிர்காலத்திலும் அவ்வாறே நடக்கும். போட்டியிடும் சின்னம் குறித்து இன்னும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை. பொருத்தமான சின்னம் தெரிவு செய்யப்படும். அது மக்களால் கோரப்படும் வெற்றிச் சின்னமாகவே இருக்கும், என்றார் பஸில் ராஜபக்ஷ. இதன்போது அவரைச் சூழ இருந்தவர்கள், ‘மொட்டுச்’ சின்னத்தையே மக்கள் கோருகின்றனர் என சத்தமாகக் கூறி, விசில் அடித்து மகிழ்ந்தனர் என்பது குறிப்பிட்டனர். (அ,ஒ,5,44)

# மருத்துவரை நியமிக்குமாறு முல்லையில் கவனவீர்ப்பு



**முல்லைத்தீவு, பெப். 4**

**முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்கு உட்பட்ட தேவிபுரம் ஆரம்ப சுகாதார மருத்துவ நிலையத்தில் நிரந்தர மருத்துவரை நியமிக்கக்கோரி மக்கள் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.**

**தேவிபுரம் பகுதியில் அமைந்துள்ள ஆரம்ப சுகாதார மருத்துவ நிலையத்தில் நாள்தோறும் ஐம்பதுக்கும் மேற்பட்ட நோயாளர்கள் சிகிச்சைபெற்று வருகின்றார்கள்.**

ஜனவரி மாத தொடக்கத்தில் இருந்து இது வரை மருத்துவர்கள் எவரும் நியமிக்கப்படவில்லை என்று குற்றஞ்சாட்டிய மக்கள் கவலையும் தெரிவித்தனர்.

வள்ளிபுனம், தேவிபுரம், வெள்ளப்பள்ளம், சுதந்திரபுரம், இருட்டுமடு, இடைக்கட்டு போன்ற கிராமங்களைச் சேர்ந்த சுமார் 2 ஆயிரம் குடும்பங்கள் சுகாதாரத் தேவைக்கு இந்த மருத்துவமனையை நம்பியே வாழ்ந்து வருகின்றார்கள்.

இங்கு மருத்துவர் இல்லாததால் 8 கிலோமீற்றர்தூரத்துக்கு அப்பாலுள்ள புதுக்குடியிருப்பு மருத்துவமனைக்கே சிகிச்சை பெறச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மருத்துவரை நியமிக்கவேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கிராமங்களில் சகல வசதிகளுடனும் மருத்துவமனைகள் அமைக்கப்பட்டிருந்தாலும்கூட பல மருத்துவமனைகளில் மருத்துவர்களுக்குப் பற்றாக்குறை தொடர்கின்றது என்று அவர்கள் கருத்துத் தெரிவித்தனர். (சு-19)

## செங்கோல் அன்னை வருடாந்தப் பெருவிழா

மன்னார்.பெப்.4

மன்னார் மறைமாவட்ட முத்தரிப்புத்துறை புனித செங்கோல் அன்னை ஆலய வருடாந்தப் பெருவிழாவின் இறுதிநாள் வழிபாடுகள் நேற்றுமுன்தினம் நடைபெற்றன.

கடந்த ஒன்பது நாள்கள் அரிப்பு பங்குதந்தை அருட்பணி ஸ்ரீபன்ராஜா அடிகளார் தலைமையில் திருவிழா நடைபெற்றது. தொடர்ந்து நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையின்தலைமையில் திருவிழா திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. தொடர்ந்து அன்னையின் திருச்சுரூப பவனி இடம்பெற்றது. (ஐ-60)





## மெய்வன்மைப் போட்டி

மன்னார்.பெப்.4

மன்னார் கல்வி வலயத்தின் பேசாலை மன்.சென்.பாத்திமா வித்தியாலயத்தின் வருடாந்த மெய்வன்மைப் போட்டி கடந்த சனிக்கிழமை பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் விருந்தினர்களாக அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா, பேசாலை பங்கு தந்தை அருட்பணி எஸ்.கொடுத்தோர் தேவராஜா அடிகளார், பேசாலை முருகன் ஆலய சிவஸ்ரீ தருமகுமாரக் குருக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ-60)

### டெனீஸ்வரனுக்கு...

சபையால் வழங்கப்பட்டுள்ளது.

'எனது அமைச்சுப் பதவியை பகிர்ந்து கொண்டிருந்த முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், முன்னாள் அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன், முன்னாள் அமைச்சர் க.சிவநேசன் ஆகியோர் மாகாணசபைக்கு அந்தப் பணத்தை திரும்பச் செலுத்தவேண்டும்' என்று முன்னாள் அமைச்சர் டெனீஸ்வரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தனது அமைச்சரவையிலிருந்து அமைச்சர் டெனீஸ்வரனை 2017ஆம் ஆண்டு ஜூலை மாதம் 24ஆம் திகதி பதவி விலக்குவதாக அறிவித்திருந்தார். அதற்கு எதிராக டெனீஸ்வரன் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார். 2018ஆம் ஆண்டு ஜூலை மாதம் நீதிமன்றம் இடைக்காலக் கட்டளை வழங்கியது. அவரது பதவி நீக்கம் தவறு என்று கூறியது. இந்த வழக்கு மீதான தீர்ப்பு கடந்த ஆண்டு இறுதியில் வழங்கப்பட்டது. இடைக்காலக் கட்டளையை உறுதிப்படுத்தியிருந்தது.

நீதிமன்றம் பிறப்பித்த இடைக்காலக் கட்டளைக்கு அமைவாக தனது சம்பளத்தை வழங்குமாறு டெனீஸ்வரன், வடக்கு மாகாணசபையைக் கோரியிருந்தார். இது தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனை பெறப்பட்டது. சட்டமா அதிபர் வழங்கிய ஆலோசனைக்கு அமைவாக, 2018ஆம் ஆண்டு ஜூலை மாதம் நீதிமன்றம் வழங்கிய இடைக்காலக் கட்டளையிலிருந்து மாகாணசபை கலைக்கப்படும் வரையிலான 2018ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் வரையிலான 4 மாதங்களுக்குரிய சம்பளத்தை வழங்க சட்டமா அதிபர் அறிவுறுத்தியிருந்தார்.

நான்கு மாதங்களுக்கும் 7 லட்சத்து 21 ஆயிரத்து 797 ரூபா 27 சதம் அவருக்கு வழங்கப்பட வேண்டியுள்ளது. டெனீஸ்வரன் அமைச்சரவையிலிருந்து விலகியபோது கைத்தொலைபேசி மற்றும் மடிக்கணினி என்பவற்றை ஒப்படைக்கவில்லை. அதற்குரிய பெறுமதியை வழங்குவதாக டெனீஸ்வரன் தெரிவித்தமைக்கு அமைவாக ஒரு லட்சத்து 97 ஆயிரத்து 950 ரூபா கழிக்கப்பட்டு எஞ்சிய 5 லட்சத்து 23 ஆயிரத்து 847 ரூபா 27 சதம் அவரின் வங்கிக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டுள்ளது.

எஞ்சிய மாதங்களுக்கான கொடுப்பனவைக் கோரி மாகாணசபைக்கு விண்ணப்பிக்கவுள்ளதாகத் தெரிவித்த முன்னாள் அமைச்சர் டெனீஸ்வரன், தனது ஆளணியினருக்கான கொடுப்பனவையும் கோரவுள்ளதாகக் குறிப்பிட்டார். தனது அமைச்சுப் பதவியை பங்கிட்டு வகித்த மூவரிடமிருந்து அந்தப் பணத்தை மாகாணசபை மீள அறவிடவேண்டும் என்றும் வலியுறுத்தினார். (ஒ.5.105)

## வவுனியாவில் சிறப்புற்ற தைத்திருநாள் விழா

வவுனியா.பெப். 4

வவுனியா வெங்கலச் செட்டிகுளம் பிரதேச செயலகமும் கலாசார அலுவல்கள் திணைக்களமும் இணைந்து நடத்திய தைத்திருநாள் விழா வவுனியா வீரபுரம் ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய அறநெறி மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

பிரதேச செயலர் க.சிவகரன் தலைமையில் நடைபெற்ற விழாவில், ஆரம்ப நிகழ்வாக பொங்கல் நிகழ்வும் வழிபாடுகளும் நடைபெற்றன. தொடர்ந்து முட்டி உடைத்தல் உட்பட பாரம்பரிய விளையாட்டுக்களும், கலை நிகழ்வுகளும் சொற்பொழிவுகளும் நடைபெற்றன.

வீரபுரம் ஸ்ரீசித்தி விநாயகர் ஆலய பிரதம குரு அருட்திரு யோகசிகாமணி, பிரதேச சபைத் தவிசாளர் ஆ.அந்தோனி, மாவட்டச் செயலக கலாசார அலுவலர் ஜெ.தட்சாயினி, கிராம அலுவலர்களான பா.பால்ரீ, எஸ்.கஜேந்திரன், இ.தேவகி, இந்து கலாசார அபிவிருத்தி அலுவலர் சிவ.கஜேந்திரகுமார், கலாசார அபிவிருத்தி அலுவலர் மற்றும் அறநெறி ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்துகொண்டிருந்தனர். (த - 110)

## விலங்கு விசர் நோய் தடுப்பூசி ஏற்றல்

யாழ்ப்பாணம், பெப்.4

யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்குள் அமைந்து குருநகர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி ஏற்றப்பட்டு வருகின்றது.

இதன்படி வளர்ப்பு நாய்களுக்கான தடுப்பூசி கீழ்வரும் இடங்களில் நாளை புதன்கிழமை ஏற்றப்படவுள்ளது.

காலை 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணிவரை யூபிலி மகப்பேற்று நிலையம் முன்பாகவும், முற்பகல் 11 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணிவரையும் குருநகர் சின்ன ஆஸ்பத்திரி முன்பாகவும், பிற்பகல் 2.30 மணி தொடக்கம் மாலை 4 மணிவரையும் செபஸ்ரியார் கோவில் அருகாமையிலும் நடைபெறவுள்ளன.

எனவே ஒவ்வொருவரும் தங்களது வளர்ப்பு நாய்களுக்கு மேற்படி தடுப்பூசியை ஏற்றிக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. உரிமக்கட்டணமாக 30 ரூபா அறவிடப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# யாழ்ப்பாணத்தில் தொழிற்சந்தை

## சனிக்கிழமை நடைபெறும்

யாழ்ப்பாணம், பெப். 4

யாழ்ப்பாண மாவட்டத்தில் தொழிலுக்காகக் காத்திருக்கும் இளையோருக்கு தொழில் வாய்ப்புக்களைப்பெற்றுக்கொடுப்பதற்கான மாபெரும் தொழிற்சந்தை எதிர்வரும் சனிக்கிழமை யாழ்ப்பாண மாவட்டச் செயலக வளாகத்தில் நடைபெறவுள்ளது.

மனிதவலு வேலைவாய்ப்புத் திணைக்களம் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்துடன் இணைந்து இதை நடத்துகின்றது.

தொழிற்சந்தை நிகழ்வில் 40க்கும் மேற்பட்ட பல்வேறு துறை சார்ந்த தொழில்வழங்கும் நிறுவனங்கள் கலந்துகொண்டு முகாமையாளர், கணக்காளர், பொலிஸ்அலுவலர், தாதியர், நட்சத்திர விடுதிகளுக்கான வேலைவாய்ப்புக்கள், தையலாளர், சந்தைப்படுத்துநர், கணினி இயக்குநர், பாதுகாப்பு அலுவலர்கள், சுத்திகரிப்பாளர் போன்ற 1000 வரையிலான தொழில் வெற்றிடங்களுக்கான ஆள்ச்சேர்ப்பு இடம்பெறவுள்ளது.

தொழிலுக்காகக் காத்திருக்கும் இளையோர் மேற்படி நிகழ்வில் கலந்துகொண்டு தமக்குப் பொருத்தமான தொழில் வாய்ப்பைப் பெற்றுப் பயனடையுமாறு மாவட்டச் செயலர் நா. வேதநாயகன் அறிவுறுத்தியுள்ளார்.

மேலதிக விளக்கங்கள் மற்றும் அறிவுறுத்தல்களை மாவட்ட தொழில்நிலையத்தில்நேரடியாகவும்0212219359என்றஇலக்க அலுவலக தொலைபேசி ஊடாகவும்பெற்றுக்கொள்ளலாம்என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(த)



### மாதகல்
### தூய லூர்து அன்னை திருத்தல திருவிழா
### 16.02.2020

**மாதகல் துறைமுகப் பகுதியில் அமைந்துள்ள தூய லூர்து அன்னை திருத்தல திருவிழா 16.02.2020 ஆம் திகதி கொண்டாடப்படவுள்ளது. அன்னை வழியாக ஆண்டவன் அருளைப் பெற்று இறையுற வில் வளமுடன் வாழ பக்தர்களை அன்புடன் அழைத்து நிற்கின்றோம்.**

✓ **07.02.2020** ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் நவநாள்கள் ஆரம்பமாகித் தினமும் மாலை 4.45 மணிக்கு நவநாள்கள் நடைபெறும்.

✓ **15.02.2020** ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6.00 மணிக்கு அன்னையின் திருச்சுரூபத் தேர்ப்பவனியும், நற்கருணை வழிபாடும் நடைபெறும்.

✓ **16.02.2020** ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணிக்கு திருநாள் திருப்பலி நடைபெறும்.

**பங்குத் தந்தையும்,**
**பங்கு மக்களும்.**
**மாதகல்.**

(CS/31026)(11,17)

## கேதீச்சர பாதயாத்திரை 13ஆம் திகதி ஆரம்பம்

சாவகச்சேரி, பெப். 4

உலகசைவத்திருச்சபையின்நெறிப்படுத்தலில் மகாசிவராத்திரிபாதயாத்திரைஎதிர்வரும்13ஆம் திகதி தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் கோவிலில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்த யாத்திரை எதிர்வரும் 20 ஆம் திகதி இரவு திருக்கேதீச்சரத்தைச் சென்றடையும்என்றுதெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 13 ஆம் திகதி செல்வச் சந்நிதியில் வேல்சாமி ஐயா தலைமையில் யாத்திரை புறப்படும். பாத யாத்திரைக் குழுவினர் செல்வச் சந்நிதியிலிருந்து நல்லூர் வரையான சைவ ஆலய தரிசனங்களுடன் நல்லூர் கந்தசுவாமி கோவிலைமறுநாள்14ஆம்திகதிசென்றடையும். அங்கிருந்து15ஆம்திகதி புறப்பட்டு செம்மணி நாவற்குழி ஊடாக ஏ 32வீதி வழியாகச்சென்று எதிர்வரும் 20 ஆம்திகதிதிருக்கேதீச்சரத்தைச்சென்றடையும். பாத யாத்திரையில் கலந்துகொள்ள விரும்பும்அடியார்கள் தங்களுக்கு அருகிலுள்ளஆலயங்களிலிருந்து பங்குபற்றலாம் என்றுஅறிவிக்கப்பட்டுள்ளது.

(த-9)

### பிற்போடப்பட்டுள்ளது

05.02.2020 திகதி நடத்தவிருந்த தெல்லிப்பளை பிரதேச செயலக நலன்புரிச் சங்கத்தின் மாபெரும் அதிஷ்டலாபச் சீட்டு 2019 இன் அதிஷ்டம் பார்க்கும் நிகழ்வானது தவிர்க்க முடியாத காரணத்தினால் 15.04.2020 ஆம் திகதி நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதனை சகலருக்கும் அறியத்தருகின்றோம்.

**செயலாளர்,**
**நலன்புரிசங்கம்**

(J/11278)(11,17)

### கலங்கரை விளக்கத்தில் கரை தொட்டவர்கள்..

25ம் வருடத்தில் காலடி பதித்து இன்று தனது வெள்ளி விழாவைக் கொண்டாடும் IIS கல்வி நிறுவனத்திற்கு எமது மனமார்ந்த வாழ்த்துக்கள். இன்று வரையிலும் எமது கல்வி வளாகத்தின் நினைவுகள் மனதிலே பசுமரத்தாணி போல பதிந்து விட்டன.

மாறிவருகின்ற இத் தொழில்நுட்ப வளர்ச்சியில் பல்வேறுபட்ட துறைகளில் வேலைவாய்ப்புக்களைப் பெற்று சிறப்பான நிலைகளில் நாம் இருப்பதற்கு மிக முக்கியமான காரணம் எமது IIS கல்வி நிறுவனம் என்பதைக் கூறிக்கொள்வதில் பழைய மாணவர்களாகிய நாம் பெருமிதம் கொள்கின்றோம்.

எம்மிடம் புதைந்திருந்த பல்வேறுபட்ட திறமைகளை வெளிக்கொணரச்செய்து நம் எதிர்காலத்திற்கு கலங்கரை விளக்கமாக அமைந்த எமது கல்வி நிறுவனம் மேலும் பல வருடங்கள் தனது கல்விச் சேவையை எம் போன்ற மாணவர்களுக்கு ஆற்ற வேண்டும் என்பதே நம் மிகப் பெரும் எதிர்பார்பாகும்.

எங்கள் கல்வி வளாகம் மேலும் பல சாதனைகளைப் புரிய இறையாசியுடன் வாழ்த்துகின்றோம்.

**-பழைய மாணவர்கள்.**

MASSIVE VEHICLES AUCTION SALE



06th of February
LOLC VEHICLE FACILITY CENTRE
NO.363, MANNAR ROAD, VEPPANKULAM
VAVUNIYA
Thimothi - 0766 58 23 29
Nelum - 0245 11 81 81
On View – 03rd & 05th February
(Please refer the Udayan On 03rd of February 2020 For the Full List Of Vehicles)
LOLC FINANCE
SCHOKMAN & SAMERAWICKREME
One Country. One Auctioneer. Celebrating 128 Years of Service Excellence.
Head Office & Showroom: 24, Torrington Road, Kandy Tel: 081 2227593 Fax: 081 2224371 Email: schokmankandy@sltnet.lk
City Office & Showroom: No.6A, Fairfield Gardens, Colombo 8 Tel: 011 2602680, 2585408 Tel / Fax: 011 2588176 Email: schokman@samera1892.com
Web: www.sandslanka.com

அவசர பணத்தேவைகளுக்கு செலான் வங்கியில் தங்கத் தீர்வு




அதிகபட்ச முற்பணத் தொகை
ரூ 54,000/-



இச்சலுகை வரையறுக்கப்பட்ட காலத்திற்கு மட்டுமே
செலான் தங்க நகை
●அதிகபட்ச இரகசியத்தன்மை ●சிநேகபூர்வமான உடனடி சேவை ●சிறந்த பாதுகாப்பு
சந்தை நிலைவரங்களின் அடிப்படையில் குறிப்பிட்ட முற்பணமானது முன்னறிவித்தலின்றி மாற்றப்படலாம்.
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள் அல்லது,
011 200 88 88 www.seylan.lk
செலான் வங்கி
அன்புடன் அரவணைக்கும் வங்கி
Brand Finance Rating "A +" Fitch Rating: "A"-(lka)' கம்பனிப் பதிவிலக்கம் PQ 9 இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவு செய்யப்பட்ட வர்த்தக வங்கி

# திருக்கணித சனிப்பெயர்ச்சி பலன்கள்



## கடகம்




கடக ராசியினருக்கு 6ம் இடமான தனுசு ராசியிலிருந்து மகர ராசிக்குச் செல்கிறார் சனிபகவான். ஏழாம் வீட்டுச் சனியை 'கண்டகச் சனி காலம்' என்று அழைப்பார்கள்.
கண்டகச் சனி, வாழ்வில் சில சிக்கல்களைபிரச்சினைகளை உருவாக்குவார் என்பது பொதுவான ஜோதிட விதி. ஆனால், இந்த முறை அப்படி நிகழ வாய்ப்பில்லை. காரணம், சனி பகவான் சொந்த வீடான மகர ராசியில் சுபத்துவ சூட்சும பலம் பெறுகிறார். அதனால், கடக ராசிக்காரர்களுக்கு எந்தவிதமான கெடுபலனையும் சனி பகவான் செய்ய மாட்டார்.
6ஆம் இடத்தில் இருந்தபோதும், சனி பகவான் கடக ராசிக்காரர்களுக்கு பெரிதாக ஒன்றையும் கொட்டிக் கொடுத்துவிடவில்லை. இப்போது இருக்கும் 7ஆம் இடத்திலும் பெரிதாக எதையும் கொடுக்கவில்லையென்றாலும் ஓரளவு நீங்கள் திருப்தி அடையும் அளவு நிச்சயம் நற்பலன்களைத் தருவார்.
7ஆம் இடத்து சனி, வாழ்க்கைத் துணையுடன் தேவையற்ற வீண் வாக்குவாதங்கள், சர்ச்சைகளை உருவாக்கி, ஒருவருக்கொருவர் பிரிந்திருக்கும் சூழ்நிலையை ஏற்படுத்துவார். வியாபாரத்திலி ருப்பவர்களுக்குப் பங்குதாரர்கள் உங்களை விட்டுப் பிரிந்து செல்வார்கள்.
நண்பர்கள், பங்குதாரர்கள், மனைவி, கணவன் எனத் தோழமையோடு இ நக்கக்கூடிய உறவுகளைப் பிரிந்து மீண்டும் இணையும் சூழ்நிலையை ஏற்படுத்துவார்.
ஏழாமிடத்தில் இருக்கும் சனி, ராசியைப் பார்ப்பார். அவர் ராசியைப் பார்க்கும்போது எதிலும் மந்தத் தன்மை, சோம்பேறித்தனம், தாழ்வு மனப்பான்மை இவற்றையெல்லாம் ஏற்படுத்துவார். எந்த ஒரு செயலை

**திருக்கணிதப்படி கடந்த 24.1.2020 சனிப்பெயர்ச்சி நடந்துள்ளது. வாக்கியப் பஞ்சாங்கப்படி 26 டிசெம்பர் 2020 அன்றே சனிப்பெயர்ச்சி நடைபெறும் எனக் கூறப்பட்டுள்ளது**

யும் நாம் செய்வதாக இருந்தால், அதைத் தள்ளிப் போட வைப்பார். `அப்புறம் செய்து கொள்ளலாமே, நாளைக்குப் பார்த்துக்கொள்ளலாமே' என்கிற சிந்தனையை மனத்தில் தோற்றுவிப்பார். தியானமும் தெய்வ வழிபாடும் மிகச் சிறந்த வழிகளாகும்.
ஜோதிட சாஸ்திரம் என்பது சாலை விதியைப் போன்றது. எதையும் முன்கூட்டியே தெரிந்துகொண்டு அதற்கேற்ப நம் வாழ்க்கைப் பயணத்தை அமைத்துக்கொண்டால், நம் பயணம் சிறப்பாக இருக்கும். நேர காலத்துக்கேற்ப திட்டமிட்டுக் கொண்டு வழக்கத்தைவிட கொஞ்சம் சுறுசுறுப்பாகவும் முறையாகத் திட்டமிட்டுக்கொண்டும் செயல்பட்டோமென்றால், இது போன்ற சாதகமற்ற பலன்களை நம்மால் தவிர்க்க முடியும்.
கண்டகச் சனி விட்டேத்தியான மனப்பான்மையை

## கவனமாக காய் நகர்த்த வேண்டும்

யும் அலட்சியப் போக்கையும் தருவாரே தவிர, பெரிதாக எந்தக் கெடுபிடியும் செய்ய மாட்டார். கடக ராசிக்கு ஏழாமிடமான மகர ராசி, சர ராசியாக இருப்பதால் வெளிநாட்டு வாழ் கடக ராசிக்காரர்களுக்குப் பெரிய யோகத்தைத் தரக்கூடியவராக இருப்பார்.
வெளிநாடுகளுக்குச் செல்ல விசா கிடைக்காமல் இருந்தவர்களுக்கு இப்போது விசா கிடைக்கும். வெளிநாட்டிலேயே குடியுரிமை பெற வேண்டும் என்பதற்காக மனு செய்திருந்தவர்களுக்குக் குடியுரிமை கிடைப்பதற்கான வாய்ப்புகள் மிகவும் அதிகம்.
வளைகுடா நாடுகளுக்குச் செல்ல விரும்பிய இளைஞர்களுக்கு அங்கு செல்வதற்குரிய வாய்ப்புகள் இப்போது பிரகாசமாகத் தெரிகின்றன.
பெண்களுக்கு இந்தக் கண்டகச் சனி ஏராளமான நன்மைகளை வழங்கும் ஏழாமிடத்தில் சனி பகவான் ஆட்சியாக இருப்பதால், இதுநாள்வரை திருமணம் தள்ளிப்போய்க் கொண்டிருந்தவர்களுக்கு நல்ல இடத்தில் வரன் அமையும்.
ஏழாமிடத்திலிருக்கும் சனி ராசியைப் பார்ப்பதால் வயதானவர்களுக்கு உடல்ரீதியான சில தொந்தரவுகளைத் தருவார். அவர்கள் சளி, காய்ச்சல், இருமல் போன்று சிறு உடல் உபாதையாக இருந்தால்கூட உடனடியாக மருத்துவரைச் சந்தித்து அதற்கான சிகிச்சையைப் பெற்றால் நிம்மதியான வாழ்வை வாழலாம்.
வியாபாரிகள், மாணவர்கள், விவசாயிகள் என்று அனைத்துத் தரப்பினருக்கும் இந்த ஏழாமிடத்து சனி சில பொருளாதாரத் தடைகளை ஏற்படுத்தினாலும் உங்களின் முயற்சிக்கு ஏற்ற பலனை வழங்குவதில் எந்தவிதத் தாமதமும் இருக்காது என்பது உறுதி.
எனவே, ஏழாமிட சனியைக் குறித்து கடக ராசிக்காரர்கள் பெரிய அளவில் பயப்படத் தேவையில்லை.



தினம் ஒரு சிந்தனை

## சுவர்களை உடைத்து எறியுங்கள்!

உலகம் முழுதும் பயணம் செய்யும்போது, கசப்பான, துயரமான, வருத்தமான முகங்களுடன் பல மனிதர்கள் நடமாடுகின்றமையை நான் காண்கிறேன். உலகில் பல பிரச்சினைகள் உள்ளன, ஆனால் ஒவ்வொரு பிரச்சினை யும் ஒரு சாத்தியமாகவே இருக்கிறது. ஒவ்வொரு பிரச்சினையையும் அதன் கொம்பைப் பிடித்துப் பார்த்து பிரச்சினையை எப்படித் தீர்ப்பது என்று பார்த்தால் தான் உங்கள் புத்திசாலித்தனத்தின் தாள் திறப்பீர்கள்.
அப்போதுதான் ஒவ்வொரு மனிதரும் சுமக்கும் உள்பரிமாணங்களின் புத்தி சாலித்தனத்தை நீங்கள் தொடுவீர்கள்.
புத்திசாலித்தனத்தின் மிக ஆழமான பரிமாணம் திறந்தால், நீங்கள் படைத்தவருக்குச் சமம். இயற்கையின் விதிகளுக்குட்பட்டு செய்யக்கூடிய எல்லாவற்றையும் உங்களால் செய்யமுடியும்.
நீங்கள் பிரச்சினையை எதிர்த்து, ஏற்றுக் கொள்ள மறுத்தால், மாற்றமும் வளர்ச்சியும் சாத்தியமில்லை. முளைக்காத ஒரு விதை வீணான விதை தான். முளைவிடுவது என்றால், நீங்கள் இதற்கு முன் எதுவாக இருந்தீர்களோ, அதை அப்படியே உதிர்த்துவிட்டு புதிதாய் மாறுவது. முளைக்காத விதையாக இருப்பதில் பாதுகாப்பு இருக்கிறது, ஏனென்றால் அதைச் சுற்றி ஒரு கூடு இருக்கிறது. முளையாக துளிர்த்தால், நீங்கள் மிகவும் மென்மையாக, காயப்படக்கூடியவராக மாறி விடுவீர்கள். அப்படி மாற நீங்கள் விரும்பவில்லை என்றால், மாற்றத்தை நீங்கள் விரும்பவில்லை என்று அர்த்தம். எதில் தன்னிலை மாற்றம் நிகழவில்லையோ, அது இறந்ததற்குச் சமம். உயிருள்ள ஒன்று எப்போதும் மாறிக்கொண்டே இருக்கிறது.
சிறுபிள்ளைத்தனமான கண்ணோட்டங்களையும் கருத்துக்களையும் வைத்துக் கொண்டு, பிரபஞ்சத்தின் மீதியிடமிருந்து உங்களை மூடிக்கொள்வது, உங்கள் வாழ்க்கையை வீணாக்குவதாகும்.
பல ஜென்மங்களில் ஒருமுறையே கிடைக்கக்கூடிய கிடைப்பதற்கரிய வாய்ப்பு. தங்களைச் சுற்றியுள்ள எல்லாவற்றையும் எதிர்த்து சுவர்கள் கட்டிக்கொள்பவர்களை வெற்றி நெருக்காது. காயப்பட்டு அடிபட்டு உங்கள் அடையாளம் வெளித்தெரிய வேண்டும். பாதுகாப்பிற்காக கட்டப்படும் சுவர்களே சுயசிறைக்கான சுவர்களாகவும், இருக்கின்றன. அதனை அறிவுத் திறன் கொண்டு உடைத்தெறிவோம். மாற்றம்

## நாளை
**05.02.2020**
புதன்கிழமை

**விகாரி - தை 22**


திதி: ஏகாதசி மு.இ. 06.40வரை
நட்சத்திரம்– மிருகசீரிடம் மு.இ.11.29 வரை

**ராகுகாலம்- 12.35- 2.05 வரை**
**சுப நேரம்- 05.05- 6.35 வரை**
**எமகண்டம்- 11-05 - 12.25 வரை**


ஆஸ்திரேலியா ஓபன் டென்னிஸ் போட்டியில் வெற்றி பெற்ற பின்னர் வெற்றிக் களிப்பில் ஜோகோவிச்

## ஆஸ்திரேலியா ஓபன் டென்னிஸ்

# சம்பியனானார் ஜோகோவிச்



மெல்போர்ன் நகரில் நடைபெற்ற ஆஸ்திரேலியா ஓபன் ஆண்களுக்கான இறுதிப் போட்டியில் டொமினிக் தீமை வீழ்த்தி சம்பியனானார் ஜோகோவிச்.

ஆஸ்திரேலியா ஓபன் டென்னிஸ் மெல்போர்ன் நகரில் நடைபெற்றது. இதில் ஆண்கள் ஒற்றையர் பிரிவுக்கான இறுதிப் போட்டியில் 2ஆம் நிலை வீரரான செர்பியாவின் ஜோகோவிச் 5ஆம் நிலை வீரரான ஆஸ்திரியாவின் டொமினிக் தீம் ஆகியோர் பலப்பரீட்சை நடத்தினர்.

இதில் முதல் செற்றை 6:4 என ஜோகோவிச் கைப்பற்றினார். ஆனால் 2,3ஆம் செற்றில் சிறப்பாக விளையாடிய டொமினிக் தீம் 6:4,6:2 என எளிதாகக் கைப்பற்றினார்.

4ஆவது செற்றை கைப்பற்றினால் சம்பியனாகலாம் எனக் களமிறங்கினார் டொமினிக் தீம். ஆனால் ஜோகோவிச் அபாரமாக விளையாடி 4,5ஆவது செற்றை 6:3,6:4 எனக் கைப்பற்றினார். இதனால் ஜோகோவிச் இறுதியில் 6:4, 6:4, 2:6, 6:3, 6:4 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் பட்டம் வென்றார். இந்த வெற்றி மூலம் ஆஸ்திரேலிய ஓபன் பட்டத்தை ஜோகோவிச் 8ஆவது முறையாகக் கைப்பற்றி மீண்டும் முதலிடத்தைப் பிடித்தார்.

# ஏபி வி.க. அணி அபார வெற்றி

யாழ்ப்பாணம்,பெப்.4

கொக்குவில் வளர்மதி முன்னேற்ற கழகமும் சனசமூக நிலையமும் வருடந்தோறும் நடத்தும் அணிக்கு 30 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட விக்கிரம், ராஜன், கங்கு ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான துடுப்பாட்டத் தொடரில் ஏபி விளையாட்டுக்கழக அணி 8 இலக்குகளால் வெற்றி பெற்றது.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் காலை இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக அணியை எதிர்த்து ஏபி விளையாட்டுக்கழக அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ்ப்பாணம் பல்கலைக்கழக அணி களத்தடுப்பை தீர்மானித்தது. அதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய ஏபி விளையாட்டுக் கழக அணி 25.4 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 126 ஓட்டங்களை பெற்றது. அணி சார்பில் உத்தமன்,ராகுலன் ஆகியோர் தலா 22 ஓட்டங்களையும், சிலோஜன் 21 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்துவீச்சில் கஜன்,கெட்டியாரட்சி ஆகியோர் தலா 3 இலக்குகளையும், மதுக்க 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் பல்கலைக்கழக அணி 30 பந்துப் பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து 118 ஓட்டங்களை மட்டுமே பெற்று 8 ஓட்டங்களால் வெற்றியைத் தவற விட்டனர்.

அணி சார்பில் தனுசன் 25 ஓட்டங்களையும்,பிரசாந் 24 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.

பந்து வீச்சில யதுகுலன் 2 இலக்குகளையும், உத்தமன்,லிங்கநாதன் ஆகியோர் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர். (23)



## ஒருநாள்,டெஸ்ட் தொடரிலிருந்து ரோகித் விலகல்

தசைப் பிடிப்பு முழுமையாககுணமடையாததால் நியூசிலாந்துக்கு எதிரான ஒருநாள் மற்றும் டெஸ்ட் தொடரில் இருந்து ரோகித் சர்மா விலகியுள்ளார்.

நியூசிலாந்து -இந்தியா இடையிலான ஐந்தாவது ரி-20 போட்டி நேற்று மவுண்ட் மவுங்கானுயில் நடைபெற்றது. இந்த போட்டியில் இந்திய அணிக்கு கேப்டனாக செயல்பட்ட ரோகித் சர்மா துடுப்பெடுத்தாடிய போது தசைப் பிடிப்பால் அவதிப்பட்டார். இதனால் 60 ரன்கள் எடுத்திருந்த போது மைதானத்தில் இருந்து வெளியேறினார்.

இந்த நிலையில் தசைப் பிடிப்பு முழுமையாக குணமடையாததால் நியூசிலாந்துக்கு எதிரான ஒரு நாள் மற்றும் டெஸ்ட் தொடரில் இருந்து ரோகித் சர்மா விலகியுள்ளார்.

இரு அணிகளுக்குமிடையிலான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் தொடர் நாளை ஹாமில்டனில் ஆரம்பமாகின்றது. 2ஆவது போட்டி ஒக்லாந்தில் 8ஆம் திகதியும், 3வது போட்டி மவுண்ட் மவுங்கானுயில் 11 ஆம் திகதியும் இடம்பெறவுள்ளது.




# தாமதமான பந்து வீச்சு இந்தியாவுக்கு மீண்டும் அபராதம்

நியூசிலாந்துக்கு எதிரான ஐந்தாவது போட்டியில் குறிப்பிட்ட நேரத்துக்குள் ஓவர்களை வீசி முடிக்காத தால் இந்திய அணிக்கு 20 சதவீதம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

நியூசிலாந்து - இந்தியா இடையிலான 5ஆவதும், இறுதியுமான ரி-20 போட்டி மவுண்ட் மவுங்கானுயில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 163 ரன்கள் சேர்த்தது. பின்னர் 164 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்குடன் களம் இறங்கிய நியூசிலாந்து இறுதி நேரத்தில் தடுமாறி தோல்வியைச் சந்தித்தது.

இந்த போட்டியின்போது இந்தியா குறிப்பிட்ட நேரத்துக்குள் ஓவர்களை வீசி முடிக்கவில்லை. ஒரு ஓவர் குறைவாக வீசியது. இதனால் இந்திய அணி வீரர்களுக்கு இந்த போட்டிக்கான சம்பளத்தில் இருந்து தலா 20 சதவீதம் அபராதமாக விதித்தது ஐசிசி. ஏற்கனவே 4 ஆவது போட்டியில் இரண்டு ஓவர்கள் குறைவாக வீசியிருந்த மைக்காக 15 சதவீத அபராதம் விதிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,பெப்.4
யாழ்ப்பாண மாவட்ட தாச்சி சங்கத்தின் அனுசரணையுன் சங்கானை கிங்ஸ் விளையாட்டுக் கழக அணி மின் ஒளியில் நடத்தும் தாச்சி சுற்றுத் தொடரின் முதலாம் சுற்று ஆட்டங்கள் சங்கானை கிங்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இதில் இன்று செவ்வாய்க்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உடுவில் ஆலடிசிந்து விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கைதடி வளர்மதி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பண்டத்தரிப்பு சாந்தை விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மயிலிட்டி வானவில் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (23)

♦ ♦ ♦

யாழ்ப்பாணம்,பெப்.4
யாழ்.கால்பந்தாட்ட லீக்கினால் நடத்தப்படும் ஏ.பி.சி பிரிவு அணிகளுக்கிடையில் நடத்திவரும் லீக் சுற்றுக் கிண்ணத்துக்கான 2020 கால்பந்தாட்ட சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இதில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அரியாலை ஐக்கியம் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

மாலை 4.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மணியந்தோட்டம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உரும்பிராய் உதயசூரியன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (23)





ஆண், பெண் இருபாலருக்குமான கரப்பந்தாட்ட போட்டியில்

# தட்சணாமருதமடு ஐக்கிய வி.க தங்கப் பதக்கத்தை வென்றது

யாழ்ப்பாணம்,பெப்.4
மடு பிரதேச செயலக பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான நடப்பாண்டுக்கான விளையாட்டு போட்டி வரிசையில் ஆண்,பெண் இருபாலாருக்கான கரப்பந்தாட்டத்தில் தட்சணாமருதமடு ஐக்கிய விளையாட்டுக்கழக அணி தங்கப் பதக்கத்தை பெற்றது.

கடந்த சனிக்கிழமை தட்சணாமருதமடு ஐக்கிய விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்ஒளியில் முதன்முறையாக இடம்பெற்ற இறுதியாட்டத்தில் ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் தட்சணாமருதமடு ஐக்கிய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கல்மடு வானவில் விளையாட்டுக்கழக அணி மோதியது.

இதில் மூன்று செற்களைக் கொண்டதாக இறுதியாட்டம் இடம் பெற்றது. இதில் தட்சணாமருதமடு ஐக்கிய விளையாட்டுக் கழக அணி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது.

பெண்களுக்கான இறுதியாட்டத்தில் தட்சணாமருதமடு ஐக்கிய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பூமலர்ந்தான் பீனிக்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது. இதில் மூன்று செற்களைக் கொண்டதாக இறுதியாட்டம் இடம்பெற்றது. இதில் தட்சணாமருதமடு ஐக்கிய விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது. (23)



# தங்கம் வென்றது சித்திவிநாயகர்

யாழ்ப்பாணம்,பெப்.4
மன்னார் பிரதேச செயலக பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான நடப்பாண்டுக்கான விளையாட்டுப் போட்டி வரிசையில் பெண்களுக்கான மென்பந்து துடுப்பாட்டத் தொடரில் சித்திவிநாயகர் விளையாட்டுக்கழக அணி தங்கம் வென்றது.

இறுதியாட்டத்தில் புனித விக்டரிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சித்திவிநாயகர் விளையாட்டுக்கழக அணி மோதியது. நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற மன்னார் சித்திவிநாயகர் விளையாட்டு கழக அணி களத்தடுப்பை தெரிவு செய்தது.

முதலில் துடுபெடுத்தாடிய புனித விக்டரிஸ் விளையாட்டுக்கழக அணி 5 பந்துப் பரிமாற்றங்களில் 3 இலக்குகளை இழந்து 38 ஓட்டங்களைப் பெற்றது. அணி சார்பில் நிலோஜினி அதிகபட்சமாக 10 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் திவ்யா 2இலக்குகளையும், கட்ஷா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

39 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சித்திவிநாயகர் விளையாட்டு கழக அணி இலக்கு இழப்பின்றி வெற்றி இலக்கை அடைந்தது. அணி சார்பில் ஜஸ்லா ஆட்டமிழக்காது 27 ஓட்டங்களையும், திவ்யா ஆட்டமிழக்காது 7 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.(23)

# ஜொலிஸ்ரார் வெற்றி

யாழ்ப்பாணம்,பெப்.4
கொக்குவில் வளர்மதி முன்னேற்ற கழகமும் சனசமூக நிலையமும் வருடந்தோறும் நடத்தும் அணிக்கு 30 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட விக்கிரம், ராஜன், கங்கு ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான துடுப்பாட்டத் தொடரில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணி 4 இலக்குகளால் வெற்றி பெற்றது.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் மதியம் இடம்பெற்ற ஆட்டத்தில் திருநெல்வேலி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகஅணி மோதியது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணி களத்தடுப்பை தீர்மானித்தது. அதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய திருநெல்வேலி விளையாட்டுக்கழக அணி 29.3 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 176 ஓட்டங்களைப் பெற்றது. அணி சார்பில் அனுதரன் 49 ஓட்டங்களையும், ஹொகான் 34 ஓட்டங்களையும்,சிவராஜ் 23 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்துவீச்சில் கோபிராம் 4 இலக்குகளையும், வாமனன் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணி 28 பந்துப் பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து 177 ஓட்டங்களைப் பெற்று 4 இலக்குகளால் வெற்றி பெற்றது. அணி சார்பில் சந்தோஷ் 60 ஓட்டங்களையும்,தனுஸ்ரன்36 ஓட்டங்களையும், கிருசாந் ஆட்டமிழக்காமல் 32 ஓட்டங்களையும்,ருக்ஸ்சன் 23 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் சுயன் 2 இலக்குகளை கைப்பற்றினர். (23)



# அனைவருக்கும் மருத்துவம் பொருளாதாரம் தடையல்ல

## வழிகாட்டும் பிரேசில்



உலகிலேயே மக்களுக்கு 100 வீதமான சுகாதார வசதி செய்து தந்து முன்னிலை வகிக்கிறது பிரேசில். அனைவருக்கும் மருத்துவ வசதிகளை அளிப்பதை அடிப்படைக் கடமையாகவே பிரேசில் நாட்டின் அரசமைப்புச் சட்டத்தில் 1988ஆம் ஆண்டில் சேர்த்துவிட்டார்கள்.

'ஐக்கிய சுகாதார அமைப்பு' (எஸ்.யு.எஸ்) என்று இதற்குப் பெயர். கடந்த 30 ஆண்டுகளில் சுகாதாரத் துறையில் பிரேசில் அபார வளர்ச்சி கண்டுள்ளது. மக்களுடைய சராசரி ஆயுள் 64 ஆண்டுகளாக இருந்தது இப்போது 76 ஆண்டுகளாக உயர்ந்திருக்கிறது. பிரசவ காலத்தில் சிசுக்களின் மரணம் ஆயிரத்துக்கு 53 ஆக இருந்தது, இப்போது 14 ஆகக் குறைந்துவிட்டது. மருத்துவமனைக்கு வருவோரில் 95 வீதமானோரால் சேவையைப் பெற முடிகிறது என்று 2015ஆம் ஆண்டில் நடத்திய ஆய்வு தெரிவிக்கிறது. ஒவ்வோர் ஆண்டும் 20 லட்சம் குழந்தைகள் பிரேசில் அரசு மருத்துவமனைகளில் பிறக்கின்றன. ஒரு கோடிப் பேர் உள் நோயாளிகளாக தங்கி சிகிச்சை பெறுகின்றனர். ஆண்டுக்கு 100 கோடி முறை நோயாளிகள் மருத்துவமனைக்கு வருவதும் சிகிச்சைக்குப் பிறகு குணமடைந்து வீடு திரும்புவதும் பதிவாகியிருக்கிறது.

இன்னொரு பக்கம், பிரேசில் நாட்டிலும் பொருளாதார நெருக்கடி நிலவுகிறது. இருந்தும் நாட்டின் மொத்த உற்பத்தி மதிப்பில் 3.8 வீதம் அனைவருக்கும் சுகாதார வசதிக்குச் செலவிடப்படுகிறது. பிரிட்டனில் ஜிடிபியில் 7.9 வீதம் சுகாதாரத்துக்கு செலவிடப்படுகிறது.

பிரேசிலின் மக்கள்தொகை (21கோடி), பிரிட்டனைப் போல (6.68 கோடி) மூன்று மடங்கு என்பது குறிப்பிடத்தக்கது. பிரேசிலில் மூப்படையும் மக்கள் தொகை உயர்ந்து வருகிறது. எனவே, 2060ஆம் ஆண்டில் சுகாதாரத் துறைக்கான செலவு ஜிடிபியில் மேலும் 1.6 வீதம் உயரும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

பிரேசிலில் குடும்பநல சுகாதாரத் திட்டங்கள், சமூக சுகாதார வலையமைப்பைச் சார்ந்திருக்கிறது. பிரேசிலில் சுகாதார வசதி விரைந்து பரவ இது முக்கிய காரணம். சுகாதார சமூக முகமையாளர்கள் மாதந்தோறும் ஒவ்வொரு வீட்டுக்கும் சென்று வீட்டில் உள்ளோரின் நலனை விசாரித்து மருந்துமாத்திரைகள், மருத்துவ ஆலோசனைகள் வழங்குவர். மேல் சிகிச்சை தேவைப்பட்டால் அருகில் உள்ள மருத்துவமனைகளில் சேர்த்துவிடுவர். இந்த சமூக முகமையாளர்கள், மக்களுக்கும் சுகாதாரத் துறைக்குமான உறவைப் பராமரிக்கிறார்கள். இதனால் மக்கள் நோய்வாய்ப்படுதலும் இறப்படைதலும் குறைந்து வருகின்றன. பிரேசிலில் 2000ஆவது ஆண்டில் மக்கள் தொகையில் 4 வீதமானோர்தான் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றனர்.

# வெள்ளி ஆண்டில் காலடி பதிக்கும் IIS

வட இலங்கையிலே தனியார் உயர் கல்வித்துறையில் தனது காத்திரமான பங்களிப்பை வழங்கி வரும் IIS நிறுவனம் இன்று தனது வெள்ளி விழா ஆண்டில் தடம் பதிக்கின்றது.

பெரும் இடப் பெயர்வுடன் கூடிய யுத்த மேகங்கள் சூழ்ந்திருந்த வேளையிலே 1996ஆம் ஆண்டு மாசி மாதம் 4ஆம் திகதி வட பகுதி இளைஞர் யுவதிகளின் தகவல் தொழில்நுட்பம் மற்றும் கணினி விஞ்ஞானம் சார் அறிவுப் பசியினைத் தீர்ப்பதற்கும் உலகத்தை தன்னகத்தே கொண்டிருந்த இந்தத் தொழில்நுட்பத்தின்பால் மாணவர்களை அழைத்துச் செல்வதற்கும் IIS நிறுவனத்தின் உருவாக்கமானது ஒரு வரப்பிரசாதமாக அமைந்திருந்தது.

கணினி நிறுவனமாக தோற்றம் பெற்ற IIS பிரித்தானிய பல்கலைக்கழகம் மற்றும் கொழும்பு பல்கலைக்கழகம் போன்றவற்றின் இளமாணிக் கற்கை நெறிகளை கணினி விஞ்ஞானம் மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறைகளில் வட பகுதி மாணவர்கள் கற்றுக் கொள்ளக் கூடிய வகையில் வாய்ப்பினை வழங்கியதோடு பட்டக் கல்வியை. வழங்கக் கூடிய ஒரு தனியார் உயர்கல்வி வளாகமாகவும் பரிணாமம் பெற்றது. தொடர்ந்து பிராந்தியத்தின் தேவையை கருத்தில் கொண்டு மாணவர்களிற்கு குடிசார் பொறியியல் மற்றும் வியாபார முகாமைத்துவத் துறைகளில் பட்டக்கல்வியினை மேற்கொள்ளக் கூடிய வாய்ப்புக்களையும் உருவாக்கிக் கொடுத்தது. அதுமட்டுமல்லாது வியாபார முகாமைத்துவத்துறையிலே முதுமாணிக் கற்கை நெறியையும் மேற்கொள்ளக் கூடிய வாய்ப்பினை IIS உருவாக்கியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

IIS நிறுவனத்தால் வழங்கப்படுகின்ற உயர்தேசிய டிப்ளோமா மற்றும் முதுமாணி, இளமாணி கற்கை நெறிகள் அனைத்தும் அரசின் மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினாலும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினாலும் அங்கீகரிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

காலத்தின் தேவையறிந்து IIS நிறுவனம் உயர்கல்வியின் பால் ஆர்வமுள்ள வறிய மற்றும் போரினால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு விசேட கட்டணச் சலுகையில் வசதிகளை ஏற்படுத்தி கொடுத்து வருகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். ஆரம்பம் முதல் தனது கண்ணியமான சேவையால் மாணவர்கள் மனதை வென்றIIS நிறுவனம் இன்றும் தனக்கே மிடுக்கான தனித்துவத்துடன் வீறுநடை போடுகின்றது.

மேலும் எமது 25ஆவது வெள்ளிவிழா கொண்டாட்டங்களை முன்னிட்டு பல்வேறு சமூக நலத்திட்டங்களை இவ் ஆண்டு முழுவதும் மேற்கொள்வதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. IIS நிறுவனத்தில் 25ஆவது வெள்ளிவிழா கொண்டாட நிகழ்வுகள் இன்று சமய வழிபாடுகளோடு ஆரம்பிக்கப்பட்டு இந்நிகழ்வின் ஆரம்பக் கொண்டாட்டம் சிவன் பண்ணை வீதியில் அமைந்துள்ள வளாகத்தில் எதிர்வரும் 25ஆம் திகதி விமர்சையாக இடம்பெறவுள்ளது.




# ஸ்ரீ மஹா ருத்ர யாகம்



ஸ்ரீ மகா உருத்திர யாகமானது ஏனைய யாகங்களை விடச் சிறந்ததாகும். இராமாயணக் காலத்திலும் மகா பாரதக் காலத்திலும் சரி மன்னர்களால் பல யாகங்கள் செய்யப்பட்டு சிறந்த பலனை அனுபவித்திருக்கின்றார்கள். கலி யுகத்தில் மக்களால் யாகங்கள் செய்விக்கப்பட்டு வருகின்றன. மகான்கள் பலர் மேற்படி யாகத்தைச் செய்து அதன் பலனை சர்வ உலகத்திற்கும் கிடைக்கச் செய்திருக்கின்றார்கள். இவ் உலகத்திலுள்ள உயிர்கள் உய்யும் பொருட்டு உருத்திர தாண்டவம் நிகழ்த்தும் இறைவனுக்கு நாம் இவ் யாகத்தைச் செய்வதன் மூலம் மகிழ்ச்சியடையச் செய்கின்றோம்.

ஸ்ரீ ருத்ரம் 'நமசிவாய' ஐந்தெழுத்து அடக்கிய கருவூலமாகத் திகழ்தலின் ருத்ரா மந்திரத்தைக் கேட்கும் பாக்கியம் பல கோடி வருடங்களுக்குப் பலனை அளிக்கவல்லது என நடராஜ சதகம் போன்ற நூல்களில் கூறப்பட்டுள்ளது. மஹா ருத்ரத்தைப் பற்றி யஜுர் வேதத்தில் ஒரு மனிதன் தன்னுடைய வாழ்நாளில் தேவைகள் என எதை எதை நினைக்கிறானோ அவை அனைத்தையும் கொடுக்கவல்லது. மேலும் இந்த மஹா ருத்ரத்தில் பங்கு கொண்டோர் அனைவரும் மறுபிறவி எனும் பிணியிலிருந்து நீங்கி மோட்சத்தில் ஒப்பனை சிவபதவியை அடைவார்கள் எனக் கூறப்படுவதிலிருந்து இந்த மஹா ருத்ர யாகத்தின் சிறப்பை அறிந்து கொள்ளலாம்.

தேவ சிவாகமங்களையும் திருமுறைகளையும் அருளிய சிவபெருமானை வேதசிவாகம திருமுறைகளாலும் பஜனை வழிபாட்டாலும் மகிழச்செய்து சிவபெருமானுக்கு யாகங்களில் தலையாயதாகவும் சிறப்பு வாய்ந்ததாகவும் கருதப்படுகின்ற 1331 ஸ்ரீ ருத்ர மந்திர ஆவர்த்தி ஜெபமும் தசாம்சமாக 121 ஆவர்த்தி ஹோமங்களையும் உள்ளடக்கிய ஸ்ரீ மஹா ருத்ர யாகம் உலகில் காணப்படுகின்ற அனைத்து ஜீவராசிகளின் ஷேமத்திற்காகவும் உலக நன்மைக்காகவும்ஈழவழநாட்டின் சுபீட்சத்திற்காகவும் வருங்காலத்தில் ஏற்படவுள்ள இயற்கைச் சீற்றங்களிலிருந்து மக்களைப் பாதுகாக்க வேண்டியும் அனைத்து நோய் நொடிகளிலிருந்து மக்கள் விடுபடவும், வருங்காலத்தில் எந்த நோய்களும் இந்தப் பூமியைத் தாக்கா வண்ணம் இருக்கவும், இலங்கைத் திருநாடு மீண்டும் சிவபூமியாகவும், ஸ்வர்ண பூமியாகத் திகழவும் எல்லா லோகங்களும் சுபீட்சமாக இருக்கவும் வேண்டி இவங்கை வடபால் யாழ்ப்பாணம், நல்லூரில் அமைந்துள்ள அருள்மிகு நல்லூர் சிவன் தேவஸ்தானத்தில் விகாரி வருடம் தைத் திங்கள் 24 ஆம் நாள் (07.02.2020) வெள்ளிக்கிழமை காலை தொடக்கம் தைத்திங்கள் 27 ஆம் நாள் (10.02.2020) திங்கட்கிழமை மதியம் வரை தொடர்ந்து நான்கு நாள்கள் ஆறு காலங்களாக மிகச் சிறப்பாக வேத சிவாகம முறைப்படி ஸ்ரீ மகா ருத்ர யாகம் நடைபெறவுள்ளது.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## இறங்கிய காற்றும் ஏறிய இனவாதமும்

தமிழ் மக்களின் அகராதியில் பிடிக்காத பெயர்களில் ஒன்று 'விமல் வீரவன்ஸ'.

நாய்க்கு எங்கு கல்லெறி விழுந்தாலும், உடனே காலைத் தூக்கிக் கொண்டு ஓடுவதைப் போல, நாட்டில் என்ன பிரச்சினை நடந்தாலும் தனக்கு மலச்சிக்கல் வந்தாலும் கூட தமிழர்கள் மீதும், புலிகள் மீதும் பழிபோட்டே தன் அரசியல்வாழ்வை உச்சத்துக்குக் கொண்டு சென்ற கெட்டிக்காரன்.

இடதுசாரிச் சிந்தனை கொண்ட ஜே.வி.பி கட்சியின் அடையாளமாக ஒருகாலத்தில் கொண்டாடப்பட்டவர் இந்த வீரவன்ஸ. வர்க்க வேறுபாட்டை இல்லாதாக்கி, சகல மக்களுக்கும் சமத்துவமான வாழ்வை ஏற்படுத்துவதையே இலக்காகக் கொண்டதாகச் சொல்லப்படும், ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளராக இருந்த விமல் வீரவன்ஸ எப்போதும் அந்தக் கொள்கைக்கு எதிரானவராகவே நடந்து கொண்டார். பாம்புக்கு பல்லில் மட்டும் தான் விஷம். ஆனால் விமலுக்கோ உடம்பு முழுதும் இனவாத விஷம். எப்போது வாயைத்திறந்தாலும் தமிழர்களுக்கு எதிரான கருத்துக்களை கொட்டித் தீர்ப்பதிலேயே விமல் வீரவன்ஸ தன் இலட்சியமாகக் கொண்டிருந்தார். சிங்கள மக்களின் வர்க்க வேறுபாட்டுப் பிரச்சினைகளைத் தீர்ப்பதை நோக்கமாகக் கொண்டு உருவாகிய கட்சியின் பிரசாரச் செயலாளரான விமல் , அந்த மக்களை அடியோடு மறந்து போனவராக, ஒரு வலதுசாரித்துவ இனவாதியாகவே முற்றுமுழுதாக மாறியிருந்தார்.

இந்த இனவாதியென்ற பாத்திரம் விமல் 'அச்சொட்டாகப்' பொருந்திப் போனதால், தீவிர சிங்களப் பெருந்தேசியவாதிகள் மத்தியில் விமல் வீரவன்ஸவின் புகழ் பெருகியது. கவர்ச்சிகரமான பேச்சாற்றலும் வாய்க்கப்பெற்றதால், விமலுக்கு புகழோடு புலம்பெயர் சிங்களப் பேரினவாதிகளின் பணமும் கொட்டத் தொடங்கியது. ஏழைகளுக்காகப் போராடக் கிளம்பிய அமைப்பின் பிரசாரச் செயலர், 2004 இல்,(அப்போதெல்லாம் சாதாரண மக்களிடம் கைத்தொலைபேசியே இல்லாமல் இருந்த காலம்) இலங்கையின் அப்போதைய பிரதமர் மஹிந்தவிடம் ( இப்போதும் அவர்தான்) கூட இல்லாத அதிநவீன விலையுயர்ந்த கைத்தொலைபேசிகளை வைத்திருந்ததை நாடே அறியும். அப்படிப் பணமழையில் தொடர்ந்து குளித்துக் கொண்டிருப்பதற்காகவே அவர், தன் இடதுசாரி என்ற வேடத்தைக் களைந்து பகிரங்கமாகவே தனக்குள் வலதுசாரிச் சித்தாந்தத்தின் வழியில், குட்டிப் பூர்ஷூவாவாக மாறி, மஹிந்தவின் நிழலாக நடக்கத் தொடங்கினார்.

விமல் வீரவன்ஸவின் இனவாதக் கருத்துக்கள், ஏனையோரைப் போல இல்லாத ஒன்றைச் சொல்வதோடு, கடுமையான உளத்தாக்கத்தை உண்டுபண்ணி ஆத்திரத்தின் எல்லையை மீறச் செய்யக்கூடியவை. எதைச் சொன்னால் தமிழர்கள் கொதிப்பார்கள் என்பது விமலுக்கு அத்துப்படி.

அப்படி ஆத்திரமூட்டியதன் விளைவை, விமல் சுனாமி அழிவுகளைப் பார்க்க யாழ்ப்பாணத்துக்கு 2004 இல் வந்தபோது நேரில் கண்டு அனுபவித்தார். சுனாமியில் இருந்து தப்பித்து, பாடசாலைகளில் தஞ்சமடைந்திருந்த மக்களைப் பார்வையிட மஹிந்தவும்,விமலும் வந்திருந்தனர். வடமராட்சியில் உள்ள ஒரு நலன்புரி நிலையத்துக்கும் சென்றனர். ஆனால் அங்கு ஏற்கனவே விமலின் இனவாதப் பேச்சுக்களைக் கேட்டு, கொதித்துப் போயிருந்த மக்கள், விளக்குமாறுகளைக் கையில் எடுத்துக் கொண்டு, சாத்துப்படி கொடுக்கத் தயாராகி விட்டார்கள். உடனேயே பின்வாங்கிய மஹிந்த மற்றும் விமல் குழு , தப்பினோம் பிழைத்தோம் என்று ஓடாத குறையாக , நழுவினார்கள். அந்த விளக்குமாற்று வரவேற்புக்குப் பின்னர் அடிபட்ட நாய் போல விமல் வீரவன்ஸவின் இனவாதக் குரைப்பும் இன்னும் கூடியது. அப்படியான ஒரு குரைப்பே " காணாமல் ஆக்கப்பட்டோரை மண்ணுக்குள் தேடுங்கள்' என்ற விமலின் விஷச் சொற்கள்.

தமிழ் மக்களிடையே மிகவும் மென்னுணர்வு மிக்க விடயமாகக் கையாளப்படும் காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்தைக் கையில் எடுத்து, பழையபடி தமிழர்களை வார்த்தைகளால் போட்டுத் தாக்கினால், வரப்போகும் நாடாளுமன்றத் தேர்தலில் , நாடாளுமன்றக் கதிரையை உறுதிப்படுத்திக் கொள்ளமுடியும் என்பது விமலுக்குத் தெரியும். அதனால் தான் சிங்கள மக்கள் மத்தியில் அண்மைக்காலமாக இறங்கிப் போயிருந்த தன்னுடைய செல்வாக்குக் காற்றை , மீண்டும் காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினையைக் கையில் எடுத்து ஏற்றுவதற்கு முயன்றிருக்கிறார் விமல். காணாமல் ஆக்கப்பட்டோரின் வலியும், வேதனையும், கண்ணீரும் இன்னும் பெருந்தேசியவாதிகளின் கல்நெஞ்சை இன்னும் கரைக்கவில்லை என்பதையும், தொடர்ந்தும் தங்கள் இனவாதப் பாதையிலேயே அவர்கள் பயணிக்கப்போகிறார்கள் என்பதையுமே விமலின் இந்தக் கருத்துக்கள் துலாம்பரமாக்கியுள்ளன.



# கடந்த வருடம் 189 இதுவரை 27 பேர்

### டெங்குக்கு இலக்கு



**முல்லைத்தீவு, பெப். 4**
**முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த வருடம் 189 பேர் டெங்கு காய்ச்சலுக்கு உள்ளாகி சிகிச்சை பெற்றுள்ளனர் என்று முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் எஸ்.சுகந்தன் தெரிவித்துள்ளார்.**

புதுக்குடியிருப்பில் 42 பேரும், முல்லைத்தீவு, முள்ளியவளை பகுதிகளில் 79 பேரும், மல்லாவியில் 17 பேரும், பாண்டடியன்குளம் பகுதியில் 9பேரும், வெலிஓயாவில் 14 பேரும், ஒட்டுசுட்டானில் 28 பேரும் டெங்குத் தொற்றுக்கு இலக்காகியுள்ளனர்.

முல்லைத்தீவு, முள்ளியவளை பகுதிகளிலேயே அதிகளவானோர் டெங்கு காய்ச்சலுக்கு இலக்காகி வருகின்றனர் என்றும் தெரிவித்தார்.

இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் மாவட்டத்தில் 27 பேர் டெங்கு காய்ச்சலுக்குச் சிகிச்சை பெற்றுள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (த-19)



## தலைமைக் காரியாலயம் முல்லைத்தீவில் திறப்பு

முல்லைத்தீவு,பெப்.4
ஜீவ ஊற்று அன்பின் கரம் நிறுவனத்தின் தலைமைக் காரியாலயம் முல்லைத்தீவு செல்வபுரம் பகுதியில் கடந்த சனிக்கிழமை உத்தியோக பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது. "எம் உறவுகளை வாழ வைப்போம்" என்ற தொனிப் பொருளில் கடந்த 6 ஆண்டுகளாக இந் நிறுவனம் தாயக மண்ணில் மக்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்ற பல உதவி திட்டங்களை நிறைவேற்றி வந்துள்ளது. இந்த நிலையில் மக்களின் நலன் கருதி இந்தக் காரியாலயம் திறந்துவைக்கப்பட்டது. இனி வரும் நாள்களில் மக்கள் நேரடியாக அலுவலகத்துக்குச் சென்று தமது கோரிக்கைகளை முன்வைக்க முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-222)

## வெடிக்காத கைக்குண்டு மீட்பு

வவுனியா,பெப். 4
வவுனியா குடாகச்சக்கொடி பகுதியில் வெடிக்காத நிலையில் நேற்றுமுன்தினம் முற்பகல் கைக்குண்டு கண்டு பிடிக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அங்கு வீட்டுத்திட்டப் பணிகள் இடம்பெற்றுவருகின்றன. டோசர் மூலமாக அந்தப் பகுதியைத் துப்புரவுசெய்து கொண்டிருக்கும்போது கைக்குண்டு அவதானிக்கப்பட்டது. வவுனியாப் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. நீதிமன்ற உத்தரவுபெற்று விசேட அதிரடிப் படையினரின் உதவியுடன் குண்டு செயலிழக்கப்பட்டது. (த-110)

# நிறைகுடச் சின்னமே தேவை!

### ஒற்றைக்காலில் நிற்கிறது ஈ.பி.ஆர்.எல்.எவ்.

வவுனியா, பெப்.4
"ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் பெயரையும் சின்னத்தையும் மாற்ற வேண்டும் என்று கட்சியின் மத்திய குழுவே தீர்மானித்தது .எமக்கு நிறைகுடம் சின்னம் தேவையென்பதை கொடுத்திருக்கிறோம். ஆனால் அது தொடர்பான இறுதி முடிவு தேர்தல் திணைக்களம் தான் எடுக்கும்" என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

வவுனியாவில் நடைபெற்ற சிறந்த விவசாயிகள், பண்ணையாளர்கள் கௌரவிப்பு நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த நாடாளுமன்ற தேர்தலிலே எங்களுடைய கட்சியான ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, சி.வி.விக்னேஸ்வரனின் கட்சியான தமிழ் மக்கள் கூட்டணி, சிறிகாந்தா ,சிவாஜிலிங்கம் தலைமையிலான தமிழ் தேசியக் கட்சி, அனந்தி தலைமையிலான தமிழர் சுயாட்சி கழகம் உட்பட இன்னும் பல கட்சிகளும் மத தலைவர்கள், தமிழ் மக்கள் பேரவை, வடக்கு கிழக்கிலே இருக்கக்கூடிய நூற்றுக்கு மேற்பட்ட சிவில் அமைப்புகள் அனைவரும் இணைந்து ஒரு புதிய சின்னத்தில் புதிய கூட்டமைப்பாக எதிர் வரும் தேர்தலில் நாங்கள் போட்டியிடத் தீர்மானித்திருக்கின்றோம்.

எங்களுடைய கட்சியினுடைய பெயர், சின்னம் மாற்றப்பட வேண்டுமென்று எமது மத்திய குழு அரசியல் உயர்பீடம் உட்பட எமக்குள் நீண்ட காலமாக விவாதித்து வருகின்றோம். நாம் தேர்தலில் போட்டியிடுவதற்காக எங்கள் கட்சியின் பெயரையும், கட்சியின் சின்னத்தையும் மாற்ற வேண்டும் என்பது மத்திய குழுவின் தீர்மானம்.

அந்த தீர்மானத்தின்படி எங்களுடைய பெயரை மாற்றம் செய்வதற்காக கொடுத்திருக்கிறோம். எமக்கு நிறைகுடம் சின்னம் தேவையென்பதை கொடுத்திருக்கிறோம்.

ஆனால் அது தொடர்பான இறுதி முடிவு தேர்தல் திணைக்களம் தான் எடுக்கும்- என்றார். (ஐ-110)

# ஆட்டுவிக்கும் தொலைக்காட்சியும் அடங்கிப்போகும் சிறுவர்களும்



பி. ஸ்ரீவித்தியா
2ஆம் வருட மாணவி,
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்

"டேய் தம்பி! பட்டம் ஏற்றுவம் வாரியா?.....
டேஓம் அண்ணா, நான் சுரேஸையும் கூட்டிற்று வாரன்'

இந்தப் பேச்சுக்களை நான் கேட்டு பல வருடங்கள் ஆகிவிட்டன. இன்றைய காலகட்டத்தில் இவ்வாறான உரையாடல்கள் அரிதினும் அரிதாகிவிட்டன. ஏன் இந்த மாற்றம்? இன்றைய காலத்தில் சிறுவர்கள் குறைந்துவிட்டார்களா? இல்லை, அவர்கள் விளையாடுவதற்கு இடங்கள் குறைந்துவிட்டனவா? இவை எதுவுமில்லை. முன்னைய காலத்தினை விட சிறுவர்கள் எண்ணிக்கை அதிகரித்துள்ளதே தவிர குறையவில்லை. எனினும் இந்தப் பின்னடைவுக்கு முக்கிய காரணங்களில் ஒன்று அலைபேசி. அடுத்ததாகத் 'தொலைக் காட்சி' எனும் மாயவலை. சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரையும் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் ஓர் ஊடகமே தொலைக்காட்சி. இன்று எத்தனை தொழிநுட்பம் வளர்ச்சி கண்டு, இணைய வசதிகள் பல்கிப் பெருகி இருந்தாலும் சிறுவர்களின் நண்பனாகவும் அவர்களால் தற்காலத்தில் இலகுவாக பெறுகை செய்யக்கூடியதாகவும் இருப்பது தொலைக்காட்சியே!. இது காட்சி ஊடகமாக இருப்பதனால் சிறுவர்களை இலகுவில் கவரக்கூடிய தன்மை இதற்குக் காணப்படுகிறது. சிறுவர்கள் எனப்படுவோர் 5 முதல் 12 வயதிற்கு உட்பட்டவர்கள் என்ற பொதுவான வரைவிலக்கணம் காணப்படுகிறது. இவர்களின் பொதுவான தன்மையாக இருப்பது எதனையும் இலகுவாக உள்வாங்கி அதைப்போல செய்வதே ஆகும். இதனால் தொலைக்காட்சி இவர்களிடத்தில் ஏற்படுத்தும் தாக்கமும் ஏனையவர்களிடம் ஒப்பிடும்பொழுது அதிகமானதாக இருக்கிறது. சிறு வர்களின் வாழ்க்கையிலும், வாழ்க்கை முறையிலும் அளப்பெரும் மாற்றத்தை இந்தத் தொலைக்காட்சியே ஏற்படுத்தியுள்ளது, ஏற்படுத்துகின்றது என்றால் அது மிகையல்ல.

**அதிர்ச்சிதரும் தரவு**

அமெரிக்காவில் 36 ஆயிரம் பள்ளிகளில் நடத்தப்பட்ட ஆய்வின்படி சராசரியாக ஒரு சிறுவன் 11 வயதை அடைவதற்குள் 10 ஆயிரம் வன்முறைச் சம்பவங்களை பார்க்கிறான் எனக் கண்டறியப்பட்டுள்ளது. இதன் மூலம் தொலைக் காட்சி சிறுவர்களின் வாழ்வில் எவ்வளவு தூரம் முக்கிய இடத்தினைப் பெற்றுள்ளது என்பதை ஊகிக்க முடிகிறது.

தொலைக்காட்சி ஊடகமானது பல்வேறுபட்ட நன்மையான விடயங்களினையும் சிறுவர்கள் மத்தியில் விதைக்கிறது. சிறுவர்களின் வளர்ச்சிக்கு வழிகோலும் காட்சி ஊடகமாகக் காணப்படும் தொலைக்காட்சி அதனை யார், எதற்காக இயக்குகிறார்கள் என்பதனைப் பொறுத்தே அதன் தன்மையும் அமைகிறது. தொலைக்காட்சி முற்றுமுழுதாக சிறுவர்களுக்கு தீமையான விடயங்களை மாத்திரமே புகுத்தவில்லை. மாறாக, அவர்களுக்கு தொழிநுட்பம் சார்ந்த அறிவினை வழங்குகிறது, பல போட்டி நிகழ்ச்சிகளை ஒளிபரப்புவதன் மூலம் அதனை பெறுகை செய்யும் சிறுவர்களின் மனநிலையிலும் நம்பிக்கையினை ஊட்டி அவர்களின் திறமையினை வளர்க்கிறது, அறிவுசார் நிகழ்ச்சிகளை ஒளிபரப்புவதன் மூலம் அவர்களின் கல்விசார் திறமையினை மேம்படுத்துகிறது. சிறுவர்களின் படைப்பாற்றலை மேம்படுத்துவதிலும் தொலைக் காட்சி முக்கிய பங்கு வகிக்கிறது. புதியவற்றினை அறிய வேண்டும் என்ற ஆர்வம் உருவாக்கப்படுகின்றது, அத்துடன் உணர்வுகளுக்கும், உறவுகளுக்கும் மதிப்பளிக்க கற்றுக் கொள்கின்றனர். இவ்வாறு பல நன்மைகளை ஊட்டும் தொலைக்காட்சி தனியே நன்மையினை மாத்திரம் தருகிறதா என்றால்,. அதற்கான ஒரே பதில் 'இல்லை' என்றே அமையும்.

தொலைக்காட்சி சிறுவர்களின் நண்பனான இருப்பதால் அது ஏற்படுத்தும் தாக்கமும் 'நண்பன் ஒருவன் செய்யும் துரோகத்தினை ஒத்ததாகவே' இருக்கின்றது. தொலைக்காட்சியில் சித்திரிக்கப்படும் சம்பவங்கள் பெரும்பாலும் வன்முறை சார்ந்த அம்சங்களாகவே இருக்கின்றமையால் சிறுவர்களின் நடத்தையிலும் அதன் பிரதிபலிப்புக் காணப்படுகிறது. சிறுவர்கள் அளவுக்கதிகமாக அதை நுகரும் போது அவர்கள் மிகைப் பார்வையாளர்களாக மாற்றமடைந்து அதில் காட்டப்படும் கதாபாத்திரங்களாகவே மாற முற்படுவதுடன் அதற்கு அடிமையாகும் தன்மையும் காணப்படுகிறது. இதற்கு உதாரணமாக 2006ஆம் ஆண்டு மதுரையைச் சேர்ந்த தியாகேஷ் என்ற சிறுவன் பவர் ரேஞ்சர்ஸ்களை நினைத்துக் கொண்டு தீயோடு விளையாடி உயிரை மாய்த்துக் கொண்டான். அத்துடன் சிறுவர்கள் விளம்பரங்களை விரும்பிப் பார்ப்பதனால் அதில் காட்டப்படும் கற்பனை உலகத்தினை நிஜம் என நம்பி அதனுள் வாழ தலைப்படுகின்றனர், இவற்றினை விட மிகப் பெரிய பிரச்சினையாகக் காணப்படுவது சிறுவர்களிடையே தாழ்வு மனப்பான்மையை உருவாக்கும் ஊடகமாக இது அமைந்துள்ளது. அதாவது அழகு என்பது வெண்மையினை மாத்திரமே குறிக்கும் என்ற தோற்றப்பாடும், வசதி படைத்த சிறுவர்களாலேயே எதையும் அடைய முடியும் என்ற எண்ணமும் உருவாக்கப்பட்டு அதனை நுகரும் சிறுவர்களிடத்திலும் அதுவே உண்மையென நம்ப வைக்கப்படுகின்றது. இவற்றினை விட உடலியல் சார் பிரச்சினைகள், போதைப்பொருளுக்கு அடிமையாகுதல், பாலியல் சார்ந்த குழப்பம் போன்ற பல தீமையான விடயங்களையும் வழங்கத் தவறவில்லை.

**தொலைக்காட்சி ஊடகத்தைத் தனியே ஓர் ஊடகமான சிறுவர்கள் பயன்படுத்துவது அவசியமாகும். இதற் குப் பெற்றோர்கள், சிறுவர்களின் நடத்தையிலும் கவனம் செலுத்துவதோடு அவர்களுடன் நேரத்தினைச் செலவிட்டு தனியே ஒரு அறைக்குள் அடைத்து விடாமல் இயற்கையோடு விளையாடி சமூகத்தோடு ஒன்றிணைந்து நடக்கக் கற்றுக்கொடுக்க வேண்டும்.**



**ஏன்? எதற்கு? எப்படி?**

பலதரப்பட்டவர்களுக்கு நன்மையாக இருக்க வேண்டிய தொலைக்காட்சி ஏன் இவ்வாறு தீமையான 'விடயங்களையும் வழங்குகின்றது என்பதனை யாருமே எண்ணுவதில்லை. ஓர் ஊடகத்தினுள் சென்று அதன் உள்ளடக்கங்கள், அதன் உரிமைத்துவம் என்பவற்றை கட்டுடைத்துப் பார்ப்பதன் மூலமே அதற்கான காரணங்களை அறிய முடியும். தொலைக்காட்சி ஏன் சிறுவர்களைக் குறி வைக்கின்றது? எந்தவொரு நிகழ்ச்சிகள், விளம்பரங்கள், தொடர்கள் போன்ற அனைத்திலுமே சிறுவர்களின் பங்களிப்பு தொலைக் காட்சியைப் பொறுத்தவரை இன்றியமையாததாக உள்ளது.

தொலைக்காட்சி பல அனுகூலங்களை இதன் மூலம் பெறுகின்றது. அதில் மிக முக்கியமானது அவர்களின் வர்த்தக நோக்கம். இதனை விடவும் சிறுவர்களிடம் ஒரு விடயத்தினை புகுத்துவது இலகுவாகக் காணப்படுவதனாலும் தொலைக்காட்சி பற்றிய புரிதல் குறைவாகக் காணப்படுவதனாலும் அதன் மீது சிறுவர்கள் காட்டும் நம்பிக்கை ஒப்பீட்டளவில் அதிகமாக உள்ளது. சிறுவர்கள் மத்தியில் தமது கருத்துக்களை இலகுவாகப் பரப்ப முடிகின்றது, விளம்பரங்களுக்கான கேள்வி அதிகரிக்கின்றது, பார்வையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கின்றது போன்ற பல நன்மைகளை தன்னுள் வைத்தே தொலைக்காட்சி தனது குறிக்கோளாக சிறுவர்களையும் கொண்டுள்ளது. எனவே தொலைக்காட்சி ஊடகத்தினை தனியே ஓர் ஊடகமாக சிறுவர்கள் பயன்படுத்துவது அவசியமாகும். இதற்கு பெற்றோர்கள் சிறுவர்களின் நடத்தையிலும் கவனம் செலுத்துவதோடு அவர்களுடன் நேரத்தை செலவிட்டு தனியே ஓர் அறைக்குள் அடைத்துவிடாமல் இயற்கையோடு விளையாடி சமூகத்தோடு ஒன்றிணைந்து நடக்கக் கற்றுக்கொடுக்க வேண்டும். இன்றைய அவ சர உலகில் வருங்கால விதைகளாகிய சிறுவர்களைப் பாதுகாப்பது நம் ஒவ்வொருவரினதும் தலையாய கடமையாகும்.

### தமிழ்த் தேசியகீதம் புறக்கணிப்பு:

# பெரும்பான்மையினரை திருப்திப்படுத்தும் செயல்

### ரிஷாத் கொந்தளிப்பு

கொழும்பு, பெப். 4

சுதந்திர தினத்தன்று தமிழ் மொழியில் தேசிய கீதம் இசைக்கப்போவதில்லை என்பது பெரும்பான்மை இனத்தை திருப்திப்படுத் தும் செயற்பாடு என முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார். இவ்வாறு செய்பவர்கள், தமிழ் பேசும் சமூகத்துக்கும் தமிழுக்கும் எவ்வாறு அந்தஸ்தை வழங்கப் போகிறார்கள் என அவர் கேள்வியெழுப்பினார்.

மன்னார், முசலி பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற மக்கள் கலந்துரையாடலில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.




அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசமைப்பில் தமிழும் சிங்களமும் அரசகரும மொழியாகும் என ஏற்றுக்கொள்ளப்பட்ட போதும், இந்த அரசாங்கம் தமிழை இரண்டாந்தர மொழியாக, வேண்டாவெறுப்புள்ள மொழியாக நோக்குகின்றது. இதனால் காலாகாலமாக இருந்துவந்த சம்பிரதாயங்களையும் நடைமுறைகளையும் தடைசெய்து, தமிழ் மொழியை இருட்டடிப்புச் செய்ததன் உள்நோக்கம்தான் என்ன?

ஒவ்வொரு காரியத்திலும் பேரினவாதிகளைத் திருப்திப்படுத்துவதன் மூலம், பொதுத் தேர்தலிலும் வாக்குகளை அதிகரிக்கச் செய்து தமது கட்சிக்கான பிரதிநிதிகளை அதிகரிக்கவே திட்டம் தீட்டுகின்றார்கள். சிறுபான்மை சமூகத்தின் பிரதிநிதித்துவத்தைக் குறைப்பதும் அதன் மூலம் அந்த மக்கள் சார்ந்த பிரதேசங்களில் பெரும்பான்மைக் கட்சிகளுக்குச் சார்பான பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கும் நோக்கிலுமே தரகர்களையும் களமிறக்கியுள்ளனர்.

சிறுபான்மை சமூகத்தை அடக்கி ஒடுக்க வேண்டுமென்ற அவர்களின் நிகழ்ச்சி நிரலை நாம் தெளிவாகக் கண்டோம்.

எனவே, அற்பசொற்பசலுகைகளுக்காகவும் இலா பங்களுக்காகவும் மக்கள் ஏமாந்துவிட வேண்டாம்' - என்றார். (ம)



## பழிவாங்கல்கள் இல்லாத நாடொன்றே வேண்டும்

### சுதந்திர தின வாழ்த்துச் செய்தியில் சஜித்

கொழும்பு.பெப்.4

அரசியல் பழிவாங்கல்கள் இல்லாத, பொருளாதார, அரசியல், கலாசார மற்றும் சிவில் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கான, உலகில் கௌரவத்துடன் தலை நிமிர்ந்து நிற்கக் கூடிய நாடொன்றை உருவாக்குவதற்கான போராட்டம் இன்னும் முடிவடையவில்லை. அந்த நோக்கங்கள் நிறைவேறிய சுதந்திர தினமொன்று முழு நாட்டுக்கும் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சுதந்திர தின வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார். அவரது வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சகல பேதங்களையும் மறந்து எல்லோரும் ஒன்றிணைந்து கூட்டான போராட்டத்தின் பெறுபேறாக 1948 ஆம் ஆண்டில் இலங்கை காலனித்துவ ஆட்சியின் கோரப் பிடியிலிருந்து சுதந்திரம் பெற்றது. 72 வருடங்களுக்கு முன்னர் நாம் பெற்ற அந்த சுதந்திரத்தை இன்று பெருமித்துடன் கொண்டாடுவோம்.

சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக பலதரப்பட்ட போராட்டங்களின் போது உயிர்த்தியாகம் செய்த போராளிகளை இந்தச் சந்தர்ப்பத்தில் மிகவும் பெருமையுடனும் கௌரவத்துடனும் நினைவு கூறுதல் வேண்டும்.

அவர்களுடைய உயிர் மூச்சு இந்த நாட்டின் வரலாற்றின் அதி உன்னத குறிப்புக்களாகும். இனம், மதம், குலம், சாதி போன்ற பேதங்களின்றி ஒன்றாக இணைந்து இந்த நாட்டின் சுதந்திரத்துக்காக அர்ப்பணித்துள்ள அனைவருக்கும் தேசத்தின் கௌரவம் கிடைக்கப் பெறுதல் வேண்டும்.

வரலாறு எமக்குக் கற்றுத்தருகின்ற பாடமாக இருப்பது ஒற்றுமையுடன் முன்னோக்கி பயணிப்பதையேயாகும். எனினும், நாடு என்ற வகையில் பெற்றுக் கொண்ட வெற்றிகள், அடைந்த பின்னடைவுகள், தோல்விகள் போன்றவற்றைத் தாண்டி கடந்து சென்ற 72 வருடங்களின் போது எமக்கு பல்வேறுபட்ட அனுபவங்களை வழங்குகின்றன.

முற்போக்கு சிந்தனையோடு அபிமானமிகு வரலாறொன்றைக் கொண்ட நாடொன்றாக உலகுக்கு முன்மாதிரியொன்றை வழங்கியுள்ள இலங்கையானது தற்பொழுது அரசியல் சந்தர்ப்பவாதத்துக்கு இரையாக்கப்பட்ட பலிபீடமாக உருவெடுத்துள்ளது. அவ்வாறு நோக்கும் போது, காலனித்துவ ஆட்சியிலிருந்து சுதந்திரமடைந்தமையைத் தவிர இந்த நாட்டு மக்கள் அடைந்து கொள்ள இன்னும் அநேக விடயங்கள் உள்ளன. - என்றுள்ளது. (கு)

## மெய்வன்மைப் போட்டி

கொடிகாமம்.பெப். 4

அல்லாரை அ.த.வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் ஐ.தேவஈஸ்வரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், சிறப்பு விருந்தினராக சமயபாட ஆசிரிய ஆலோசகர் வே.கமலேஸ்வரன், கௌரவ விருந்தினர்களாக ஓய்வு நிலை அதிபர்களான செல்வி.திரவியநாயகம் வேலுப்பிள்ளை, திருமதி கமலாசினி யோகநாதன் மற்றும் ஓய்வு நிலை ஆசிரியை திருமதி மங்கையர்க்கரசி இராசேந்திரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ்கள் மற்றும் பரிசில்கள் என்பன வழங்கப்பட்டன. (ஐ-159)

## அரச அலுவலர்களுக்கு ஆக்கத்திறன் போட்டிகள்

அரச அலுவலர்களுக்கிடையில் கலை மற்றும் ஆக்கத்திறன்களை வளர்த்தெடுப்பதற்கு யாழ்ப்பாண மாவட்ட கலை , கலாசார பேரவை நடவடிக்கை எடுத்துள்ளது.

மேற்படி முயற்சியின் ஒரு கட்டமாக யாழ்ப்பாண மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் அரச அலுவலர்களுக்கு இடையில் கலை, ஆக்கத்திறன் போட்டிகளை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன்படி தற்போது மேற்படி கலை ஆக்கத்திறன்போட்டிக்கானவிண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப் போட்டிகளில் பங்குகொள்ள விரும்பும் அலுவலர்கள் தமது செயலகத்தில் இயங்கும் கலாசாரப் பிரிவில்விண்ணப்பப்படிவங்களைப் பெற்று இம்மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கு மாறுஅறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-121)

## நாயால் விபத்து; ஐவர் காயம்

ஓட்டோவுக்கு குறுக்கே நாய் ஓடியதால் அதனுடன் மோதுண்டு ஓட்டோ தடம்புரண்டதில் ஆறு மாதக் குழந்தை உட்பட ஐவர் காயமடைந்தனர். சம்பவம் மீசாலை புத்தூர் வீதியில் வேம்பிராய் சந்திக்கு அண்மையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

கண்டி வீதி கொடிகாமத்தைச் சேர்ந்த நவரத்தினம் இராஜேஸ்வரி (வயது - 63) என்பவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். கண்டி வீதி கொடிகாமத்தைச் சேர்ந்த அ.அனுஸ்கரன் (வயது -42), வை. இலட்சுமி (வயது-69), அ.நிசாந்தினி (வயது-36), அ.அஸ்கன் (வயது- 6 மாதம்) ஆகியோர் சாவகச்சேரி மருத்துவமனையில் சிகிச்சை பெறுகின்றனர். (து-159)







# இழுத்து மூடப்பட்டுவிடும் அவலத்தில் பாடசாலை

**வவுனியா, பெப். 4**

**மாணவர்களின் எண்ணிக்கை குறைவு என்பதால் வவுனியா சின்னத்தம்பனை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை இழுத்து மூடும் துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.**



இந்தப் பாடசாலை1957இல் ஓலைக் கொட்டில்களில் ஆரம்பிக்கப்பட்டது. 1960லிருந்து அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையாக இயங்கிவந்தது.

1984ஆம் ஆண்டு வன்செயல் காரணமாக சின்னத்தம்பனை மக்கள் இடம்பெயரும்போது பாடசாலை மூடப்பட்டது. 1990 ஆண்டு கிராமத்தில் மக்கள் மீளக்குடியமர்ந்து பாடசாலை சிறப்பாக இயங்கிவந்தது. போர் காரணமாக மீண்டும் மூடப்பட்டது. மக்கள் இடம்பெயர்ந்தனர்.

மீண்டும் குடியமர்ந்த 2002இல் ஓலைக் கொட்டில்கள் அமைத்து சுமார் 50 மாணவர்களுடன் மீள ஆரம்பிக்கப்பட்டது.

2013இல் 75 மாணவர்களுடன் பாடசாலை இயங்கிவந்தது. தற்போது இரண்டு மாணவர்கள் மாத்திரமே கல்வி கற்றுவருகின்றனர். அதிபர் உட்பட மூன்று ஆசிரியர்கள் பணியாற்றுகின்றனர்.

இவ்வாறு மாணவர்களின் எண்ணிக்கை குறைவு காரணமாக பாடசாலையை இழுத்து மூடும் நிலை ஏற்படுகின்றது என்று கிராம மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, 2010க்கு முன்னர் செட்டிகுளம் பெரியபுளியாளங்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையும் 2010 இல் திருநாவுக்கரசு வித்தியாலயமும் மாணவர்கள் வருகை குறைவால் இழுத்து மூடப்பட்டிருந்தன.

சின்னத்தம்பனை கிராமத்தில் அடிப்படை வசதிகள் எதுவுமே இல்லாத காலத்தில் சிறப்பாக இயங்கி வந்த பாடசாலை தற்போது நிரந்தர வகுப்பறைக் கட்டடங்கள் மலசலகூட வசதி, விளையாட்டு மைதானம், சிறுவர் பூங்கா என வசதிகளுடன் கூடியிருந்தும் மாணவர்கள் வருகை குறைந்துள்ளமையால் பாடசாலை மூடப்படும் நிலையிலுள்ளது.

கிராமத்தில் உள்ள பெற்றோர் நகர்ப்புற பாடசாலைகளில் மாணவர்களை இணைக்கின்றனர். இதனால் வெளிநாட்டு மோகம் மற்றும் தமிழ் மக்களின் பிறப்பு வீத குறைபாடுகளால் வவுனியாவில் பல கிராமப்புற பாடசாலைகளில் மாணவர்களின்எண்ணிக்கைவீழ்ச்சியடைந்து கீழ் நிலைக்கு வந்துள்ளதாகக் கல்வித்துறை சார்ந்த அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். (து-110)

## சட்டவிரோத மணல் அகழ்வு மூவர் வாகனங்களுடன் கைது

மட்டக்களப்பு.பெப்.4



கிரான் பிரதேச செயலாளர் பிரிவில் சட்டவிரோத மண் அகழ்வில் ஈடுபட்ட மூன்று உழவு இயந்திரங்கள் நேற்றுக் கைப்பற்றப்பட்டுள்ளன.

மூன்று சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று வாழைச்சேனை வட்டார வன உத்தியோகத்தர் எஸ்.தணிகாசலம் தெரிவித்தார். மாதுறுஓயா ஆற்றில் மண் அகழ்வில் ஈடுபட்டுக் கொண்டிருந்த ஓட்டமாவடி, வாழைச்சேனை, பகுதியை சேர்ந்த மூவர் இவ்வாறு கைது செய்யப்பட்டனர். கைப்பற்றப்பட்ட மூன்று உழவு இயந்திரங்களில் இரண்டு உழவு இயந்திரங்கள் இதற்கு முன்னரும் சட்டவிரோத மண் அகழ்வில் ஈடுபட்ட வேளை கைப்பற்றப்பட்டு விடுவிக்கப்பட்டவை என்றும் வட்டார வன உத்தியோகத்தர் எஸ்.தணிகாசலம் மேலும் தெரிவித்தார். (கு)

## ச.ச.நிலையங்கள் வலுப்பெறின் கிராமப் பிரச்சினைகள் தீரும்

### வலி.கிழக்கு தவிசாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 4

சமூக மட்டத்தில் காணப்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு சனசமூக நிலையங்களை வினைத்திறனாக மாற்றுவது அவசியம் என்று வலி. கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

புத்தூர் குமரகுருபரன் சனசமூக நிலையத்தின் 72 ஆவது ஆண்டு நிறைவு விழா சனசமூக நிலைய மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது. அதில் உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

சனசமூக நிலையங்கள் மக்கள் பங்கேற்புடன் கூடிய நிறுவனங்களாக இயங்கும் போது கிராம மட்டத்தில் எழுகின்ற பல பிரச்சினைகளுக்குத் தீர்வு எட்டமுடியும்.

எமது முன்னோர்கள் எமது கிராமத்தின் பாரம்பரியம், கலை, கலாசாரம், விளையாட்டு, பொருளாதாரம், அரசியல் விடயங்களில் எந்தளவு தூரம் கிரமமாகச் சிந்தித்து முன்னேற்றங்களுக்காக ஒன்றிணைந்தனர் என்பதைப் புரிந்துகொள்ள முடியும். சனசமூக நிலையம் என்ற அலகை ஓர் மையப்புள்ளியாக வைத்து முன்னேற்றம் கண்டனர். இவை எமது பாரம்பரியங்கள்.

இன்று அபிவிருத்தியில் மக்கள் பங்கேற்பை ஏற்படுத்துவதை மேலைத்தேய வியாக்கியானங்களுடன் பட்டப்படிப்பில் எமது தலைமுறையினர் கற்கின்றனர். இந்த நிலையில், எம்மிடம் தான் கிராம மட்டத்தில் மக்கள் பங்கேற்புக்கான அபிவிருத்தி மற்றும் ஜனநாயகப் பண்புமிக்க சனசமூக நிலையங்கள் இருந்துள்ளன என்பதை நாம் பறைசாற்றத் தவறிவிடுகின்றோம்.

கிராமங்களில் சமூக பொருளாதார கலாசார ரீதியில் உரிய திட்டமிடல்கள் இன்மையால் பல பிரச்சினைகள், இழப்புக்கள் உள்ளன. குடும்ப வருமானத்துக்கும் செலவுக்கும் இடையிலான முகாமைத்துவம் இன்றிப் பலர் பிரச்சினைப்படுகின்றனர். இந்த நலிவடை நிலையைப் பயன்படுத்தி நுண் நிதி நிறுவனங்கள் உரிய கடன் முகாமைத்துவம் இன்றி மக்களை கடன்பொறிக்குள் தள்ளி விடுகின்றன. இதனால் பலர் வாழ முடியாது, தற்கொலை போன்ற முட்டாள்தன மான முடிவுகளைக்கூட எடுத்து விடுகின்றனர்.

ஒருவர் பிரச்சினையில் சிக்கியிருக்கிறார் என்றால் அவரை கண்டுகொள்வதற்கு கிராமமட்டத்தில் பெரியோர்களால் தலைமைதாங்கப்படும் சனசமூக நிலையங்கள் இயங்கவேண்டும்.

தொலைக்காட்சி நாடகங்களுக்குள்ளும் சினிமாவுக்குள்ளும் சிக்கியிருக்கும் நேரத்தைக் குறைத்து பொதுப்பணிகளில் ஈடுபாடுகாட்டவேண்டும். - என்றார். (து)

## மட்டக்களப்பில் கஞ்சா மீட்பு!

கொழும்பு, பெப். 4

மட்டக்களப்பு, காத்தான்குடிப் பிரதேசத்தில் ஒரு கிலோ 250 கிராம் கேரளக் கஞ்சாவுடன் ஒருவர் விசேட அதிரடிப்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்த தகவலை அடுத்து கஞ்சா விற்பனை செய்பவரிடம் சென்று கஞ்சா வேண்டுவதைப்போல் சிவில் உடையில் வினவியுள்ளனர். இந்நிலையில் குறித்த சந்தேகநபர், கஞ்சாவை எடுத்து வந்திருந்தபோது விசேட அதிரடிப்படையினர் அவரைக் கைதுசெய்ததுடன் அவரிடம் இருந்த ஒரு கிலோ 250 கிராம் கஞ்சாவையும் பறிமுதல் செய்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில் அவர், பொலன்னறுவையைச் சேர்ந்த 39 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்துள்ளதுடன் மேலதிக விசாரணையை முன்னெடுத்துள்ளனர். (ம)

## கஸ்தூரியர் வீதிக்கு மின் விளக்குகள்

யாழ்ப்பாணம்,பெப்.4

யாழ்.நகரில் கஸ்தூரியர் வீதியில் வலுக்கூடிய மின் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

நவீன சந்தைக் கட்டட சுவரில் வரையப்பட்ட ஓவியங்களை அண்டிய பகுதியில் வலுக்கூடிய விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

அத்துடன் நகரில் உள்ள அநேகமான பிரதேச வீதிகளுக்கு வலுக்கூடிய வீதி விளக்குகளைப் பொருத்த யாழ்.மாநகர சபை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

ஏற்கனவே முனீஸ்வரன் வீதிக்கும் வலுக்கூடிய வீதி விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. (க-17)



# மது வரித் திணைக்களத்தால் 11,400 கோடி ரூபா வருமானம்

**யாழ்ப்பாணம்,பெப்.4**
**நாடளாவிய ரீதியில் 2018 ஆம் ஆண்டில் மட்டும் மதுவரித் திணைக்களத்தால், அரசுக்கு மொத்த வருமானமாக 11,400 கோடிரூபா கிடைத்துள்ளது என்று திணைக்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன.**




இலங்கையின் மொத்த வருமானங்களில் இரண்டாவது அல்லது மூன்றாவது இடத்தை ஆண்டுதோறும் தொட்டு நிற்கும் மதுவரித் திணைக்களத்தின் மூலம் இந்த வருமானம் கிடைத்துள்ளது.

இவற்றில் மதுபானங்களின் ஊடாகக் கிடைத்த வரியாக 11,389 கோடியே 3 லட்சத்து 32 ஆயிரத்து 214 ரூபாவருமானமும், புகையிலை வரியாக 4 கோடியே 53 லட்சத்து 67 ஆயிரத்து 3 ரூபா வருமானமும் கிடைக்கப்பெற்றது. அதனடிப்படையில் 11,393 கோடியே 56 லட்சத்து 99 ஆயிரத்து 217 ரூபாமொத்த வருமானம் கிடைக்கப் பெற்றது என்று திணைக்களத்தின் தகவல்கள் தெரிவித்துள்ளன. (சு-105)

# மகேஷ் சேனாநாயக்க சஜித்துடன் சங்கமம்!

கொழும்பு, பெப்.4
இலங்கை இராணுவத்தின் முன்னாள் தளபதி மகேஷ் சேனாநாயக்க சஜித் அணியில் சங்கமிக்கவுள்ளார் என சிங்கள இணையத்தளமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

2020 ஏப்ரல் இறுதிவாரத்தில் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலுக்கான பரப்புரைச் சமரை வழிநடத்தும் பொறுப்பையும், கூட்டணியின் தலைமைப் பதவியையும் சஜித் பிரேமதாசவுக்கு ஐக்கிய தேசியக் கட்சி வழங்கியுள்ளது.

பரந்துபட்ட அரசியல் கூட்டணி அமைக்கும் முயற்சியில் இறங்கியுள்ள சஜித் அணி, சிறு கட்சிகளுக்கும், சிவில் அமைப்புகளுக்கும், தொழிற்சங்கங்களுக்கும் அழைப்பு விடுத்துள்ளது.

இந்த அழைப்பின் பிரகாரமே மகேஷ் சேனாநாயக்க இணையவுள்ளார் என்றும், பொதுத்தேர்தலில் அவர் களமிறக்கப்படலாம் எனவும் தெரியவருகின்றது.

2019 நவம்பரில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் தேசிய மக்கள் கட்சியின் சார்பில் ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிட்ட மகேஷ் சேனாநாயக்க நாடு தழுவிய ரீதியில் 49 ஆயிரத்து 655 வாக்குகளை மட்டுமே பெற்றார்.

அவர் சஜித் அணியில் இணையவுள்ளார் எனக் கூறப்பட்டாலும் இது தொடர்பில் அவர் தரப்பிலிருந்து இன்னும் அதிகாரபூர்வமாக எவ்வித தகவலும் வெளியாகவில்லை. (எ-44)

# மலையகத்தில் இம்முறை பலமுனைகளில் போட்டி!

கொழும்பு, பெப். 4
இந்த ஆண்டு ஏப்ரல் இறுதிவாரத்தில் நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில் இம்முறை பலமுனைப்போட்டி நிலவவுள்ளது.

நுவரெலியா தேர்தல் மாவட்டத்திலிருந்து ஆறுபேர் மட்டுமே நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகிவந்த நிலையில், இம்முறை ஆசனமொன்று அதிகரிக்கப்பட்டு, ஏழுபேர் தெரிவாகும் வாய்ப்பு உருவாகியுள்ளது.

அந்த ஆசனத்தை இலக்கு வைத்தே தற்போது அரசியல் நகர்வுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

2015ஆம் ஆண்டு ஓகஸ்டில் நடைபெற்ற பொதுத்தேர்தலின் போது நுவரெலியா மாவட்டத்தில் ஐக்கிய தேசியக்கட்சியின் யானை சின்னத்தின்கீழ் போட்டியிட்டவர்களுள் பழனி திகாம்பரம், வேலுச்சாமி ராதாகிருஷ்ணன், எம்.திலகராஜ், நவீன் திஸாநாயக்க, கே.கே. பியதாச ஆகியோர் வெற்றிபெற்று சபைக்குத் தெரிவானார்கள். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வெற்றிலைச் சின்னத்தின்கீழ் போட்டியிட்டவர்களுள் ஆறுமுகன் தொண்டமான், முத்துசிவலிங்கம், சி.பி. ரட்னாயக்க ஆகியோர் வெற்றிபெற்று நாடாளுமன்றம் தெரிவானார்கள்.

இந்த நிலையில் எதிர்வரும் ஏப்ரல் இறுதி வாரத்தில் நடைபெறும் பொதுத்தேர்தலில் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியுடன் இணைந்து கூட்டணியாக களமிறங்கியுள்ள இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் சார்பில் நுவரெலியா மாவட்டத்தில் ஆறுமுகன் தொண்டமான், மருதபாண்டி ரமேஷ், கணபதி கனகராஜ் ஆகியோர் போட்டியிடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மறுபுறத்தில் சஜித் தலைமையில் அமையும் புதிய கூட்டணியில் இணைந்து போட்டியிடவுள்ள தமிழ் முற்போக்குக் கூட்டணியின் சார்பில் திகாம்பரம், மயில்வாகனம் திலகராஜ், ராதாகிருஷ்ணன் ஆகியோர் போட்டியிடவுள்ளனர். தேசிய மக்கள் சக்தியும் வேட்பாளர்களை நிறுத்தவுள்ளது. இளைஞர்கள் சிலரும் சுயேச்சையாக களமிறங்கத் தயாராகிவருகின்றனர். இந்த நிலையில் நுவரெலியா மாவட்டத்தில் தானும் தேர்தலில் களமிறங்கவுள்ளதாக மலையக மக்கள் முன்னணியின் ஸ்தாபகத் தலைவர் அமரர் பெரியசாமி சந்திரசேகரனின் புதல்வியான சட்டத்தரணி அனுசா சந்திரசேகரனும் அறிவித்துள்ளார். எனவேதான் பலமுனைப்போட்டி நிலவும் எனக் கூறப்படுகின்றது.

அதேவேளை, பதுளை, கண்டி, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களிலும் தமிழ் வேட்பாளர்களை நிறுத்த மொட்டுக் கட்சி திட்டமிட்டு வருகின்றது.

நுவரெலியா மாவட்டத்தில் தமிழர்கள் செறிந்து வாழ்வதால் அங்கு தமிழ்ப் பிரதிநிதித்துவத்துக்கு அச்சுறுத்தல் வராது.

ஆனால், கண்டி, பதுளை ஆகிய மாவட்டங்களில் வாக்குகள் ஆங்காங்கே சிதறிக்கிடப்பதால், பல தமிழ் வேட்பாளர்கள் போட்டியிடும் போது இருக்கும் பிரதிநிதித்துவத்தை இழக்கநேரிடும். அல்லது இருப்பவற்றில் குறைவு ஏற்படும் என்று மலையக சிவில் சமூக செயற்பாட்டாளர் ஒருவர் கூறினார்.

கண்டி மாவட்டத்தில் 1994ஆம் ஆண்டுக்குப் பிறகு 2015இல் நடைபெற்ற தேர்தலின்போதே தமிழ்ப் பிரதிநிதியொருவர் தெரிவானார் என்பது குறிப்பிடத்தக்கது. அத்துடன், இரத்தினபுரி, கம்பஹா ஆகிய மாவட்டங்களில் தமிழ்ப் பிரதிநிதியொருவர் தெரிவாகும் வாய்ப்பிருந்தாலும் பலமுனை போட்டி நிலவுவதாலேயே அது சாத்தியமாகுவதில்லை எனவும் அவர் குறிப்பிட்டார். (ம-44)



# கலந்துரையாடல்

வவுனியா,பெப்.4
'தூய்மையான அரசியலை முன்னேற்றுவோம்" எனும் கருப்பொருளில் கலந்துரையாடல் வவுனியா பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது.

தேர்தல்களைக் கண்காணிக்கும் "பவ்ரல்" அமைப்பின் ஏற்பாட்டில் சர்வதோயம் அமைப்பின் ஒழுங்குபடுத்தலில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

நிகழ்வில் வளவாளர்களாக எ.மெடோசன் பங்கெடுத்திருந்ததுடன், பவ்ரல் அமைப்பின் நிகழ்ச்சித் திட்டப் பணிப்பாளர் எஸ்.சிறிதரன் மற்றும் முக்கியஸ்தர் க.டினுசன் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ஜ-110)

# சந்தேகநபருக்கு மன்றில் கஞ்சிப்பான அச்சுறுத்தல்

கொழும்பு, பெப்.4
விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பாதாள உலகக் குழு உறுப்பினர் கஞ்சிப்பான இம்ரான் என்று அழைக்கப்படும் மொஹமட் நஜீவ் மொஹமட் இம்ரான் கொழும்பு நீதிமன்ற வளாகத்தில் மற்றுமொரு சந்தேகநபருக்குக் கொலை அச்சுறுத்தல் விடுத்துள்ளார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

அச்சுறுத்தலுக்கு இலக்கான சந்தேகநபர் தமது சட்டத்தரணி ஊடாக இந்தச் சம்பவம் தொடர்பாக கொழும்பு பிரதான நீதிவான் லங்கா ஜயரத்னவிடம் முறைப்பாடு தெரிவித்துள்ளார்.

பாதாள உலகக் குழு உறுப்பினரான கஞ்சிப்பானை இம்ரான் வழக்கு விசாரணைக்காக கொழும்பு நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டதன் பின்னர் மீண்டும் சிறைச்சாலைக்கு அழைத்து செல்லும் சந்தர்ப்பத்தில் அச்சுறுத்தல் விடுத்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. பொலிஸ் சிறப்பு அதிரடிப் படையினர் மற்றும் சிறைச்சாலைப் பாதுகாப்பு அதிகாரிகளின் பாதுகாப்பின் கீழ் இருந்த சந்தர்ப்பத்திலேயே அவர் கொலை அச்சுறுத்தல் விடுத்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ ஆகியோரைக் கொலை செய்யத் திட்டம் தீட்டினார் என்று குற்றஞ்சாட்டப்பட்டு, மஹர சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஒருவருக்கே கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது. (எ)

# மெய்வன்மை போட்டி

மருதங்கேணி,பெப்.4
யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு அம்பன் அமெரிக்கன் மிசன் தமிழ் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நேற்றுமுன்தினம் வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் வேணா பரமேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கம்பன், வள்ளுவன், பாரதி என்ற மூன்று இல்லங்களுக்கு இடையில் நடத்தப்பட்ட போட்டியில் மஞ்சள் நிறமான பாரதி இல்லம் வெற்றி பெற்றது. (ஜ-160)





# 141 இலங்கையர்கள் சீனாவில் இருந்து மீட்பு

**கொழும்பு, பெப். 4**

**கல்வி மற்றும் தொழில் நிமித்தம் சீனாவின் பல்வேறு பகுதிகளில் தங்கியிருந்த 141 இலங்கையர்கள் நேற்றுமுன்தினமும் நாடு திரும்பியுள்ளனர்.**




மூன்று வெவ்வேறு விமானங்களில் அவர்கள் இலங்கைக்கு வந்துள்ளனர்.

இவர்கள் அனைவரும் கட்டுநாயக்க விமான நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள விசேட வைத்தியப் பரிசோதனை செயலணிமூலம் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு வைரஸ் தாக்கம் ஏதுமில்லையென உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் நாட்டுக்குள் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதே வேளை, சீனாவிலிருந்து இலங்கை திரும்பும் எதிர்பார்ப்புடன் மேலும் 204 இலங்கை மாணவர்கள் உள்ளனர் என்றும் அவர்களுடன் தொடர்பினை ஏற்படுத்தியுள்ளோம் என்றும் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. (ம)

## சென்.ஜேம்ஸ் வித்தியின் மெய்வன்மை போட்டிகள்

குருநகர்.பெப்.4

யாழ்.சென் ஜேம்ஸ் மகா வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் கடந்த புதன் கிழமை பாடசாலை விளையாட்டுமைதானத்தில் நடைபெற்றன.

அதிபர் க.கலியுகன் தலைமையில் நடைபெற்ற போட்டிகளில் போல் இல்லம் முதலாமிடத்தையும், ஜோன் இல்லம் இரண்டாமிடத்தையும், பீற்றர் இல்லம் மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டன.

நடைபெற்ற போட்டிகளின் சிறந்த விளையாட்டு வீரர்களாக 12 வயதுப் பிரிவில் டி.மெலின், 14 வயதுப் பிரிவில் ஆர்.நிருபன், எஸ்.ஜொகனஸ், 16 வயதுப் பிரிவில் பி.நிஸான், ரி.நிலக்ஷன், 18 வயதுப் பிரிவில் அ.தனுஸ், அ.விதுஸன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். அவர்களுக்கு வெற்றிக் கிண்ணங்கள் பரிசாக வழங்கப்பட்டன. (க-51)



## முருகப்பெருமானுக்கு வானுயர்ந்த சிலை!

கொழும்பு, பெப். 4

தமிழ்க் கடவுளான முருகப் பெருமானுக்கு உலகிலேயே மூன்றாவது உயரமான திருவுருவச்சிலை மலையகத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா மாவட்டத்தில் ராகலை நகரில் அமைந்துள்ள ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தின் மஹா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு 60 அடி உயரத்தில் இத் திருவுருவச்சலை நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இதற்காக இந்தியாவின் மாமல்லபுரத்திலிருந்து அசோக்குமார் தலைமையிலான சிற்பாச்சாரிகள் வரவழைக்கப்பட்டிருந்தனர். எட்டு சிற்பாச்சாரிகள் இணைந்து இரண்டு வருடகாலப்பகுதிக்குள் சிலை அமைக்கும் திருப்பணியை நிறைவு செய்தனர். அத்துடன், மாமல்லபுரத்திலிருந்து 35 அடி உயர மான வேலும் கொண்டவரப்பட்டது. தண்டாயுதபாணி என்பவரே வேலை வடிவமைத்துள்ளார். (ம-44)

## 'அன்பியப் புதுப்பித்தல் ஆண்டு' மன்னார் திருச்சபை பிரகடனம்

மன்னார், பெப்.4

" வாழ மன்னார் திருச்சபை இவ் வருடத்தை அன்பியப் புதுப்பித்தல் ஆண்டாகப் பிரகடனப்படுத்தியுள்ளது"என மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தெரிவித்தார்.

மன்னார் மறைமாவட்டத்தின் பழமைவாய்ந்த கத்தோலிக்க கிராமங்களில் ஒன்றான முத்தரிப்புத்துறை புனித.செங்கோல் அன்னை ஆலயத் திருவிழாவில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை தலைமை தாங்கி, பெருவிழா கொண்டாட்ட கூட்டுத்திருப்பலியின் மறையுரையில், கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

மன்னார் மறைமாவட்டத்தில் இவ் வருடம் புதுப்பித்தல் என்ற மையக்கருத்துடன் இவ்வாண்டு சிந்தித்துச் செயல்பட்டு வருகின்றோம். அத்துடன் அன்பியங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் எனவும் இதன் உறுதிப்பாட்டை மன்னார் மறைமாவட்டத்திலுள்ள ஒவ்வொரு பங்கும் கடந்த வாரம் இறைவனின் சந்நிதானத்தில் காணிக்கையாக்கினர். ஆகவே ஒவ்வொரு பங்கு மக்களும் தங்கள் பங்குகளில் புத்துணர்ச்சி கொண்டவர்களாக அன்பிய வாழ்வை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

மன்னார் மறைமாவட்டத்திலும் இறை நம்பிக்கை கொண்டவர்களாக அறுநூறுக்கு மேற்பட்டவர்கள் தங்கள் உயிரையும் கொடுத்தவர்களாக இருக்கின்றனர். அவர்கள் சிந்திய குருதிதான் இன்றும் எம்மை வலிமைப் படுத்திக் கொண்டு இருக்கின்றது. இதனால்தான் நாம் விசுவாசத்திலும் நம்பிக்கையிலும் உறுதியாக நிற்க எமக்கு வலிமை சேர்த்துத் தரப்பட்டுள்ளது. ஆகவே இந்த நம்பிக்கையும் வலிமையும் எமக்கு இருக்கின்றதா என்பதை நாம் எமக்குள் கேட்டுக் கொள்ள வேண்டும் - என்றார். (ஐ-60)



## ஆயிரம் மரக்கன்றுகள் நடுகை ஆரம்பம்

முல்லைத்தீவு,பெப்.4

கரையோரப்பகுதிகளைப் பாதுகாத்தல் மற்றும் அழகுபடுத்தும் நோக்கில் செல்வபுரம் தொடக்கம் கொக்குளாய் வரை ஆயிரம் மரக்கன்றுகள் நடுகை செய்யும் செயற்றிட்டம் நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்ட படைத்தலைமையகத்தின் ஏற்பாட்டில் 59 ஆவது படைப்பிரிவினால் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

படை அதிகாரிகள் மற்றும் கரைதுறைப்பற்றுப் பிரதேச சபை தவிசாளர், கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் மற்றும் மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள்,கிராம அலுவலகர்கள், படையினர் ஆரம்பநிகழ்வில் கலந்து கொண்டனர். (க-19)

## ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம்,பெப்.4

வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியும் ஊழியர் நலன் புரிச்சங்கமும் இணைந்து நடத்தும் ஒன்றுகூடல் நிகழ்வு நாளை புதன்கிழமை முற்பகல் 10.15 மணிக்கு கொத்தணிக் கலையரங்க மண்டபத்தில் நடைபெறும்.

தலைவர் மா.தவலிங்கம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக கொத்தணித் தலைவர்.செ.செல்வராசா கலந்து கொள்வார். (க-63)



மயிலிட்டி திருப்பூர் ஒன்றியம் அருள்மிகு பேச்சி அம்மன் ஆலய இராஜ கோபுரத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை முற்பகல் 9 மணியளவில் சிறப்பாக நடைபெற்றது. (ஐ)

# பத்துக்கண் பாலம் திறப்பு

முல்லைத்தீவு, பெப்.4

துணுக்காய் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பத்துக்கண் பாலம் மற்றும் பேராறு கனகரத்தினம் இணைப்பு வீதி மக்கள் பாவனைக்காக நேற்றுத் திறக்கப்பட்டன.





பேராற்றுக் குறுக்காக கற்சிலைமடு மற்றும் கனகரத்தினபுரம் கிராமங்களை இணைக்கும் வீதியில் அமைந்துள்ள பத்துக்கண் பாலம் மற்றும் நான்கு கிலோ மீற்றர் நீளமான வீதி நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதனால் சம்பிரதாய முறைப்படி நாடாவெட்டித் திறந்து வைக்கப்பட்டன. பெயர்ப்பலகையை மாவட்ட அபிவிருத்திக் குழுத்தலைவர் க.கனகரத்தினம் திரை நீக்கம் செய்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் முயற்சியில், கிராமிய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 40.18 மில்லியன் ரூபா செலவில் இவை சீரமைக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டச் செயலர் ரூபவதி கேதீஸ்வரன், முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக்குழுத்தலைவர் க.கனகரத்தினம் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் மற்றும் வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர் து.ரவிகரன் உள்ளிட்ட நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகள் பலர் நிகழ்வில் கலந்து கொண்டனர். (க-19,222,500)

# விளையாட்டு நிகழ்வும் பெயர் வளைவு திறப்பும்

கொடிகாமம், பெப்.4

மீசாலை கமலாம்பிகை வித்தியாலயத்தின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வும், பாடசாலை நுழைவாயில் பெயர் வளைவு திறப்பும் அண்மையில் வித்தியாலயத்தில் நடைபெற்றன.


பாடசாலை அதிபர் திருமதி வ.கணேசலிங்கம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய சங்கீத பாட ஆசிரிய ஆலோசகர் திருமதி பு.ஈழநேசன் கலந்து சிறப்பித்தார்.

புதிதாக அமைக்கப்பட்ட பாடசாலை வளைவின் நுழைவாயில் பெயர்ப் பலகையை .ஓய்வு பெற்ற வங்கி உத்தியோகத்தர் சி.பரமநாதன் திறந்து வைத்தார்.

தொடர்ந்து செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வு நடைபெற்றது.

போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ்கள் மற்றும் பரிசில்கள் வழங்கப்பட்டன. (ஐ-159)





# வடமராட்சி கிழக்கில் 750 மரக்கன்றுகள்

மருதங்கேணி, பெப்.4

வடமராட்சி கிழக்கு மணற்காடு கிராமத்தில் 750 மரக்கன்றுகள் நடும் நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

மணற்காடு புனித தேவாலயத்தில் மணற்காடு பங்குத்தந்தை டியூக் வின்சன் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது..

கருத்துரைகளை யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநாயகன், முல்லைத்தீவு மாவட்ட மேலதிக செயலரும் வடமராட்சி கிழக்கின் முன்னாள் பிரதேச செயலருமான க.கனகேஸ்வரன், வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலர் கே.பிரபாகரமூர்த்தி உட்பட பலரும் நிகழ்த்தினர்.

நிகழ்வில் ஆறு உள்வீதிகளுக்கான பெயர்ப் பலகைகள் திரைநீக்கம் செய்யப்பட்டன.

தொடர்ந்து மணற்காடு கடற்கரை ஓரத்தில் 750 மரக்கன்றுகள் நடும் நிகழ்வு நடைபெற்றது.

முதல் மரக்கன்றை மாவட்ட செயலர் நா.வேதநாயகன் நட்டார். நிகழ்வில் கிராம மக்கள், கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் மற்றும் மாணவர்கள் உட்பட கிராம மக்கள் அனைவரும் மரக்கன்றுகளை நட்டனர். (த-160)





# நால்வருக்கு சைக்கிள்

நவாலி, பெப்.4

நவாலியூர் சமூக ஆர்வலர் மறைந்த தில்லையம்பலம் அன்னபூரணம் ஞாபகார்த்தமாக வறிய மாணவர்கள் நால்வருக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்படவுள்ளன.

தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் விவரங்கள் அன்னபூரணம் குடும்பத்துக்கு அதிபர் கி.கிருஷ்ணானந்தாவால் கையளிக்கப்பட்டுள்ளன .

விரைவில் பாடசாலையில் வைத்து நான்கு மாணவர்களுக்கும் தில்லையம்பலம் அன்னபூரணத்தின் புதல்வர் தி.சிவகுமார் குடும்பத்தினரால் துவிச்சக்கர வண்டிகள் கையளிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-50)

# நாளை மின்தடை

யாழ்ப்பாணம், பெப்.4

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக வடக்கின் பல பகுதிகளில் நாளை புதன்கிழமை மின்சாரம் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை -

**யாழ்ப்பாண மாவட்டத்தில்** வராத்துப்பளை, புனிதநகர், கற்கோவளம், தும்பளை, வெளிச்சவீடு, முதலாம் குறுக்குத்தெரு, இரண்டாம் குறுக்குத்தெரு, மூன்றாம் குறுக்குத்தெரு, ஜெயந்தா கைத்தொழிற்சாலை பிறைவேற் லிமிற்ரெட் கற்கோவளம் ஆகிய இடங்களிலும், **வவுனியா மாவட்டத்தில்** புதுக்குளம் கோவில்குளம் கிராமம், பகல அளுத்வத்த கிராமம், நாகரிலுப்பைக்குளம், பொன்னவரசங்குளம், அறுகம்புல்வெளிய, அவுசதப்பிட்டிய, பம்பைமடுவிலிருந்து குருக்கள் புதுக்குளம் வரை, பம்பைமடு பல்கலைக்கழகம், வவுனியா பல்கலைக்கழகம் ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் அனுசா செல்வராசா அறிவித்துள்ளார். (ஐ)

# தனிச் சிங்களத் தேசிய கீதம் தனிநாட்டுக்கு அங்கீகாரம்

## ரெலோவின் தேசிய அமைப்பாளர் கருத்து

கொழும்பு, பெப். 4



சுதந்திர தினத்தன்று இடம்பெறும் நிகழ்வில் தமிழில் தேசிய கீதம் இசைக்கப்பட மாட்டாது என்ற முடிவானது தமிழ் மக்கள் இதுவரை கோரி வந்த தனி நாட்டுக் கோரிக்கையை அங்கீகரிப்பது போன்று அமைந்துள்ளது என்று ரெலோ அமைப்பின் தேசிய அமைப்பாளர் சுரேந்திரன் குருசுவாமி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

'இலங்கை சோசலிசக் குடியரசின் தேசிய இனங்களில் ஒன்றான தமிழர்களின் உணர்வை மலினப்படுத்தும் வகையில் இலங்கையின் சுதந்திர தினத்தன்று இடம்பெறும் நிகழ்வில் தமிழில் தேசிய கீதம் இசைக்கப்படமாட்டாது என அரச தரப்பின் முக்கிய அமைச்சர்கள் கூளுரைத்து வருகின்றனர்.

இந்நிலையில் இம்முறை காலிமுகத்திடலில் இடம்பெறும் சுதந்திர தினக் கொண்டாட்டத்தில் தமிழில் தேசிய கீதம் இசைக்கப்படும் வாய்ப்பு இல்லை என்பது ஏறக்குறைய உறுதியாகிவிட்டது. இந்த செயற்பாடானது தமிழ் மக்கள் இதுவரை கோரிவந்த தனி நாடு, தனிக்கொடி, தனித்தேசிய கீதம் போன்ற கோரிக்கைகளை அங்கீகரிப்பது போன்றும் இக்கோரிக்கையை வலுப்படுத்துவது போன்றும் அமைந்துள்ளது.

தமிழர்களையும் தமிழ் மொழியையும் புறக்கணிக்கும் நிலை தொடர்வதென்பது தமிழ் மக்கள் மத்தியில் உள்ள பிரிந்து செல்லும் உணர்வை வலுவடையச் செய்யுமேயன்றி இன நல்லிணக்கத்திற்கு ஒருபோதும் வழிசமைக்காது" - என்றுள்ளது. (ம)



## கற்றல் உபகரணங்கள் கையளிப்பு

வவுனியா,பெப்.4
வவுனியா சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் அண்மையில் வழங்கப்பட்டன.
வீ 3 பவுண்டேசன் ஊடாக கொக்குவில் இந்துக் கல்லூரியின் பழைய மாணவன் நோர்வே வாழ் சமூக ஆர்வலர் சண்முகம் ராஜ்மோகன் இந்த உதவியை வழங்கினார்.
நிகழ்வில் பாடசாலை உப அதிபர் மங்களநாதன், கல்லூரி ஆசிரியர்கள்,மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் செ.ஶ்ரீநிவாசன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ-222)

# தீங்கு விளைவிப்பதற்கே அரசு பெரும்பான்மை கோருகின்றது

## ஜே.வி.பி. குற்றச்சாட்டு



கொழும்பு, பெப்.4
நாட்டுக்குத் தீங்கு விளைவிக்கும் சட்டங்களை இயற்றும் நோக்கத்துடன் தற்போதைய அரசு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை அதிகாரத்தைக் கோருகின்றது என்று மக்கள் விடுதலை முன்னணி குற்றம் சாட்டியுள்ளது.

கொழும்பில் நேற்று நடத்திய கூட்டம் ஒன்றில் பேசியபோதே அந்தக் கட்சியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
தற்போதைய அரசாங்கத்தினர் பல பாதகமான ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவார்கள். வரவிருக்கும் பொதுத் தேர்தலின் பின்னர் அரச சொத்துக்களையும் விற்பனை செய்வார்கள். வரவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின்னர். நாட்டில் இந்த மோசமான சூழ்நிலையை மேலும் அதிகரிக்கச் செய்ய வாய்ப்புள்ளது. பொருளாதாரத்தை உறுதிப்படுத்துவதை எதிர்பார்க்க முடியாது.
அமெரிக்காவுடனான மிலேனியம் சவால்கள் ஒப்பந்தம் மற்றும் சோபா ஒப்பந்தங்களில் அரசு கையெழுத்திடும். அதன்பின்னர் இந்த அரசு தேசிய சொத்துக்களை விற்று அரச நிறுவனங்களை தனியார் மயமாக்கும். நாடாளுமன்றத்தில் கூடுதல் அதிகாரம் என்பது பெரும் அழிவுக்கு வழி வகுக்கும். அது மீண்டும் மீண்டும் நிரூபிக்கப்பட்டுள்ளது. அரசமைப்பின் 19 ஆவது திருத்தத்தை வெற்றிகரமாக நிறைவேற்றிய போது அரசாங்க தரப்பில் வெறும் 70 பேர் மட்டுமே இருந்தனர். அதனால் சிறுபான்மை அரசே பொதுமக்களுக்கு பயன்படும். மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை ஏன் தேவை என்பதை இந்த அரசு வெளிப்படுத்த வேண்டும். என்றார். (எ)

# விமல் வீரவன்ச இனவாத முட்டாள்

## மனோ சாட்டை



கொழும்பு. பெப். 4
விமல் வீரவன்ச இனவாத முட்டாள். தமிழில் தேசிய கீதம் பாடினால் தமிழீழம் உருவாகாது முட்டாளே! இவ்வாறு காரசாரமாகக் கருத்துப் பகிர்ந்துள்ளார் முன்னாள் அமைச்சரும் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவருமான மனோ கணேசன்.
தனது உத்தியோகபூர்வ முகப்புத்தகத்திலேயே நேற்றுமுன்தினம் இரவு இது தொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ளார் அவர். அந்தப் பதிவில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:
தமிழில் தேசிய கீதம் பாடினால் தமிழீழம் உருவாகாது முட்டாளே!. அந்த நான்கு வருட நடைமுறை நிறுத்தப்பட்டால்தான் அத்தகைய சிந்தனை உருவாகும், முட்டாளே! விமல் வீரவன்ச என்ற இனவாத முட்டாளுடன் நாடாளுமன்றத்தை பகிர்ந்து கொள்ள நேர்ந்ததை நினைத்து வருந்துகிறேன் - என்றுள்ளது. (ம)

## 25வீத ஈரத்தன்மையுடன் நெல் கொள்வனவு



கொழும்பு, பெப். 4
விவசாயிகளிடம் இருந்து ஒரு கிலோகிராம் நெல் 50 ரூபாய்க்கு கொள்வனவு செய்யும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 25 வீத ஈரத்தன்மை உள்ள நெல்லே அவ்வாறு கொள்வனவு செய்யப்படுகின்றது.
2019/2020 பெரும்போக நெற்கொள்வனவு தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன்படி 25 வீத ஈரத்தன்மையைக் கொண்ட தரத்துடனான நெல் தற்போது கொள்வனவு செய்யப்படுகிறது. கடந்த வருடங்களில் நாட்டரிசி நெல் ஒரு கிலோகிராம் 38 ரூபாய்க்கும், சம்பா நெல் ஒரு கிலோகிராம் 41 ரூபாய்க்கும் கொள்வனவு செய்யப்பட்டது. (ம)

## திறன்வகுப்பறை திறந்துவைப்பு

கிளிநொச்சி, பெப். 4
பளை தர்மக்கேணி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் அமைக்கப்பட்ட திறன் வகுப்பறை மற்றும் மலசலகூடம் என்பனவற்றை நேற்றுமுன்தினம் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் திறந்து வைத்தார்.
ஒருமில்லியன் ரூபா ஒதுக்கீட்டில் இவை அமைக்கப்பட்டுள்ளன. பாடசாலை முதல்வர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினருடன் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை உபதவிசாளர் மு.கயன், பிரதேச சபை உறுப்பினர்களான கோகுல்ராஜ், ரமேஷ், வீரவாகுதேவர், அருட்செல்வி மற்றும் பாடசாலைச் சமூகத்தினர் கலந்துகொண்டனர். (து-6)

# யானைகளால் நாசமாகிய ரூ.மூன்றரை லட்சம் நெல்



வவுனியா,பெப். 4
வவுனியா சின்னத்தம்பனை கிராமத்தில் மாலை வேளைகளிலும் இரவு நேரங்களிலும் காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்துள்ளது. அறுவடைக்குத் தயாராகியிருக்கும் நெல்லைக்கூட யானைகள் பதம்பார்த்துவிடுகின்றன. இதனால் விவசாயிகள் நட்டத்தையும் நெல் இழப்பையும் எதிர்நோக்குகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.
இவ்வாறு கடந்த சில நாள்களில் மட்டும் அங்கு மூன்று ஏக்கர் நெல் வயல் அழிக்கப்பட்டுள்ளது என்று நெற்செய்கையாளர்கள் தெரிவிக்கின்றனர்.
கடந்த காலங்களில் வறட்சியால் பயிர்ச்செய்கை முற்றாக அழிவடைந்தது. பின்னர் கடும் மழை, வெள்ளத்தால் அழிவடைந்தது. இவ்வாறு பாதிக்கப்பட்ட நிலையில் நேற்றுமுன்தினம் இரவு நெற்காணிக்குள் புகுந்த காட்டு யானைகள் நெற்கதிர்களை உணவாக்கிவிட்டன. இதனால் சுமார் மூன்றரை லட்சம் ரூபா பெறுமதியான நெற்பயிர்கள் அழிந்தன என்று நெற்செய்கையாளர்கள் தெரிவிக்கின்றனர்.
வங்கியில் கடன் எடுத்து நெற்செய்கையில் ஈடுபட்டோம். மருந்து, உரங்கள், உழவு இயந்திர செலவுகள் என எல்லாவற்றையும் கடனாகப் பெற்றே நெற்செய்கையில் ஈடுபட்டோம். அறுவடையின் பின்னர் கடனை மீளச் செலுத்துவதாகத் திட்டமிட்டிருந்தோம். தற்போது காட்டு யானைகள் துவம்சம் செய்துவிட்டுச் சென்றுள்ளன.
இனிவரும் காலங்களிலாவது எமது விவசாய நிலங்களையும், பயிர்களையும் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். யானை வேலி அமைக்கவேண்டும், அழிவடைந்த பயிர்களுக்கு இழப்பீடு பெற்றுத் தரவேண்டும் என்று மக்கள் தெரிவிக்கின்றனர். (து-110)





## மெய்வன்மை போட்டி

கரவெட்டி,பெப்.4
கரவெட்டி கிழக்கு அ.த.க பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மை போட்டி கடந்த வெள்ளிக்கிழமை வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.
பாடசாலை அதிபர் க.ஆனந்தகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கரவெட்டி பிரதேச சபை உறுப்பினர் க.வைத்தியநாதன் கலந்துகொண்டார். (ஐ)

# வவுனியா வளாகத்தில் தொழில்நுட்ப பீடம்

## வர்த்தமானி வெளியானது

வவுனியா, பெப். 4

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வவுனியா வளாகத்தில் புதிதாக தொழில்நுட்ப கற்கைகள் பீடத்தை ஆரம்பிக்க வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளதாக வவுனியா வளாக முதல்வர் கலாநிதி ரி.மங்களேஸ்வரன் தெரிவித்தார்.

ஜனவரி மாதம் 30 ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் வவுனியா வளாகத்தில் தொழில்நுட்பவியல் கற்கைகள் பீடம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதற்கான தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் துறையும் உருவாக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வவுனியா வளாகத்தில் வியாபார கற்கைள் பீடம், பிரயோக விஞ்ஞான பீடம் என்பன ஏற்கனவே செயற்பட்டுவந்த நிலையில் மூன்றாவது பீடமாக தொழில்நுட்பவியல் கற்கைகள் பீடம் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

இதுவரை காலமும் தொழில்நுட்பவியல் துறை மற்றொரு பீடத்தின் அலகாக இணைக்கப்பட்டிருந்தது. சுமார் 100 மாணவர்கள் கற்கைச் செயற்பாடுகளை மேற்கொண்டு வந்திருந்தனர். தற்போது தனிப்பீடமாக உருவாக்கப்பட்டுள்ளதால் இனிவரும் காலங்களில் 150 மாணவர்கள் வரை அனுமதிக்கப்படுவார்கள் என்று மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, வவுனியா வளாகத்தின் முதல்வர் மற்றும் கல்வி, கல்விசாரா ஊழியர்களின் கடும்பிரயத்தனத்துக்கு மத்தியில் உயர்கல்வி அமைச்சின் அனுமதியுடன் குறித்த பீடம் உருவாக்கப்பட்டுள்ளது.

1991 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21 ஆம் திகதி வடக்கு மாகாண இணைக்கப்பட்ட பல்கலைக்கழக கல்லூரியாக ஆரம்பிக்கப்பட்ட இந்த வளாகம் 1997 ஆம் ஆண்டு ஏப்ரல் முதலாம் திகதி இரண்டு பீடங்களுடன் வவுனியா வளாகமாகத் தரமுயர்த்தப்பட்டிருந்தது. 23 வருடங்களுக்குப் பின்னர் மூன்றாவது பீடம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது

இதேவேளை, குறித்த வளாகத்தை பல்கலைக் கழகமாக தரமுயர்த்தவேண்டும் என்று பல்வேறு தரப்பினரும் கோரிக்கை முன்வைத்துவருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (து-110)

# சுதந்திர ஒத்திகைக்காக பாடசாலைகளுக்குப் பூட்டு

கொழும்பு, பெப். 4

கொழும்பு மாவட்டத்தில் உள்ள சில அரச, தனியார், சர்வதேச பாடசாலைகளுக்கு நேற்றும் விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

டி.எஸ்.சேனநாயக்க கல்லூரி, றோயல் கல்லூரி, தர்ஸ்டன் கல்லூரி, யஷோதரா கல்லூரி, மியூசியஸ் கல்லூரி, சென் பிரிட்ஜெட் கல்லூரி, கொழும்பு பெண்கள் கல்லூரி, கொழும்பு சர்வதேச பாடசாலை, வைசர்லி கல்லூரி ஆகிய பாடசாலைகளுக்கு நேற்று விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. பயிற்சி நட வடிக்கைகளில் கலந்துகொள்ளும் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு தங்குமிட வசதி வழங்குவதற்காகவும் இதர ஏற்பாடுகளுக்காகவுமே மேற்படி விடுமுறை வழங்கப்பட்டது. (ம)

# பிணைமுறி மோசடியாளருக்கு எதிராக நடவடிக்கை எடுங்கள்

## குற்றப்புலனாய்வுப் பிரிவிடம் ஆதாரங்கள் உள்ளன என்கின்றார் ஹர்ஷ டி சில்வா



**கொழும்பு, பெப். 4**

**நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பிணைமுறி மோசடிகள் குறித்த தடயவியல் அறிக்கையின் பிரகாரம் பிணைமுறி மோசடியுடன் நேரடியாகவும் மறைமுகமாகவும் தொடர்புடையவர்களுக்கு எதிராக நடவடிக்கையெடுக்க குற்றப்புலனாய்வுப் பிரிவுக்கு போதியளவு தரவுகள் உள்ளன என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.**

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பிணைமுறி மோசடிகள் தொடர்பில் விசாரணை செய்யப்பட்ட தடயவியல் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப் பட்டுள்ளது. இதில் 2015ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் மேற்கொள்ளப்பட்டுள்ள பிணைமுறி மோசடியின் பிரகாரம் 2015ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 27ஆம் திகதிக்கும் 2016ஆம் திகதி மார்ச் மாதம் 31ஆம் திகதிக்கும் இடையில் 9081 மில்லியன் அரசுக்கு இழப்பீடு ஏற்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

பிணைமுறி மோசடியுடன் நேரடியாக தொடர்புபட்டுள்ளவர்கள் தொடர்பிலேயே தடயவியல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால், மறைமுகமாக பணத்தை வாங்கியவர்கள் மற்றும் தொலைபேசிமூலம் உரையாடியவர்கள் தொடர்பில் கூறப்படவில்லை.

பிணைமுறி மோசடி தொடர்பில் மறைமுகமாகவும் நேரடியாக தொடர்புபட்டுள்ளவர்கள் குறித்து குற்றப்புலனாய்வுப் பிரிவிடம் போதியளவு தரவுகள் உள்ளன. ஆகவே, குற்றவாளிகளுக்கு எதிராக நடவடிக்கையெடுக்க முடியும் - என்றார். (ம)

# விண்ணப்பிப்பதில் மந்தம்

## கிளிநொச்சியில் 540 யாழ்ப்பாணத்தில் 9,582

யாழ்ப்பாணம்.பெப்.4

ஒரு லட்சம் பேருக்கான வேலை வாய்ப்புக்கு விண்ணப்பிப்பதில் வடக்கு மாகாணத்தில் கிளிநொச்சி மாவட்டம் மிகவும் மந்தமாகவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை முழுவதும் ஒரு லட்சம் பேருக்கான வேலை வாய்ப்பு என்ற அடிப்படையில் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஒரு பிரதேச செயலாளர் பிரிவுக்கு 350 பேர் என்ற அடிப்படையில் தெரிவுகள் இடம்பெறும். அதன் பிரகாரம் வடக்கு மாகாணத்தில் 4 பிரதேச செயலாளர் பிரிவுகளையுடைய கிளிநொச்சி மாவட்டத்தில் ஆயிரத்து 400 பேருக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும் சாத்தியம் உள்ள நிலையில் வெறுமனே 540 பேர் மட்டுமே விண்ணப்பித்துள்ளனர்.

அதேநேரம் 6 பிரதேச செயலாளர் பிரிவுகளை உடைய முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆயிரத்து 932 பேரும், 15 பிரதேச செயலாளர் பிரிவுகளை உடைய யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உச்சபட்சமாக 5 ஆயிரத்து 250 பேருக்கே கிடைக்கக்கூடிய நிலையில் இதுவரை 9 ஆயிரத்து 582 பேர் விண்ணப்பித்துள்ளனர். வவுனியா மாவட்டத்தில் 2 ஆயிரத்து 546 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன. மன்னார் மாவட்டத்தில் 2 ஆயிரத்து 114 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன.

இவற்றின் அடிப்படையில் கிளிநொச்சி மாவட்டத்தில் மிக குறைந்த விகிதமே விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-105)

# இலவச பயிற்சிக்கு விண்ணப்பம் கோரல்


யாழ்ப்பாணம்.பெப்.4

தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் கீழ் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் (என்.வி.கியூ 4) சான்றிதழைப் பெறுவதற்கான இலவச பயிற்சிநெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் மற்றும் மானிப்பாய் பயிற்சி நிலையங்களில் இருந்து இதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

க.பொ.த. சாதாரண தரத்தில் கணிதம் -சி, ஆங்கிலம் - சி, உள்ளடங்கலாக 6 பாடங்களில் சித்தி அல்லது கணிதம்-எஸ், ஆங்கிலம் - எஸ் உள்ளடங்கலாக 6 பாடங்களில் சித்தியும், க.பொ.த உயர் தரத்தில் இரண்டு பாடங்களில் சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும்.

த்குதி உடையவர்கள் 25 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும். முழுப்பெயர், முகவரி, பிறந்ததிகதி, தேசிய அடையாள அட்டை இலக்கம், கல்வித் தகைமைகள், தொலைபேசி இலக்கம், பயில விரும்பும் பயிற்சி நிலையம் என்பவற்றைக் குறிப்பிட்டு விண்ணப்பப் படிவத்தை மாவட்ட அலுவலர், இல.44, சோமசுந்தரம் வீதி சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)





# பாதணிகள் கையளிப்பு

தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தால் மட்டுவில் அ.மி.த.க. பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்கள் அனைவருக்கும் பாதணிகள் நேற்று வழங்கப்பட்டன. கழகத்தைச் சேர்ந்த ந.பாலச்சந்திரன், வை.இராசரத்தினம், க.அரசநாதன் மற்றும் யோ.ஜெயக்குமார் ஆகியோர் கலந்துகொண்டு பாதணிகளை மாணவர்களிடம் கையளித்தனர் (ஐ-9,131)



# நல்லை ஆதீன முதல்வரை சந்தித்தார் அங்கஜன் எம்.பி.

யாழ்ப்பாணம், பெப். 4

நல்லூர் திருஞானசம்மந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிகஞானசம்பந்தபரமாசாரிய சுவாமிகளை யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இ.அங்கஜன் நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

வீடுகள் கட்டிக் கொடுக்கப்படவேண்டும், தொழில்நுட்பம் சார்ந்த வேலைத்திட்டங்கள், கல்வித்திட்டங்கள் புதிதாக அறிமுகப்படுத்தப்பட வேண்டும், கால்நடைவளர்ப்பு ஊக்குவிக்கப்பட வேண்டும், அவை வழங்கப்பட்ட பின்பும் அவர்களுக்கு ஊக்குவிப்பு வழங்கப்படவேண்டும், யாழ்ப்பாணத்தில் நிலவும் தண்ணீர்ப் பிரச்சினை தீர்க்கப்படவேண்டும் என்று முதல்வர் அங்கஜனிடம் வலியுறுத்தினார்.

யாழ்ப்பாணத்தில் விவசாயம், மீன்பிடி, கல்வி ஆகிய மூன்று துறைகளையும் அபிவிருத்தி செய்யவேண்டும். யாழ்ப்பாணத்தில் நிலவும் உடனடித் தேவைகளை இனங்கண்டு கூறுங்கள். தீர்க்க நடவடிக்கை எடுக்கின்றேன் என்று அங்கஜன் ஆதீன முதல்வரிடம் கூறினார்.

கடந்த வாரம் அங்கஜன் யாழ்ப்பாண ஆயரைச் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார். (த-20)

# திருவாசகம் முற்றோதல்

அரியாலை, பெப். 4

யாழ்ப்பாணம் அரியாலை நீர்நொச்சித்தாழ்வு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தில் ஓதப்பட்டுவந்த திருவாசக முற்றோதல் இன்று செவ்வாய்க்கிழமை நிறைவுபெறவுள்ளது.

காலை 6.30 மணிக்கு திருவாசக முற்றோதல் ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து மதியம் மாகேஸ்வர பூசையுடன் நிறைவடையும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஜ)

# யோகா பயிற்சி

யாழ்ப்பாணம், பெப். 4

நாவலர் வீதி, நல்லூரில் அமைந்துள்ள தியாகி அறக்கொடை நிறுவனத்தின் சொர்ணாம்பிகை மண்டபத்தில் யோகா பயிற்சி வகுப்புக்கள் தொடர்ந்து 3 நாள்கள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 7 ஆம் திகதி தொடக்கம் 9 ஆம் திகதி வரை தினமும் மாலை 6.30 மணி தொடக்கம் 7.30 மணிவரையும் இந்தப் பயிற்சிகள் நடைபெறும். (க)




## மாதகல் தூய லூர்து அன்னை திருத்தல திருவிழா 16.02.2020

### கடைகளுக்கான இடங்கள் வழங்கல்

16.02.2020 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள தூய லூர்து அன்னை திருத்தல திருவிழாவின் போது வியாபார நடவடிக்கையில் ஈடுபடும் கடைகளுக்கான இடங்கள் 05.02.2020 ஆம் திகதி புதன்கிழமை காலை 9.30 மணிக்கு வழங்கப்படவுள்ளது.

கடைகளுக்கான இடங்களைப் பெற்றுக்கொள்ள விரும்புவோர் மாதகல் தூய லூர்து அன்னை திருத்தலத்துக்கு சமுகம் தந்து கடைகளுக்கான இடங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**மேலதிக தொடர்புகளுக்கு:-**

**077 612 0774, 077 189 9264**

**இலக்கத் தொலைபேசி இலக்கத்துக்குத் தொடர்பு கொள்ளலாம்.**

**பங்குத் தந்தையும், பங்கு மக்களும்.**

**மாதகல்.**

(CS/31025)(11,17)

## வெற்றி நோக்கிய எதிர்காலம்...

நமது IIS கல்வி வளாகம் தனது 25 ஆவது வருடத்திற்குள் இன்றைய தினம் காலடி எடுத்து வைக்கின்றது. IIS மாணவர்களாகிய நாம் மிகப் பெருமையடைகின்றோம். 25 வருடங்கள் தன் கல்விச் சேவையை வட மாகாணத்திலே ஆற்றியுள்ளது என்பது சாதாரண விடயமல்ல.

எமக்கு சிறந்த கல்விச்சூழல் மற்றும் கல்வித்தரம் மிக்க விரிவுரையாளர் குழாம் என வசதிகளை வழங்கி பல்வேறுபட்ட துறைகளில் மிகத் துடிப்புடன் கற்பதற்கான வாய்ப்பினை வழங்கியிருக்கின்றது. அத்துடன் நம்மை சிறந்த நற்பண்புகளுடன் கூடிய மாணவர் சமூகமாக உருவாக்கியதில் பெரும்பங்கு நமது கல்வி வளாகத்திற்கே உரியதாகும்.

எமக்கு கல்வி கற்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்கி எம் எதிர்காலக் கனவுகளை நனவாக்கப் போகும் எமது IIS கல்வி நிறுவனத்திற்கு மாணவர் சார்பில் எம் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

**-புதிய மாணவர்கள்.**

## அகவை அறுபது காணும் மணிவிழா நாயகனை வாழ்த்துகிறோம்

எமது பாடசாலையில் இருபத்தொரு வருடங்களாக அர்ப்பணிப்புடன் கடமையாற்றித் தனது அறுபது அகவையில் ஓய்வுபெறும் ஆசிரியர்

### திரு.தர்மராசா தயாளன்

### (SLTS - I)

### Sp.Trained Maths, B.Sc, PGDE,M.Ed




#### அதிபரின் வாழ்த்துச் செய்தி



கடந்த இரண்டு தசாப்தமாக யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் சிறப்பாகப் பணியாற்றி இன்று 04.02.2020 தனது பணியின் நிறைவில் ஓய்வுபெறும் த.தயாளன் ஆசிரியர் அவர்கள் இக்கல்லூரியின் சிரேஷ்ட ஆசிரியர்களில் ஒருவர் ஆவார்.

கல்லூரி சார்ந்த நிர்வாக அறிவுறுத்தல் களைப் பூரணமாக ஏற்றுத் தனது பணியை மிகச் சிறப்பாகச் செய்து முடிப்பவர். வளர்ந்து வரும் கணினித்துறை அறிவை தனது மூப்பு மத்தியிலும் சிறப்பாக இற்றைப்படுத்தி மாணவர்களுக்குச் சிறப்பாக கற்பித்து வந்தவர். கணினித் துறைக்கும் கடந்தகால அதிபர்களின் செயற்பாடுகளுக்கும் பக்கபலமாக இருந்தவர். இன்றுவரை தனது உடல் நலனைக் கருத்தில் கொள்ளாமல் கணினிக் கூடத்திலும், மைதானத்திலும் மாணவர்களுக்கு வழிகாட்டியாக இருந்து பணியாற்றியவர். அவரது அமைதியான சுபாவத்தால் எல்லோரது மனங்களிலும் இடம்பிடித்தவர். மிகக் குறைவான நேரத்தில் நிறைவான விளக்கத்துடனான சொற்களுடன் வினைத்திறனாகக் கற்பிக்க வல்லவர் என்பது இவரது கற்பித்தல் பற்றிய மாணவர்கள் பலரது கருத்தாகும். மத்தி யில் எம்மோடு சேர்ந்து சிறந்த பணி புரிந்து ஓய்வுபெறும் இந்நாளில் அவரது ஓய்வுகாலம் உடல், உள, ஆத்மீக நலனுடன் நிறைவாக அமைய வாழ்த்துகின்றேன்.

**கலாநிதி.சி.க.எழில்வேந்தன்**
**அதிபர்.**

#### கோட்டக்கல்விப் பணிப்பாளரின் உள்ளத்தில் இருந்து



தனது அயராத உழைப்பால் கல்வி கேள்வி களில் உயர்ந்து நின்ற எங்கள் ஆசிரியர் தர்மராசா தயாளன் அவர்கள் பரந்துபட்ட தமிழ்ப் பிரதேசமெங்கும் கல்விப் பயிர் வளர்த்த ஒருவர் என்பது நாம் அனைவரும் அறிந்ததே. அவர் நிறைவான சேவையின் நிறைவில் ஓய்வுபெறுவதையிட்டு கல்விச் சமூகம் சார்பாக அவருடைய நற்சேவையை பெருமகிழ்வுடனும், நன்றியுடனும் பாராட்டி நிற்கின்றேன். மூத்த அனுபவம் வாய்ந்த ஆசிரியராக உயர்ந்து வரும் மத்தியின் மைந்தர்களை வழிநடத்திச் சென்ற அவருடைய ஓய்வுகாலம் சிறக்கவும் இனிவரும் காலங்களிலும் அவருடைய நற்சேவை சமூகத்தில் தொடரவும் எல்லாம் வல்ல இறை ஆசியை வேண்டி நிற்கின்றேன்.

**சி.தேவகுமாரன்**
**கோட்டக்கல்விப் பணிப்பாளர்**
**கோட்டக்கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்.**

**சேவை விவரம்**

கிளி/ இராமநாதபுரம் வடக்கு மகா வித்தியாலயம் (21.04.1982 – 31.01.1985)
யா/ பலாலி ஆசிரியர் கலாசாலை (01.02.1985 – 31.12.1986)
யா/ ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம் (01.01.1987 – 31.06.1997)
யா/ ஆவரங்கால் மகாஜன வித்தியாலயம் - 01.07.1997 - 06.05.1999
யா/ யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி (07.05.1999 - இன்றுவரை)

ஆசிரியர் வட்டம் - யா யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.

#### உதவிக் கல்விப் பணிப்பாளரின் உள்ளத்திலிலிருந்து மகிழ்வுடன் வாழ்த்துகின்றேன்



மணிவிழாக் காணும் தர்மராசா தயாளன் ஆசிரியர் அவர்களுக்கு வாழ்த்துச் செய்தி வழங்கு வதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். ஆசிரியப் பணியில் தன்னை இணைத்துக் கொண்ட இவர், ஆரம்ப சேவையை வேறு பாடசாலைகளில் ஆற்றி, ஈற்றில் யாழ்ப்பாணத்தில் புகழ்பூத்த பாடசாலைகளில் ஒன்றாகத் திகழும் யாழ்.மத்திய கல்லூரியில் ஏறக் குறைய இருபத்தொரு வருடங்களாகத் தன் பணியைத் திறம்பட ஆற்றி வந்துள்ளார். கணிதம், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம், பொதுத் தகவல் தொழில்நுட்பம் ஆகிய பாடங்களை மாணவர்கள் ஆர்வத்துடன் கற்று சிறந்த பெறுபேறுகளை அடைவதற்கு வழிகாட்டினார். பாடசாலை சமூகத்திலும், மாணவர்களுடனும், பெற்றோர் மத்தியிலும் இவர் கொண்டிருந்த நல்லுறவு இவரது சேவையை மேலும் வலுவடையச் செய்தது. ஆசிரிய சேவையைத் தெய்வப் பணியாக ஏற்று அதற்கு எடுத்துக்காட்டாக விளங்கியவர். இவரது ஓய்வுகாலம் மகிழ்ச்சிகரமாக அமைய இறைவனை வேண்டுகின்றேன்.

**லாவண்யா சுகந்தன்**
**உதவிக்கல்விப் பணிப்பாளர் (விஞ்ஞானம்)**
**யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலகம்.**

#### ஆசிரியர் வட்ட தலைவரின் உள்ளத்தில் இருந்து



"பழகப் பழகப் பாலும் புளிக்கும் "என்பது பழமொழி ஆனால் தயாளன் ஆசிரியருடன் ஆழமாக பழகிய மூத்த ஆசிரியர்களினதும் அவரின் மாணவர்களினதும் அபிப்பிராயத்தின் படி இந்த பழ மொழி பொய்யாகி "தின்னத் தின்ன தித்திக்கும் " என்னும் கவிவரிக்கு பாத்திரமாக எம் தயாளன் ஆசிரியர் செயற்பட்டார் என்பதில் எமக்கு மட்டற்ற மகிழ்ச்சி. இவரது ஆசிரியத்துவதில் நாம் முத்துக்குளித்தபோது கிடைத்த முத்துக்களாக

1.கல்வி உலகின் மாற்றத்திற்கு ஏற்ப தன்னை மாற்றியவர். ஆம் இவர் கணித பாட ஆசியராக நியமனம் பெற்று ஏறத்தாழ இருபது வருடங்கள் தொடர்ச்சியாக பாடசாலையிலும் தனியார் கல்வி நிலையங்களிலும் சிறப்பான பெறுபேறுகளை மாணவர்களை பெறச் செய்து ஒரு முன்னணி ஆசிரியராக திகழ்ந்தவர். இருப்பினும் காலவோட்டத்தில் கணினி யுகத்தின் மாற்றத்திற்கு ஏற்ப தன்னை ஒரு தகவல் தொழில்நுட்ப ஆசிரியராக மாற்றி ஓய்வுவரை அப் பாடத்தை சிறப்புற கற்பித்து மாணவர் பெறுபேறை அதிகரித்தவர் .

2.தகவல் தொழில்நுட்பப்பாட ஆசிரியர்களுக்கான பயிற்றுவிப்பாளருக்காக தாய்லாந்தில் நடைபெற்ற 3 மாதகால வதிவிட பயிற்சியில் வடமாகாண கல்வியமைச்சின்சார்பாகப் பங்குபற்றிய பெருமைக்குரியவர்.

3. தகவல் தொழில் நுட்பம் சார்ந்த துறைகளில் தேசிய கல்வி நிறுவகம் ,வலய கல்வி அலுவலகம் ஆகியன முன்னெடுத்த பல செயலமர்வுகளில் எமது பாடசாலைக்கு சார்பான ஒரு வளவாளராக பங்குபற்றிய பெருமைக்குரியவர்

4.எதிலும் எப்போதும் எங்கேயும் எளிமையானவர் .

இவ்வாறு பல முத்து முத்தான சிறப்புக்களை தன்னகத்தே கொண்ட தயாளன் ஆசிரியர் ஓய்வு பெறுவது எமக்கும் மாணவர் சமூகத்திற்கும் ஒரு இழப்பே ஆகும் .இருப்பினும் சுற்று அறிக்கைகளின் படி ஓய்வு பெறுவது தவிர்க்க முடியாததே.இத்தருணத்தில் இவரது மீதமாகவுள்ள ஓய்வுக்காலம் ஓய்வில்லாத சந்தோஷங்களுடன் கழிய இறைவன் அருள் புரிய ஆசிரியர் வட்டம் சார்பாக பிரார்த்திக்கிறோம்

**தே . றே . கிங்ஸ்லி**
**தலைவர் ஆசிரிய[illegible] வட்டம்**

# கிராமப்புறப் பாடசாலைகளில் பழக்க வழக்கங்கள் சிறப்பு!

## பிரதிக் கல்விப் பணிப்பாளர் புகழாரம்



கொடிகாமம், பெப். 4

"நகர்ப்புறப் பாடசாலை மாணவர்களை விடவும், கிராமப்புறப் பாடசாலை மாணவர்களிடம் பழக்க வழக்கங்கள் சிறப்பான நிலையில் பேணப்படுகின்றன"

இவ்வாறு தென்மராட்சி வலய கல்வி அபிவிருத்திப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி சிவத்திரை சிவநாதன் தெரிவித்தார்.

பாடசாலையில் உள்ள அதிபர் ஆசிரியர்கள் மாறிச்செல்லலாம் பாடசாலை மாறாது. அது சமூகத்தினுடையது. அதனை வளர்த்தெடுக்க வேண்டியது சமூகத்தின் பொறுப்பு. இந்தப் பிரதேசத்தில் இருக்கக்கூடிய அனைத்து பிள்ளைகளும் இந்த பாடசாலைக்கு கூடிவரும்போதுதான் மாணவர்களுக்கு வளம் கிடைக்கும். இங்கு மாணவர்களுக்கான தேவைகள் அனைத்தும் படிப்படியாக நிறைவேற் றப்பட்டுக் கொண்டிருக்கின்றன. முக்கியமாக நவீன கற்றல் சாதனங்களுடனான திறன் வகுப்பறை உங்களுக்கு கிடைத்து ள்ளது. நகர்ப்புறப் பாடசாலைகளில் பிள்ளைகளின் பழக்க வழக்கங்களில் பிரச்சினைகள் இருக்கின்றன. ஆனால் கிராமப்புறப் பாடசாலைகளில் பிரச்சினைகள் குறைவு.

ஏனைய பாடசாலைகளுக்குச் செல்லும்போது இத்தகைய சந்தர்ப்பங்கள் உங்களுக்குக் கிடைக்காது. எனவே கிடைத்த சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். - என்றார். யாழ்ப்பாணம் எழுதுமட்டுவாழ் அ.த.க பாடசாலையின் வருடாந்த மெய்வன்மைப் போட்டி பாடசாலை அதிபர் கி. சந்திரகுமார் தலைமையில் இட்ம் பெற்றது.

நிகழ்வில் சிறப்பு விருந்தினராக பழைய மாணவியும் சாவகச்சேரி ஆதார மருத்துவமனை மருத்துவர் திருமதி விஜிதா மகேஸ், கௌரவ விருந்தினராக பழைய மாணவியும் வல்வெட்டித்துறை பிரதேச சபை உறுப்பினருமான திருமதி இராஜேஸ்வரி குணரட்ணம் மற்றும் அயற்பாடசாலை அதிபர்கள் கலந்துகொண்டனர்.

தவளைப் பாய்ச்சல், கலப்பு நீர் நிரப்புதல், 60 ,100, 200 மீற்றர்கள் ஓட்டம், செயற்பட்டு மகிழ்வோம், பந்து பரிமாறல், சக்கர அஞ்சல், சொத்து சேர்த்தல், தன்னைப் பாதுகாத்தல், கலப்பு அஞ்சல் பழைய மாணவர் நிகழ்வு மற்றும் விநாயகர் முன்பள்ளி கலைமகள் முன்பள்ளி சிறுவர்களின் இசையும் அசைவும் நிகழ்வுகளும் நடைபெற்றன.

கொரோனா நோயைப் பரப்பும் வைரஸ், சுகாதாரமற்ற உணவுகளை கடைகளில் வாங்கி சாப்பிடுவதால் கொரோனா நோய் ஏற்படுகிறது என்பதனை வெளிக்காட்டும் நிகழ்வு, உணவுகளை வீண்விரயம் செய்யக்கூடாது, செய்தால் எதிர்கால சந்ததியினருக்கு உணவில்லாது போகும். விழாக்களில் திருமண நிகழ்வுகளில் எஞ்சும் உணவுகளை சிறுவர் இல்லங்கள் ஆச்சிரமங்களுக்கு வழங்கினால் நன்மையளிக்கும் என்பதனை வெளிப்படுத்தும் முகமாக உணவக உரிமையாளர் வேடத்தில் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையிலான விநோத உடைப் போட்டிகளும் நடைபெற்றன.

(த-159)

## நிதியுதவிக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம்.பெப்.4

நிதி, பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சின் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையால் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கு நிதியுதவி வழங்குவதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

2019ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த ஊழியர் நம்பிக்கைப்பொறுப்புநிதியத்தினது அங்கத்தவர்களின் பிள்ளைகள் 5 ஆயிரம் பேருக்கு மேற்படிப்புக்காக ஒருவருக்கு 12 ஆயிரம் ரூபா வீதம் நிதியுதவி வழங்குவதற்கு ஊழியர் நம்பிக்கை பொறுப்புநிதியச் சபை தீர்மானித்துள்ளது.

விண்ணப்பங்களை www.etfo.lk இணையத்தின் மூலமும், நாளை 5ஆம் திகதி முதல் அலுவலக நேரங்களில் பிராந்திய அலுவலகங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

மார்ச் மாதம் 27ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும். புலமைப்பரிசில் உத்தியோகத்தர், புலமைப்பரிசில் பிரிவு ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபை, இல.92, கிருள வீதி, நாராஹேன்பிட்டி, கொழும்பு 5 என்ற முகவரிக்கு உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை அனுப்பி வைக்க முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

## தலையை பதம்பார்த்த இரும்பு

சாவகச்சேரி பெப். 4

இரும்புக் குழாய் தலையைத் தாக்கியதில் குடும்பப் பெண் பலத்த காயமடைந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

இரு பகுதியினருக்கிடையில் ஏற்பட்ட மோதலில் வீசப்பட்ட இரும்புக் குழாயே தாக்கியது என்று தெரிவிக்கப்பட்டது. (த-9)

# அபிவிருத்தியில் அனைவரும் ஒன்றிணைந்து பயணிப்போம்

## சுதந்திர தின வாழ்த்துச் செய்தியில் வடக்கு ஆளுநர்



யாழ்ப்பாணம்.பெப்.4

வடக்கு மாகாணத்தில் அபிவிருத்தி நோக்கிய பயணத்தில், அனைவரும் ஒருமைப்பாட்டுடன் இணைந்து பயணிப்போம் என்று வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் சுதந்திர தின வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஆளுநரின் ஊடகப்பிரிவால் அனுப்பப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையின் 72 ஆவது சுதந்திர தின வாழ்த்து தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். அபிவிருத்தியை நோக்கிய பயணத்தில் இலங்கையில் சுபீட்சம் மிக்க எதிர்காலம் தேசிய ஒருமைப்பாட்டுடன் சிறந்த தலைமைத்துவத்தின் கீழ் முன்நகர ஆரம்பித்துள்ளது.

வடக்கில் 30 வருடங்களுக்கு மேலாக நடைபெற்ற போரின் பாதிப்புகள், இழப்புக்களில் இருந்து பேண்தகு அபிவிருத்தியை அடைவதற்காக வாய்ப்புக்கள் கிடைத்துள்ளன. ஏனைய மாகாணங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள அபிவிருத்திக்கு இணையான வரப்பிரசாதங்களை வடக்கின் மக்கள் துரிதமாகப் பெற்றுக்கொள்வதற்கு அனைவரும் முழுமையாக தங்களைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும். நிலைபேறுடைய ஓர் அபிவிருத்திப் பயணத்தில் ஒருமைப்பாட்டுடன் அனைவரும் ஒன்றாக ஒன்றிணைந்து பயணிப்போம். என்றுள்ளது. (க)

## திருகோணமலையில் கவனவீர்ப்பு




கொழும்பு, பெப். 4

திருகோணமலை மாவட்டத்தில் கையளிக்கப்பட்டு கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடியலையும் சங்கம் திருகோணமலையில் உள்ள கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்துக்கு முன்னால் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டத்தை நடத்தியுள்ளது.

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு நீதி வேண்டும், நாமும் இலங்கை மக்கள்தான் எமக்கும் சுதத்திரம் வேண்டும், எமக்கு சரியான நீதி வேண்டும், எமது பிள்ளைகளை விடுதலை செய் என்ற பதாகைகளை ஏந்தியவாறு அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (ம)


மன்னார்,பெப்.4

மன்னார் சித்திவிநாயகர் இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி கடந்த வியாழக்கிழமை பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது.

கல்லூரியின் அதிபர் தனேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சிறப்பு விருந்தினராக மன்னார் நகர் பிரதேச செயலாளர் பிரதீப், கௌரவ விருந்தினர்களாக வடக்கு மாகாண கிரிக்கெட் சம்மேளன தலைவர் ரதீபன் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ஜ-60)



# மைத்திரிக்கு எதிராக பூஜித் மனுத் தாக்கல்!



**கொழும்பு, பெப்.4**
**பொலிஸ் மா அதிபர் பதவியில் இருந்து நீக்கு வதற்கான முடிவுக்கு எதிராக பூஜித் ஜயசுந்தர தாக்கல் செய்த அடிப்படை உரிமைகள் மனு வில் பிரதிவாதியாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை பெயரிட உயர்நீதி மன்றம் அனுமதி வழங்கியுள்ளது.**

பிரதம நீதியரசர் ஜயந்த ஜெயசூ ரிய மற்றும் நீதிபதிகள் எஸ். துரைராஜா மற்றும் காமினி அம ரசேகர ஆகியோர் அடங்கிய மூன்று பேர் கொண்ட நீதிமன்ற அமர்வே இந்த முடிவை நேற்று அறிவித்துள்ளது.

தனக்கு கட்டாய விடுமுறை வழங்கிய ஜனாதிபதியின் தீர்மா னத்தை இரத்து செய்ய வேண் டும் என்று கோரி, பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவால் இந்த அடிப்படை உரிமை மனு தாக்கல் செய்யப்பட்டது.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன அவரை பதவி யில் இருந்து நீக்குவதன் மூலம் அரசமைப்பின் விதி களை மீறியுள்ளார் என்று அந்த மனுவில் குறிப்பிடப்பட் டுள்ளது.

மனுவின் பிரதிவாதிகளாக பதில் பொலிஸ்மா அதிபர் சந்தன விக் ரமரத்ன, அரசமைப்பு சபை உறுப்பினர்கள், முன்னாள் பாதுகாப்பு செயலாளர் ஹேம சிறி பெர்னாண்டோ மற்றும் சட் டமா அதிபர் டப்புலா டி லிவேரா ஆகியோரும் பெயரிடப்பட் டுள்ளனர்.

இந்த நிலையில் பூஜித் ஜயசுந் தர தாக்கல் செய்துள்ள அடிப் படை உரிமை மனு எதிர்வரும் மே மாதம் 26 ஆம் திகதி பரிசீல னைக்கு எடுத்துக்கொள்ளப்பட வுள்ளது. (எ)



# தமிழ்க் கீதம் மிக அவசியம்

## மனோ வலியுறுத்தல்

கொழும்பு, பெப். 4
இலங்கையின் சுதந்திர தின வைபவத்தில் தமிழ்மொழியில் தேசிய கீதம் பாடப்பட வேண்டும் என முன்னாள் அமைச்சர் மனோ கணேசன் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவிடம் பகிரங்கக் கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கையின் 72ஆவது சுதந்திர தினம் இன்று கொண்டா டப்படவுள்ளது. இந்த நிலையில் சுதந்திர தினத்தில் தமிழில் தேசிய கீதம் பாடப்படமாட்டாது என அறிவிக்கப்பட்டிருந்தது. இதற்கு பலரும் எதிர்ப்பு வெளியிட்டு வரும் நிலையில், முன்னாள் அமைச்சர் மனோ கணேசன் தனது ருவிட்டர் தளத்தின் மூலம், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவிடம் இந்தப் பகிரங்கக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

குறித்த பதிவில், 'முன்னாள் தேசிய ஒருமைப்பாடு, அரசகரும மொழிகள் அமைச்சர் என்ற முறையில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவிடம் இந்தக் கடைசி த்ருணத்திலாவது நல்ல முடிவை நீங்கள் எடுக்க வேண்டும் என்று கோர விரும்புகிறேன். இலங்கையில் சுதந்திர தின வைபவத்தில் தமிழ் மொழியில் தேசிய கீதம் பாடப்படும் கடந்த நான்கு வருட நடைமுறையை உங்கள் நிர்வாகம், மாற்றி விடக்கூடாது என நான் விரும்புகிறேன். தமிழ் மொழியில் பாடப்படும் தேசிய கீதம் என்பது இன்னொரு வழமையான பாடல் அல்ல. அது தமிழ் பேசும் இலங்கையர்களின் 'இலங்கை யர் அடையாளம்'. இதுதான் இன்றைய கால கட்டத்தின் தேவை' என்று குறிப்பிட்டுள்ளார். (ம)



# உணவுகள் மூலம் பரவாது கொரோனா

கொழும்பு, பெப். 4
கொரோனா வைரஸ் எந்தவொரு உணவு பொருள்கள் ஊடாகவும் பரவாது என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. எனவே இந்த விட யம் குறித்து அச்சம் கொள்ளத்தேவையில்லை என்றும் அந்த அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளான நோயாளியின் சளி உடலுக்குள் சென்று, தும்மல் அல்லது வேறு வழிகளில் நோயாளியின் தொற்று, வேறு ஒருவரின் உடலுக்குள் செல்வ தன் காரணமாகவே கொரோனா வைரஸ் தொற்று பரவுவதாக சுகாதார அமைச்சு மக்க ளுக்கு அறிவுறுத்தியுள்ளது. (ம)



# சுதந்திர தினத்தில் இமாலயக் கொடி!

கொழும்பு, பெப். 4
இலங்கையின் 72ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு 500அடி நீளமும் 30அடி அகலமும் கொண்ட தேசியக் கொடி உருவாக்கப்பட்டுள்ளது. வளமான தேசம், பாதுகாப்பான நாடு என்னும் தொனிப்பொருளில் இம்முறை தேசிய சுதந்திர நாள் கொண்டாடப்படவுள்ள நிலையில், இலங்கையின் மிகப்பெரும் தேசியக்கொடி சீதா வகபுரவில் உள்ள விகாரை ஒன்றில் உருவாக்கப் பட்டுள்ளது. (ம)

# கோழிகளைக் காக்க 3 இளைஞர்கள் சாவு

கொழும்பு, பெப். 4
அவிசாவளை சீதாவக்க பகுதியில் கைவிடப் பட்ட சுரங்கம் ஒன்றில் விழுந்து மூன்று இளை ஞர் கள் உயிரிழந்தனர். குறித்த சுரங்கத்தில் விழுந்திருந்த இரண்டு கோழிகளை காப்பாற்ற குறித்த மூவரும் முனைந்துள்ளனர். இதை யடுத்து மூவருக்கும் மூச்சுத் திணறல் ஏற்பட் டுள்ளது. மூவரும் அவிசாவளை மருத்துவ மனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள் ளனர். சம்பவத்தில் 17, 27 மற்றும் 25 வயதா னவர்களே உயிரிழந்துள்ளனர். (ம)

# சுதந்திர தினத்துக்காக வீதிகளுக்குப் பூட்டு!

கொழும்பு, பெப். 4
கொழும்பின் சில வீதிகள் நேற்று திங்கட்கிழமை சில மணிநேரங்கள் மூடப்பட்டன. காலை 7 மணிமுதல் மதியம் 12 மணிவரை அவ்வாறு வீதிகள் மூடப்பட்டி ருந்தன.

72ஆவது சுதந்திர தினம் இன்று கொண்டாடப்பட வுள்ள நிலையில், சுதந்திரத் தினக் கொண்டாட்ட ஒத் திகை நடவடிக்கைகள் காரணமாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. அதன்படி, நிதஹஸ் மாவத்தை, வித்யா மாவத்தை, மெட்லான் பிளேஸ், மெட்லான் கிரசண்ட், சீ.டபிள்யூ.பி கன்னங்கரா மாவத்தை, மார்கஸ் பெர்னாண்டோ மாவத்தை, பதனம் வீதி, விஜேராம வீதி ஹோர்டன் சுற்றுவட்டம் வரை இவ்வாறு மூடப்பட்டது. (ம)

# மீட்கப்பட்ட மாணவர்களுக்கு தொடர்கின்றது 'சோதனை'

கொழும்பு, பெப். 4
கொரோனா வைரஸ் பரவல் கார ணமாக சீனாவின் வுஹான் நகரத் தில் இருந்து அழைத்து வரப்பட்ட 33 இலங்கை மாணவர்கள் ஆரம்பகட்ட மருத்துவ பரிசோத னைகளின் பின்னர் தியத்தலாவ இராணுவ முகாமின் விசேட தங்கு மிட நிலையங்களில் தங்க வைக் கப்பட்டுள்ளனர். இரண்டு வார காலத்துக்கு அங்கு தங்க வைக்கப் படவுள்ள அவர்களின் உடல்நிலை குறித்து மணித்தியாலத்துக்கு ஒரு முறை பரிசோதிக்கப்பட்டு வருகின் றது.

அதேவேளை, வுஹான் மாகா ணத்தில் அடைபட்டிருந்த 33 மாணவர்களையும் இலங்கைக்கு அழைத்துவந்த பிரதான இரண்டு விமானிகள் உள்ளிட்ட 16 பேர் அடங்கிய குழுவினருக்கு சமூக வலைத்தளங்களில் பாராட்டுக்கள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன. வைரஸின் வீரியத்தைக் கண்டு கொள்ளாமல் இலங்கை பிரஜை களை காப்பாற்ற அவர்கள் சுய மாக முன்வந்து வுஹான் பகுதிக்கு சென்று மாணவர்களை மீட்டு வந் தனர்.

வுஹான் பகுதிக்கு செல்ல முன்னர் அவர்கள் விசேட உடல் பரிசோத னைக்கு உட்படுத்தப்பட்டனர். அத் துடன் நோயாளர்களை பராமரிக்க வேண்டிய விதம் குறித்தும் அந்த விமானக் குழுவுக்கு விசேட பயிற் சிகள் வழங்கப்பட்டிருந்தன. (ம)



# இன்றைய நாள்



**மேடம்:** நற்செயலை சிலர் கேலி செய்வர். நிதானித்து பேசுவதால் நன்மை கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் நிலுவைப் பணியை நிறைவேற்றுவது நல்லது. சீரான அளவில் பணவரவு இருக்கும்.



**இடபம்:** பேச்சில் மங்கலத் தன்மை நிறைந்திருக்கும். நல்லோரின் நட்பு கிடைக்க வாய்ப்புண்டு. தொழில், வியாபாரம் செழித்து வளரும். பணவரவுடன் நன்மையும் அதிகரிக்கும்.



**மிதுனம்:** கடந்த கால கசப்பான நிகழ்வுகளை பிறரிடம் சொல்ல வேண்டாம். செயல்களில் முன்யோசனை அவசியம். தொழில், வியாபார வளர்ச்சிக்கு கூடுதலாக பணிபுரிவீர்கள்.



**கடகம்:** உடல் ஆரோக்கியம் பலம் பெறும். கடினமான பணியை எளிதாக நிறைவேற்றுவீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். வீட்டு உபயோகப் பொருள் வாங்குவீர்கள்.



**சிம்மம்:** பலரும் அன்பு பாராட்டுவர். மனதில் புதிய உத்வேகம் உருவாகும். தொழில், வியாபாரம் செழித்து வளரும். உபரி பண வருமானம் கிடைக்கும். எதிர்பார்த்த சுப செய்தி வந்து சேரும்.



**கன்னி:** செயல்களில் அக்கறையும், கவனமும் வேண்டும். மனைவியின் ஆலோசனை நல்வழியில் நடக்க உதவும். தொழில், வியாபார வளர்ச்சிக்கு தேவையான மாற்றத்தை செய்வீர்கள்.



**துலாம்:** எதிராக செயல்படுபவரிடம் இருந்து பெருந்தன்மையுடன் விலகுவது நன்மை தரும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிக்கான பணி நிறைவேறும். பணவரவை விட செலவு அதிகரிக்கும்.



**விருச்சிகம்:** சமூகத்தில் மதிப்பு உயரும். நீண்ட கால லட்சியத்தை நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி நிலை திருப்திகரமாகும். தாராள அளவில் பணவரவு கிடைக்கும்.



**தனுசு:** வசீகர பேச்சால் அனைவரையும் கவர்வீர்கள். புதியவர் உடன் நட்பு ஏற்படும். தொழில், வியாபாரம் செழிக்க அனுகூல காரணி பலம் பெறும். உபரி பணவருமானம் கிடைக்கும்.



**மகரம்:** மனம் புகழ்ச்சியை விரும்பும் சூழல் உருவாகும். சுறுசுறுப்புடன் செயல்களை முடிப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் சிறு குளறுபடி தோன்றி பின்னர் மறையும்.




**கும்பம்:** சிரமங்களுக்காக மனம் வருந்த வேண்டாம். குடும்பத்தினரின் ஆதரவு நம்பிக்கை தரும். பிள்ளைகள் விரும்பிய பொருளை வாங்கிக் கொடுப்பீர்.



**மீனம்:** சிரமமான சூழ்நிலை மாறும். எண்ணத்திலும், செயலிலும் உத்வேகம் பெறுவீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். கடனில் ஒரு பகுதியை செலுத்துவீர்கள்.

# கொரோனாவை கட்டுப்படுத்தும் தாய்லாந்தின் முயற்சி வெற்றி!



நியூயோர்க், பெப்.4

கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்கான நோயாளி ஒருவர் அந்த நோயில் இருந்து குணமடைந்ததை அடுத்து, அவருக்குப் பயன்படுத்திய புதிய மருந்துக் கலவையை இரண்டாவது நோயாளிக்கும் வழங்கத் தாய்லாந்து அதிகாரிகள் நடவடிக்கைகள் எடுத்துள்ளனர் என்று சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. கொரோனோ வைரஸ் தாக்கத்துக்கு தாய்லாந்தில் 19 பேர் இலக்காகியுள்ளனர்.

அவர்களின் ஒருவருக்கு புதிய மருந்து கலவை ஒன்றை தாய்லாந்து மருத்துவர்கள் வழங்கியிருந்தனர். எச்.ஐ.வி. தடுப்பு மருந்து மற்றும் காய்ச்சலுக்கு பயன்படுத்தும் மருந்து என்பவற்றைக் கொண்ட மருந்துக் கலவையே வழங்கப்பட்டது என்று கூறப்படுகின்றது.

இந்தச் சிகிச்சை வெற்றியளித்துள்ளதை அடுத்து தாய்லாந்து அதிகாரிகள் இந்த மருந்துக் கலவையை ஏனையோருக்கும் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளனர் என்று கூறப்படுகின்றது. கொரோனா வைரஸ் நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்கும் மருத்துவர்களில் ஒருவரான டாக்டர் கிரியாங்சாக் அதிபோர்ன்விச் கூறுகையில், இந்த மருந்துகளின் கலவையுடன் சிகிச்சையளிக்கப்பட்ட இரண்டாவது நோயாளியின் நிலையை தீர்மானிக்க அதிகாரிகள் சோதனை முடிவுகளுக்காக காத்துள்ளனர் என்று தெரிவித்துள்ளார். (எ)



# சீனாவை மிரட்டும் பறவைக் காய்ச்சல்

பீஜிங், பெப்.4

கொரோனா வைரஸ் தாக்கத்தால் சீனா பெரும் இக்கட்டில் உள்ள நிலையில், அங்குள்ள மாகாணம் ஒன்றில் பறவைக் காய்ச்சல் தொற்று அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

சீனாவின் வுஹான் மாகாணம் கொரோனா வைரஸ் தாக்கத்தால் தனிமைப்படுத்துப் பட்டுள்ளது. தற்போது அந்த மாகாணத்தில் இருந்து 350 மைல் தொலைவில் உள்ள ஹுனானின், ஷாயாங் நகரில் பறவைக் காய்ச்சல் தொற்று அதிகரித்துள்ளது என்று கூறப்படுகின்றது.

அங்குள்ள பண்ணைகளில் பறவைக் காய்ச்சல் தொற்று அதிகரித்துள்ளது என்றும், ஒரு பண்ணையில் மட்டும் 7 ஆயிரத்துக்கும் அதிகமான கோழிகளில் இந்தத் தொற்று இனங்காணப்பட்டுள்ளது என்றும் சீன வேளாண்மை மற்றும் கிராம விவகார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

நோய் பரவுவதைத் தடுப்பதற்காக சீன அதிகாரிகள் ஏற்கனவே 17 ஆயிரத்து 828 பறவைகளை அகற்றி பண்ணைகளை கிருமி நீக்கம் செய்து சீல் வைத்துள்ளனர். இந்த நோய் மனிதர்களை எளிதில் பாதிக்காது என்றாலும் இந்தத் தொற்று காரணமாக உலகம் முழுவதும் பலர் இறந்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட பறவைகள் அல்லது இறந்த பறவைகளிடமிருந்து நெருங்கிய தொடர்பு ஏற்படும் போது இந்தக் காய்ச்சல் மனிதர்களுக்கு தொற்றுநோயாக மாறும் அபாயம் உள்ளது. மக்கள் இந்த நோயால் பாதிக்கப்படும்போது, இறப்பு விகிதம் சுமார் 60 சதவீதமாக உள்ளது என உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது. (எ)



# அசுர வேகத்தில் சீனாவில் கட்டப்பட்டது மருத்துவமனை

## கொரோனா தொற்றுக்குள்ளான மக்களுக்கு சிகிச்சைகள் ஆரம்பம்

பீஜிங், பெப்.4

கொரோனா வைரஸ் தொற்றால் நாளுக்கு நாள் சீனாவில் உயிரிழப்புகள் அதிகரித்துள்ள நிலையில் அங்கு, புதிதாக மருத்துவமனை ஒன்று அமைக்கப்பட்டுத் திறக்கப்பட்டுள்ளது.

இந்த மருத்துவமனை 25 ஆயிரம் சதுர மீற்றர் பரப்பளவில் ஆயிரம் படுக்கை வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது. மருத்துவமனையின் கட்டுமானங்கள் 8 நாள்களில் முடிக்கப்பட்டுள்ளன.

கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாப்பதற்காகச் சிறப்பு வசதிகளை கொண்ட மருத்துவமனை உருவாக்கப்படும் என்று கடந்த ஜனவரி 23ஆம் திகதி சீனா அறிவித்தது.

தற்போது அந்த மருத்துவமனையின் கட்டுமானங்கள் நிறைவு செய்யப்பட்டு, இந்த மருத்துவமனை பாவனைக்காக வழங்கப்பட்டுள்ளுது. வைரஸ் நோய் தொற்று பாதிப்பு உள்ளவர்களை கண்காணித்து உரிய மருத்துவ சிகிச்சை மேற்கொள்ளும் விதமாக ஆயிரத்து 400 மருத்துவ ஊழியர்கள் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

அதேவேளை, முதலாவது சிறப்பு மருத்துவமனையில் இருந்து 25 மைல் தொலைவில் லீய்சின்ஷான் பகுதியில் மற்றொரு சிறப்பு மருத்துவமனையை ஏற்படுத்தும் பணியை சீன அரசு மேற்கொண்டு வருகிறது. (எ)



# லண்டனில் கத்திக் குத்து நடத்தியவர் சூட்டில் சாவு

லண்டன், பெப்.4
பிரிட்டன், தலைநகர் லண்டனின் தெற்கு பகுதியில் வீதியில் பயணித்தவர்கள் மீது கத்தி கொண்டு தாக்குதல் நடத்தப்பட்டுள் ளது. தாக்குதல் நடத்தியவர் மீது பொலி ஸார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் அவர் கொல்லப்பட்டார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது.

கத்தி கொண்டு நடத்தப்பட்ட தாக்குதலில் பொதுமக்கள் 3 பேர் காயமடைந்துள்ள னர். அவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
தாக்குதல் நடத்தியவர் இனங்காணப்பட் டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் நடக்கின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ)




# இறுதிச் சடங்கில் சூடு: 2 பேர் பரிதாபச் சாவு

நியூயோர்க், பெப்.4
அமெரிக்காவில் தேவாலயத்தில் மர்ம நபர் நிகழ்த்திய துப்பாக்கிச்சூட்டில் 15 வயதுச் சிறுவன் உட்பட 2 பேர் சம்பவ இடத்திலேயே பரிதா பமாக உயிரிழந்த னர்.
அமெரிக்காவின் புளோரிடா மாகா ணத்தில் உள்ள கடற்கரை நகரமான ரிவியராவில் உள்ள தேவாலயம் ஒன் றில் கடந்த சனிக்கி ழமை மதியம் இறுதி சடங்கு ஒன்று நடந் தது. அதில் பலர் கலந்து கொண்ட னர். இறுதிச் சடங்கு முடிந்த பின்னர் அங்கிருந்தவர்கள் கலைந்து சென்ற சமயம் அங்கு வந்த ஒருவர் சரமாரியா கத் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளார்.
அதில் 15 வயதுச் சிறுவன் உட்பட 2 பேர் சம்பவ இடத்தி லேயே உயிரிழந்த னர்.
இன்னொரு சிறுவ னும், ஒருபெண்ணும் படுகாயம் அடைந்த னர். துப்பாக்கிச் சூடு நடத்தியவர் அங்கி ருந்து தப்பியோடி யுள்ளார். அவரைக் கைது செய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட் டுள் ளன என பிராந்தியப் பொலிஸார் தெரி வித்தனர். (எ)

எமது உள்ளத்தில் வாழும் அன்புத் தெய்வத்தின்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் பாலசிங்கம் சத்தியேந்திரா
(வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம், சுவிஸ்)



தோற்றம்
06 . 09 . 1963

மறைவு
15 . 01 . 2019

குடும்பத்தின் குலவிளக்கே தலைமகனே!
எங்கள் வானத்தின் முழுநிலவே
ஐயா நீ மறைந்து
ஆண்டு ஒன்று ஆனதுவோ?
அழியா நினைவோடு
ஆறாத் துயரோடு உள்ளம் உடைந்து
விழிநீர் சொரிந்து நிதம்
வேதனையில் வாடுகின்றோம்
நல்லூரான் திருவடியில்
நாயகனே அமைதி கொள்வாய்.
ஓம் சாந்தி!

திதி:- தைமாத வளர்பிறைத் தசமி (04.02.2020)

பிரிவால் துயருறும்

20, பீ.ஏ.தம்பி ஒழுங்கை,
வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம்.
(CS32683)(11.17)
குடும்பத்தினர்.

### தனியார் கல்வித்துறையின் மகுடமாய்...

25 வருட வெள்ளி விழாவை கொண்டாடுகின்ற IIS கல்வி நிறுவனத்திற்கு அதனுடைய விரிவுரையாளர் குழாத்தின் மனம் நிறைந்த வாழ்த்துக்கள்.
IIS இன் நீண்ட கல்விப்பயணத்திலே அதனுடைய விரிவுரை யாளர்களாக எம்மை இணைத்து பெருமைப்படுத்தியமைக்கு எமது நன்றிகள். இங்கு வினைத்திறன் மிக்க முகாமையின் வழிநடத்தலில் பணிபுரியக்கூடிய வாய்ப்பினை பெற்றுக்கொண்டது மட்டுமல்லாமல் சந்தர்ப்பங்களை நழுவவிட்ட மாணவர்களிற்கு சிறந்த எதிர் காலத்தை உருவாக்கும் செயற்பாட்டில் விரிவுரையாளர்களாக எம்மை இணைத்துக்கொள்ளும் உயரிய சந்தர்ப்பத்தைப் பெற்றுக் கொண்டுள்ளோம். அத்துடன் புதிய கல்விமுறைமைகளினூடு வெவ்வேறுபட்ட நிலைகளில் கற்பித்தலை மேற்கொள்ளக் கூடியவா றான அனுபவத்தினையும் IIS கல்வி நிறுவனத்தில் பெற்றுக் கொண்டுள்ளோம் என்றால் மிகையாகாது
எமது IIS இன் கல்விச்சேவை மென்மேலும் சிறக்க வாழ்த்து கின்றோம்.

- விரிவுரையாளர்கள்

## 31ஆம் நாள் நினைவு அஞ்சலி



தோற்றம்
16 . 06 . 1940

மறைவு
05 . 01 . 2020

கடந்த 05.01.2020 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி

அமரர் இராசையா குலமணிதேவி

அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (04.02.2020) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்வில்கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பழைய பொலிஸ் நிலைய வீதி,
சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம்.
(CS31032)(11.17)
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்


### கிறிஸ்தோப்பர் லெஸ்லி வலன்ரைன்



சில்லாலையைப் பிறப்பிடமாகவும் மயிலங்கூடல் இளவாலையை வசிப்பிடமாகவும் கொண்ட கிறிஸ்தோப்பர் லெஸ்லி வலன்ரைன் கடந்த 02.02.2020 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்ற கிறிஸ்தோப்பர் - ஜெயமணி விருசித்தம்மா தம்பதிகளின் மூத்த மகனும், காலஞ் சென்ற பிலிப்பையா - மாக்கிரட் தம்பதிகளின் அருமை மருமகனும், மேரி ஜெயராணியின் அன்புக் கணவரும் ஆவார்.
அன்னாரின் பூதவுடல் இன்று (04.02.2020) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் நல்லடக்க ஆராதனைக்காக சேந்தாங்குளம் ஆரோக்கியநாதர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு சேந்தாங்குளம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 959 1465, 077 087 8452 (CS/20095)(11.17) தகவல்:- மனைவி.

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர்.கணபதிப்பிள்ளை புலேந்திரன்**
(உரிமையாளர் V.M. கணபதிப்பிள்ளை ஜுவல்லர்ஸ்,
V.M.K.கிறேசர் – சாவகச்சேரி)

**மலர்வு** 04.05.1953 **உதிர்வு** 26.01.2018

திதி:- தைத்தசமி (04.02.2020)

அன்புள்ள அப்பா!
திங்கள் இருபத்து நான்கு
தெரியாமல் போயிற்றே!
உங்கள் நினைவால்
உருகி அழுகின்றோம்
எங்கள் ஒளி விளக்கே
எமைவிட்டு எங்குற்றீர்?
கங்குல் மறையக்
கதிரொளி காட்டீரோ?
அரும்பொடு மலர்கள் கொண்டு
அனுதினம் உமை நினைந்து
விரும்பி நல் விளக்கு தீபம்
வீடெல்லாம் ஏற்றி வைத்து
நொருங்கியே இதயம் நொந்து
நோக்குகிறோம் திசைகள் எட்டும்
திரும்பி வர மாட்டீரோ?
திருமுகம் காட்டீரோ?

கண்டிறோட்
சாவகச்சேரி.

**குடும்பத்தினர்.**

## வேலையாள்கள் தேவை

1.றொட்டி மேக்கர்( ஆண்)
2.சமையல் வேலையாள்கள் (பெண்கள்)

**075 828 3635**

## தேவை

HONDA SUPER CUB CUSTOM 50 OR
HONDA SUPER CUP CUSTOM 90

**077 939 8120**

## வேலையாள் தேவை

யாழ்.நகரில் இயங்கும்
பிரபல ஹோட்டல் ஒன்றுக்கு
30 - 45 வயதுக்கு
உட்பட்ட சமையலாளர்
**( Chef )** தேவை.
யாழ்நகரில வசிப்பவர்கள்
விரும்பத்தக்கது.

**021 222 1356**

## விற்பனைக்கு

புதிய Honda CBR 250 R மோட்டார்
சைக்கிள் விற்பனைக்குண்டு.
NP BHT #### வேறு மோட்டார்
சைக்கிளுடன் மாற்றிக் கொள்ளவும்
முடியும்.

**077 496 8391**

## வேலையாள்கள் தேவை

ஆடியபாதம் வீதி, திருநெல்வேலியில்
உள்ள மல்ரிசொப் ஒன்றுக்குப்
போட்டோ பிரதி எடுப்பதற்குப்
பெண் வேலையாள்கள் தேவை.

**077 886 9202, 076 257 3867**

## தேவை

யாழ்.நகரை அண்டிய
பகுதியில் அறை ஒன்று
வாடகைக்குத் தேவை.

**070 141 8002**

## தனியார் கல்வித்துறையின் மகுடமாய்...

25 வருட வெள்ளி விழாவை கொண்டாடுகின்ற IIS கல்வி நிறுவனத்திற்கு அதனுடைய விரிவுரையாளர் குழாத்தின் மனம் நிறைந்த வாழ்த்துக்கள்.

IIS இன் நீண்ட கல்விப்பயணத்திலே அதனுடைய விரிவுரையாளர்களாக எம்மை இணைத்து பெருமைப்படுத்தியமைக்கு எமது நன்றிகள். இங்கு வினைத்திறன் மிக்க முகாமையின் வழிநடத்தலில் பணிபுரியக்கூடிய வாய்ப்பினை பெற்றுக்கொண்டது மட்டுமல்லாமல் சந்தர்ப்பங்களை நழுவவிட்ட மாணவர்களிற்கு சிறந்த எதிர் காலத்தை உருவாக்கும் செயற்பாட்டில் விரிவுரையாளர்களாக எம்மை இணைத்துக்கொள்ளும் உயரிய சந்தர்ப்பத்தைப் பெற்றுக் கொண்டுள்ளோம். அத்துடன் புதிய கல்விமுறைமைகளினூடு வெவ்வேறுபட்ட நிலைகளில் கற்பித்தலை மேற்கொள்ளக் கூடியவாறான அனுபவத்தினையும் IIS கல்வி நிறுவனத்தில் பெற்றுக் கொண்டுள்ளோம் என்றால் மிகையாகாது

எமது IIS இன் கல்விச்சேவை மென்மேலும் சிறக்க வாழ்த்துகின்றோம்.

**- விரிவுரையாளர்கள்**

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,
மானிப்பாய்.

# கேள்வி கோரல்

## சபைநிதி வேலைத்திட்டம்.

1. தலைவர், உள்ளூராட்சி மன்றப் பெறுகைக்குழு, வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, தகுதியான தகமை வாய்ந்த விநியோகஸ்தர்களிடம் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட பெறுகைகளுக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட பெறுகை விண்ணப்பங்களை கோருகின்றார்.

**கேள்வி அட்டவணை**

| தொ. இல | விபரம் | மதிப்பீட்டுத் தொகை | கேள்வி வைப்பு பணம் (மீளளிக்க கூடியது) | ஒப்பந்த காலம் (நாள்கள்) |
|---|---|---|---|---|
| 1 | அப்பியாசக் கொப்பிகளும், கணித்தல் உபகரணமும் வழங்குதல் (Execise Book and Mathamatic Box) | 1.00Mn | 10,000.00 | 15 |

2. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. கேள்விபெற தகுதியுடையவராவதற்கு, கேள்விதாரர் கறுப்புப்பட்டியலில் சேர்த்துக்கொள்ளப்படாதவராகவும் பொருத்தமான வியாபாரப் பதிவை உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
3. மேலதிக விபரங்களை வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம். தொடர்புகளுக்கு 0212256650 / 0212255381 கேள்வி படிவத்தினை 05 பெப்ரவரி 2020 தொடக்கம் 17 பெப்ரவரி 2020 வரை காலை 09.00 மணிக்கும் 15.00 மணிக்கும் இடையில் பார்வையிடவும், மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 1000/- காசாக செலுத்தி பெற்றுக்கொள்ளவும் முடியும். கேள்வி படிவத்தினை பெற்றுக்கொள்வதற்கு கோரிக்கை கடிதத்துடன் வியாபார அனுமதி பத்திரத்தின் பிரதி சமர்ப்பிக்க வேண்டும்.
4. கேள்வி இரு பிரதிகளில் சமர்ப்பிக்கப்படவேண்டும். தலைவர், உள்ளூராட்சி மன்றப் பெறுகைக்குழு, வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய் எனும் முகவரிக்கு 18 பெப்ரவரி 2020 ஆம் திகதி பி.ப 14.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பவோ அல்லது எமது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் இடவோ முடியும். பிந்தியகேள்விகள் நிராகரிக்கப்படும்.
5. கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்தவுடன் வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவரது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
6. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித் திகதியில் இருந்து 77 (எழுபத்தி ஏழு) (11 மே 2020 வரை) நாள்கள் வரையும் செல்லுபடியாகும்.
7. கேள்விப்பத்திரத்தினை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் பெறுகைக் குழுவிற்கு உண்டு.

04.02.2020

அ.ஜெபநேசன்,
தலைவர்,
உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு,
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை
மானிப்பாய்

## சுதந்திர...

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் கொழும்பில் நேற்றுமாலை கூட்டம் இடம்பெற்றது. இந்தக் கூட்டத்திலேயே, சுதந்திர நாள் நிகழ்வில் பங்கேற்பதில்லை என்ற முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ தலைமையில் இடம்பெறும் தேசிய சுதந்திர நாள் நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பங்கேற்குமாறு ஜனாதிபதி செயலகம் அழைப்பு விடுத்திருந்தது. இது தொடர்பில் நாம் ஆராய்ந்தோம்.

சுதந்திர நாள் நிகழ்வில் கடந்த காலங்களில் தமிழ் மொழியிலும் தேசிய கீதம் இசைக்கப்பட்டு வந்தது. இம்முறை சிங்கள மொழியில் மாத்திரம் இசைக்கப்படும் என்று அரசு அறிவித்துள்ளது. தமிழ் மொழி புறக்கணிக்கப்பட்டுள்ளது.

தமிழர்களைப் புறக்கணிக்கும் வகையிலேயே கோத்தாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு செயற்படுகின்றது. ஜனாதிபதித் தேர்தலில் தனக்கு எதிராக வாக்களித்த தமிழ் மக்களை பழிவாங்கும் வகையிலேயே அவர் செயற்படுகின்றார். முழு நாட்டுக்கும் ஜனாதிபதியாகச் செயற்படுவேன் என்று கோத்தாபய கூறினாலும், அவர் தமிழர்களை, தனக்கு வாக்களிக்காத தமிழ் பேசும் மக்களைப் புறக்கணித்தே செயற்பட்டு வருகின்றார். இந்தக் காரணங்களால், இன்றைய சுதந்திர நாள் நிகழ்வைப் புறக்கணிக்கின்றோம்- என்றார்.

இதேவேளை இந்த விடயங்கள் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், நாடாளுமன்றத்தில் உரையாற்றவுள்ளார். (ஒ,5,22)

## மரக்கறி...

றும் சுப வைபவங்கள் மற்றும் விரத காலங்களில் இவ்வாறு மரக்கறி வகைகளின் விலை உச்சத்தைத் தொட்டுள்ளதால் மக்கள் பெரும் இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

ஒரு சில மரக்கறி வகைகளைத் தவிர, ஏனைய மரக்கறி வகைகள் யாவும் கிலோ 200 ரூபாவுக்கு மேலேயே விற்கப்படுகின்றன.

திருநெல்வேலிச் சந்தையில் நேற்றைய நிலவரப்படி கத்தரிக்காய் கிலோ 120 ரூபா, வெண்டிக்காய் கிலோ 120 ரூபா, பாகல் கிலோ 320 ரூபா, பயிற்றங்காய் கிலோ 280 ரூபா, கரட் கிலோ 480 ரூபா, லீக்ஸ் கிலோ 320 ரூபா, பீற்றூட் கிலோ 240ரூபா, போஞ்சி கிலோ 240 ரூபா, பச்சை மிளகாய் கிலோ 320 ரூபா, முருங்கைக்காய் கிலோ 1000 ரூபா, சின்னவெங்காயம் கிலோ 400 ரூபா, கீரை 1 பிடி 70 ரூபா என விற்பனை செய்யப்பட்டன.

தேங்காய் மற்றும் அரிசி போன்ற அத்தியாவசிய உணவுப்பொருள்களின் விலை அதிகரித்துள்ள சமகாலத்தில், மறுபுறமாக மரக்கறி வகைகளின் விலையும் கிடுகிடுவென ஏறிச் செல்வதால் , மக்களின் வாழ்க்கைச் சுமையைத் தாங்கமுடியாத நிலைக்குச் சென்றுள்ளதாக வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்கள் கவலை தெரிவித்தனர். (அ,ந-17)

## சுழற்சி...

எரிசக்தி அமைச்சு அறிவித்துள்ளது.

இதுதொடர்பில் அமைச்சு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

இலங்கை மின்சார சபைக்கு எரிபொருள் விநியோகத்துக்காக வழங்கப்பட்டிருந்த கடன் தொகை வரையறைக்கு மேலதிகமாக அதிகரித்ததன் காரணமாக இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இன்றைய தினம் (நேற்று திங்கட்கிழமை) கரவலப்பிட்டிய அனல் மின் நிலையத்துக்கு விநியோகிக்கப்படும் எரிபொருளை இடைநிறுத்துவதற்கு தீர்மானித்தது.

கரவலப்பிட்டிய அனல் மின் நிலையத்தின் மின்சார உற்பத்தி தடைப்பட்டது. இதன் காரணமாக தினமும் 2 மணித்தியாலங்கள் மின் விநியோகத்தை இடைநிறுத்துவதற்கு மின்சார சபை தீர்மானித்தது. இருப்பினும் இது தொடர்பில் உடனடியாக தலையிட்ட போக்குவரத்து முகாமைத்துவ மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் அமைச்சரவையின் அனுமதிக்கு உட்பட்ட வகையில் மின்சார சபைக்கு எரிபொருள் விநியோகத்தை தொடர்ச்சியாக முன்னெடுக்குமாறு இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கு ஆலோசனை வழங்கினார்.

இதற்கு அமைவாக மீண்டும் எரிபொருளை விநியோகிப்பதற்கு பெற்றோலிய கூட்டுத்தாபனம் தீர்மானித்தது. மின்சார சபையால் திடீரென ஏற்பட்ட நிலைமையின் அடிப்படையில் நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்ட 2 மணித்தியாலத்துக்கு மின்சாரத்தை இடைநிறுத்துவது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் இடைநிறுத்தப்பட்டுள்ளது. இதற்கு அமைவாக மீண்டும் தொடர்ச்சியாக மின்சாரத்தை பொதுமக்களுக்கு வழங்குவதற்கு இலங்கை மின்சார சபை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது - என்றுள்ளது. (ஒ,5)

## 512...

மன்னிப்பு வழங்கியுள்ளார்.

அரசமைப்பில் ஜனாதிபதுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படியும் நீதி, மனித உரிமைகள் மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவின் பரிந்துரையின்பேரிலும் பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது.

பொது மன்னிப்பு வழங்கப்பட்டவர்கள் திருட்டு, நம்பிக்கை மோசடி மற்றும் குடிபோதையில் வாகனம் ஓட்டுதல் போன்ற சிறிய குற்றங்களின் காரணமாக சிறைத் தண்டனை அனுபவித்து வருபவர்களாவர். கற்பழிப்பு, கொள்ளை, பாலியல் துர்நடத்தை மற்றும் இலஞ்சம் கோருதல் போன்ற பெரிய குற்றங்களுக்காக தண்டனை பெற்றவர்கள் எவரும் இந்தப் பட்டியலில் இல்லை. (ஒ,5)

## கூட்டமைப்பின்...

கருத்து அல்ல. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் மூன்று கட்சிகள் இருக்கின்றன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையைத் தெரிவு செய்வதில் மூன்று கட்சிகளுக்கும் பங்கு இருக்கின்றது. மூன்று கட்சிகளும் இணைந்தே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரைத் தெரிவு செய்கின்ற பொறுப்புடன் இருக்கின்றோம். இவ்வாறு ரெலோ அமைப்பின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழீழ விடுதலை இயக்கம் என்பது இன்றைக்கும் அரசியற் களத்தில் இருந்து கொண்டிருக்கின்றது. போராட்ட காலத்தில் சகோதரப் படுகொலைகள் மூலம் தமிழீழ விடுதலை இயக்கம் முற்றாக அழிந்து விட்டது எனப் பலரும் நினைத்த காலகட்டமும் இருந்தது. ஆனால் அதன் பின்பும் நாங்கள் விடுதலைப் புலிகளுடன் இணைந்து அரசியல் ரீதியில் எமது கடமைகளை மேற்கொண்டோம்.

ஒற்றுமையின் நிமித்தமும், ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் எந்தவொரு அமைப்பாக இருந்தாலும் அதனைப் பலவீனப்படுத்தக் கூடாது என்ற இரு காரணங்களுக்காகவுமே எமது செயற்பாடு அவ்வாறு இருந்தது. யார் இருக்கின்றார்களோ இல்லையோ தமிழீழ விடுதலை இயக்கம் அதன் பயணத்தைத் தொடரும். எம்மில் இருந்து விலகிச் சென்றவர்களால் நாம் பலவீனமாகிவிட்டோம் என்ற எண்ணம் எங்களைப் பொருத்தமட்டில் இல்லை.

ஜனாதிபதி ஒரு இனவாத அடிப்படையில் சிங்கள மக்களின் அனுமதியுடன் தான் எந்த முடிவுகளையும் எடுக்க முடியும் என்பதைத் தெளிவாக நாடாளுமன்றில் கூறியிருக்கின்றார். இந்த அரசும் பெரும்பான்மை மக்களின் வாக்குகளைப் பெற வேண்டும் என்ற ரீதியில் தமிழ், முஸ்லிம், மலையக மக்களின் சிந்தனைகளை அல்லது அவர்கள் சிங்கள மக்களைப் போன்று அத்தனை உரித்துக்களும் கொண்ட இனம் என்பதை கருத்திற்கொள்ளாத வகையில் செயற்படுகின்றது.

தற்போது கூடுதலாக சோதனைச் சாவடிகள் முளைத்திருக்கின்றன. அரச பணிகளில் கூடுதலாக ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரிகள் அமர்த்தப்பட்டுள்ளனர். இவ்வாறான செயற்பாடுகளை ஜனாதிபதியும், இந்த அரசும் செய்து வருகின்றது. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஒரு பெரும்பான்மை இன வேட்பாளருக்கு வாக்களித்து எமது மக்கள் தாம் இனவாதிகள் இல்லை என்பதை நிரூபித்திருக்கின்றார்கள். எமது வடக்கு கிழக்கு மக்கள் ஓரணியில் நின்று காட்டியிருக்கின்றார்கள். இதனை ஜனாதிபதியும் விளங்கிக்கொள்ள வேண்டும்.

இந்த நாட்டில் சகல உரித்துக்களும் கொண்ட தமிழ் பேசும் மக்களுடைய பிரச்சினைகளை அவர் கையாள வேண்டும். வெறுமனே சிங்கள மக்களின் வாக்குகளை மாத்திரம் மையமாக வைத்து அவர்கள் எதனையும்சாதித்து விட முடியாது. தமிழ் மக்கள், ஐக்கியமான இந்த நாட்டுக்குள்ளே எமது பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டும் என்று விரும்புகின்றார்கள் - என்றார். (ஒ,5)

## யாழ்...

ஆணைக்குழு வெளியிட்டுள்ளது.

நியமிக்கப்பட்ட 14 வெளிவாரி உறுப்பினர்களுடன் உள்வாரியாக பதவி வழி வரும் 13 உறுப்பினர்கள் அடங்கலாக 27 உறுப்பினர்களைக்கொண்ட புதிய பேரவையின் ஆட்சிக் காலம் தொடர்ந்து வரும் மூன்று ஆண்டுகளாகும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்துக்கு வெளிவாரியாக 16 உறுப்பினர்கள் நியமிக்கப்படவேண்டிய நிலையில் இம்முறை 14 உறுப்பினர்கள் மட்டுமே நியமிக்கப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வவுனியா வளாகம் வன்னி பல்கலைக்கழகம் என்று உருவாக்கப்படவுள்ள நிலையில் அந்த வளாகத்தின் மூன்று உள்வாரி உறுப்பினர்கள் நீங்கலாக, உள்வாரி உறுப்பினர்கள் 13 பேர் என்ற அடிப்படையில் பேரவைக்கு வெளிவாரியாக 14 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வாழ்நாள் பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை, பேராசிரியர் எஸ்.மோகனதாஸ், உத்விக் கல்விப் பணிப்பாளர் பஞ்சநாதன் சுதர்சன், கலாநிதி ஆறு. திருமுருகன், வெளிநாட்டு தூதரக மூன்றாம் நிலைச் செயலர் விதுர்சன் வின்சன்ற் ராஜாராம், சட்டத்தரணி ஆர்.ரி.விக்னராஜா (முன்னாள் மேல் நீதிமன்ற ஆணையாளர்), கலாநிதி சுரேன் ராகவன் (முன்னாள் வடக்கு மாகாண ஆளுநர்), நொத்தாரிசு மார்க்கண்டு திருவாதவூரன், பொறியியலாளர் விஸ்வலிங்கம் சுதாகர் (வீதி அபிவிருத்தி அதிகார சபை), தனியார் விவசாய நிறுவன முகாமைத்துவ பணிப்பாளர் குலேந்திரன் சிவராம், காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் வடக்கு மாகாணப் பணிப்பாளர் தில்லையம்பலம் விமலன், முன்னாள் மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு உறுப்பினர் பொன்னையா தியாகராசா, கணக்காளர் வி.கனகசபாபதி, கோடீஸ்வரன் ருசாங்கன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். (ஒ,5,105)











## அரசின்...

ரணையில் இயங்கிய ஆயுதக் கும்பலின் உறுப்பினரான சந்திரப்பெருமவை, சுவிஸுக்கான இலங்கையின் தூதுவராக அந்த நாடு ஏற்றுக் கொள்ளக் கூடாது. இவ்வாறு யஸ்மின் சூக்காவைத் தலைமையாகக் கொண்ட சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான அமைப்பு குற்றம்சாட்டியுள்ளது.

இது தொடர்பில் அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அந்தக் காலப் பகுதியில் தடிபிரியந்த என்று அழைக்கப்பட்ட சந்திரப்பெரும, இலங்கை இராணுவத்துடன் இணைந்து செயற்பட்டு சிங்கள இளைஞர்களின் எழுச்சியை ஒடுக்கிய ஆயுத குழுவான மக்கள் புரட்சிகர செம்படையின் உறுப்பினராக காணப்பட்டார். இலங்கை இராணுவத்துடன் இணைந்து செயற்பட்ட இந்த ஆயுதக் குழு பத்திரிகையாளர்கள், சர்வதேச மன்னிப்பு சபையின் பணியாளர்கள் உட்பட மனித உரிமை ஆர்வலர்களுக்கு உயிர் அச்சுறுத்தல் விடுப்பது வழமை என்று சர்வதேச அமைப்பு தெரிவித்துள்ளது. 1988 இல் மனித உரிமை சட்டத்தரணிகளான சரித்த லங்காபுர, காஞ்ஞான அப்ஹயபால ஆகியோரின் கொலைகள் தொடர்பில் சந்திரபெரும 2000ஆம் ஆண்டில் கைது செய்யப்பட்டார் எனவும் சர்வதேச அமைப்பு தெரிவித்துள்ளது. மூத்த பொலிஸ் அதிகாரியொருவர் சந்திரபெருமவே கொலையாளி என்று குறிப்பிட்டுள்ள சத்தியக்கடதாசியுள்ளது. சந்திரபெருமவுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்வதற்கான ஆதாரங்கள் எதுவுமில்லை என்ற அடிப்படையில் சட்டமா அதிபர்திணைக்களம் விடுவித்திருந்தது. அதன் பின்னர் அவர் அனைத்து அரசியல் கட்சிகளுடனும் நெருக்கத்தை ஏற்படுத்தினார். இதன் காரணமாக பாதுகாக்கப்பட்டார்.

துணிச்சலான மனித உரிமை பணியாளர்களை கொலை செய்தமைக்காக விசாரணைக்கு உட்படுத்தப்படாத நபர் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் இலங்கையைபிரதிநிதித்துவப்படுத்தப்படப் போகின்றமையை ஏற்றுக்கொள்ள முடியாத விடயமாக காணப்படுகின்றது. மனித உரிமை பேரவையின் அமர்வுகளில் கலந்துகொள்ளும் மனித உரிமை ஆர்வலர்களை அச்சுறுத்தும் வரலாறு இலங்கைக்கு உள்ளது. சந்திரப்பெரும போன்ற நபர் ஒருவர் ஜெனிவா தூதரகத்துக்குத் தலைமை தாங்குவது பாதுகாப்பற்றது.

அண்மைக்காலங்களில் சந்திரப்பெரும பத்திரிகையாளராக மாறினார். 2012 இல் இவர் இலங்கையின் போர்க்குற்றங்களை திட்டமிட்ட வகையில் மறைக்கும் தற்போதைய ஜனாதிபதியின் வாழ்க்கை வரலாற்றை எழுதினார் என்றுள்ளது. (ஓ.5)

## மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 03 | 01 |
| ... | ... |
| 12 | 02 |
| ... | ... |
| 1961 | 2020 |

### திருமதி புவனேந்திரன் சிவகாமசுந்தரி (சுந்தரி)


கொக்குவில் மேற்கு மஞ்சவனப்பதியினை பிறப்பிடமாகவும், ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புவனேந்திரன் சிவகாமசுந்தரி (சுந்தரி) கடந்த **(01.02.2020)** சனிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிவஞானசுந்தரம் மற்றும் பேபிசரோஜினி தம்பதியினரின் மகளும் காலஞ்சென்ற சின்னத்துரை புவனேஸ்வரி தம்பதியினரின் மருமகளும் புவனேந்திரனின் (குட்டி) அன்பு மனைவியும், நாகேந்திரா (அருண்), மிதிலா ஆகியோரின் அன்புத் தாயாரும் விஜித்தின் பாசமிகு மாமியும் அஜி, அஜய் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை **(05.02.2020)** புதன்கிழமை ஜேர்மனியில் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: உறவினர்கள்
புவனேந்திரன் (குட்டி) - 0049 9114 45908

## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 14 | 01 |
| ... | ... |
| 03 | 02 |
| ... | ... |
| 1934 | 2020 |

### கந்தையா தர்மராசா

யாழ் கோப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா தர்மராசா கடந்த **(01.02.2020)** சனிக்கிழமையன்று இறைவனடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா சின்னம்மா தம்பதிகளின் மூத்த மகனும் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை பொன்னம்மா தம்பதிகளின் மருமகனும் பூரணம் அவர்களின் அன்புக் கணவரும் கனகரத்தினம், காலஞ்சென்ற கார்த்தியேசு ஆகியோரின் அன்புச் சகோதரரும் யோகேஸ்வரி, மாணிக்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஜெயராஜா (ஜேர்மனி), காந்தராஜா (ஜேர்மனி), ஹெமசீலி (லண்டன்), கேதீஸ்வரராசா (சுவிஸ்), கேமலதா (இலங்கை), ஹெமசலா (இலங்கை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் மெனதா (ஜேர்மனி), தேன்மொழி (ஜேர்மனி), சிறீதரன் (லண்டன்), சத்தியப்பிரியா (சுவிஸ்), நித்தியானந்தநிதி (இலங்கை), சிவலிங்கம் (இலங்கை) ஆகியோரின் அன்பு மாமனாரும் மகிந்தன், வாசினி, தட்சாயினி, சாதுஜா, கருஷான், ரஷிகா, பவித்திரன், வித்தாரன், அட்சயா, அட்சயன், நிதுஜன், அபிநயா, கிருத்திகா, துஷிகா, கபிஷ்ரன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் **06.02.2020** வியாழக்கிழமை முற்பகல் **10.00** மணிக்கு அவரது கணபதிப்புலம் இல்லத்தில் நடைபெற்று பின்னர் கந்தன் காடு இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:- குடும்பத்தினர்.


### கார் விற்பனைக்கு

வைத்தியரின் Toyota Prius 2015 (zvw30) NP CAA XXXX இலக்க 34000km, 24km / ℓ எரிபொருள் சேமிப்புடைய கார் விற்பனைக்குண்டு.

076 535 9284

### கட்டடத்தின் மேற்பகுதி வாடகைக்கு

யாழ் நகரில் இருந்து 3 Km தூரத்தில் பலாலி வீதியில் கட்டடத்தின் மேற்பகுதி வாடகைக்குண்டு. அலுவலகங்கள், கல்வி நிறுவனங்களிற்கு உகந்தது.

தொடர்பு - 076 275 3016

### வேலையாள் தேவை

வயது முதிர்ந்த பெண் ஒருவரை வீட்டில் தங்கிநின்று பார்த்து கொள்வதற்கு 30-50 வயதிற்கு இடைப்பட்ட பெண் ஒருவர் தேவை.

சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

தொடர்பு - 077 198 8155


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**தங்கராசா ஜெயராகவன்**

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 29 | 16 |
| . | . |
| 05 | 01 |
| . | . |
| 1980 | 2019 |

*திதி: தைமாத வளர்பிறை தசமி*

ஓராண்டு சென்றாலும்
எம்மனதை விட்டு அகலாது
உங்கள் ஆத்மா சாந்தி அடைய
இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
அம்மா தங்கராசா நாகேஸ்வர் (காரைநகர்)
அக்கா - ஜெயலட்சுமி , அத்தான் - தங்கவேல் } சுவிஸ்
மருமக்கள் - ஷயந்த், அதிஷியா, நிமிஷா }

வலந்தலை, பெரிய மணல், காரைநகர்.

## 01ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 27 | 17 |
| . | . |
| 11 | 01 |
| . | . |
| 1973 | 2019 |

### அமரர் குணரத்தினம் வசந்தகுமாரி

எம் குடும்ப பாச விளக்காய்
ஒரு கூட்டுக் கிளியாக
எம்மோடு வாழ்ந்து
எம்மையெல்லாம் தவிக்கவிட்டு
விண்ணுலகு புகுந்த உங்களை
நாம் எண்ணாத நாளில்லையம்மா!

அவர்களின் முதலாம் ஆண்டு சிரார்த்த தின நிகழ்வு நாளை (05.02.2020) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அச்செழு வடக்கு,
நீர்வேலி.

குடும்பத்தினர்.
077 637 9722, 077 4666 231

## பியர்க...

பெண் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பளைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இரகசிய தகவலின்படி நேற்று முன்தினம் அங்கு சென்று பெண்ணைக் கைதுசெய்ததோடு 5 பியர்ரின்களையும் கைப்பற்றினார்கள் என்று பளைப் பொலிஸார் தெரிவித்தனர். அந்தப் பெண் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். கிளிநொச்சி நீதிமன்றில் வழக்குத் தொடுக்கப்படும் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த-6)

## இலங்கை...

தமிழீழ அரசு முன்வைத்துள்ளது:
கொல்லப்பட்டவர்களின் மிச்சங்களை நல்லடக்கம் செய்வதற்காக அவர்தம் குடும்பத்தினரிடம் உடனடியாக மீட்டளிக்க வேண்டும் அல்லது இராணுவம் அவர்களின் உடலங்களைப் புதைத்த இடத்தை வெளிப்படுத்த வேண்டும்.
இறந்து விட்டார்களென கோத்தாபய அறிவித்துள்ள ஆயிரக்கணக்கான தமிழர்கள் இறந்து போன சூழல்கள் பற்றிய விவரங்களை வழங்குமாறு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மிசேல் பசலே இலங்கையைக் கோர வேண்டும். தெரிந்து கொள்ளும் உரிமையின் படியும், உண்மையறியும் உரிமையின் படியும் என்ன நடந்தது என்பதை அறிந்து கொள்ளும் உரிமை குடும்பத்தினர்க்குண்டு. தெரியாமலிருக்கும் தொடர் வேதனையை இவ்விதம் தணித்துக்கொள்ள இயலும்.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் உயிருடனில்லை என்ற கோத்தாபயவின் அறிவிப்புக்கு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் 43ஆம் அமர்வுக்கான தம் வாய்மொழி அறிக்கையில் மறுவினையாற்ற வேண்டும்.

கட்டாயக் காணாமற்போதல்கள் பற்றிய ஐ.நா. செயற்குழு இன்னமும் தன்முன்னிருக்கும் காணாமற்போன தமிழர்களின் ஆயிரக்கணக்கான வழக்குகளுக்கு முன்னுரிமை தர வேண்டும்.

கட்டாயக் காணாமற்போதல்கள் பற்றிய ஐ.நா. செயற்குழு பரிந்துரைத்தபடி. போர்க்குற்றங்களையும் மானிடத்துக்கு எதிரான குற்றங்களையும் விசாரிப்பதற்குரிய கட்டளையோடு பன்னாட்டு நீதிபதிகளையும் வழக்குத் தொடுநர்களையும், சட்டத்தரணிகளையும், புலனாய்வாளர்களையும் ஒருங்கிணைத்து தனிநோக்குக் கலப்புச் சிறப்பு நீதிமன்றம் அமைக்க வேண்டுமென உயராணையர் அலுவலகப் புலனாய்வு தந்த அழைப்பைப் புதுப்பிக்க வேண்டும்

கட்டாயக் காணாமற்போதல்கள் பற்றிய ஐ.நா. செயற்குழு பரிந்துரைந்தபடி, ஆகக் கடைசியில் இப்போதாவது முந்தைய ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணையாளர் சயிட் அல் உசைன் மனிதவுரிமைகளை வலுவாக்கவும் குற்றங்கள் தண்டிக்கப்டா நிலைக்கு முற்றுப்புள்ளி வைக்கவும், போர்க்குற்றங்களும் மானிடத்துக்கு எதிரான குற்றங்க ளும் புரிந்தவர்களைப் பொறுப்புக்கூறச் செய்யவும் அளித்த பரிந்துரைகளை ஏற்றுக் கொள்ளும்படி ஐநா மனிதவுரிமைப் பேரவைக்கு அழைப்பு விடுக்க வேண்டும்.

ஐ.நா. பாதுகாப்புப் பேரவை சென்ற ஆண்டு நிறைவேற்றிய ஒரு தீர்மானம் ஆயுத மோதலின் சூழலில் கட்டாயக் காணாமற்போதலை ஒரு போர்க்குற்றமாக வரையறுத்ததைக் கருத்தில் கொண்டு, குற்றங்கள் தண்டிக்கப்படா நிலை தொடர்வது பன்னாட்டு அமைதிக்கும் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலாக அமைகிறது என்ற அடிப்படையில் ஐநா பாதுகாப்புப் பேரவை ஐ.நா. சாசனத்தின் அத்தியாயம் 7 தரும் அதிகாரத்தைப் பயன்படுத்தி இலங்கை நிலைமையைப் பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றத்தின் பார்வைக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

ஆகிய கோரிக்கைகளை ஐ.நாவை நோக்கி முன்வைத்துள்ள நாடு கடந்த தமிழீழ அரசு ஏழு கோரிக்கைகளையும் ஏற்றுத் தொடர் நடவடிக்கை எடுப்பதன் மூலம் பன்னாட்டுலக நீதி செத்து விடவில்லை என்ற திட்டவட்டமான அவசரச் செய்தியை பன்னாட்டுலகச் சமுதாயத்தால் விடுக்க முடியும் எனத் தெரிவித்துள்ளது. (ஒ.5)

## வடக்கு...

மாகாணங்களுக்கு உட்பட்ட மாவட்டங்களிலேயே அதிகளவு முன்னெடுக்கப்பட்டுள்ளன.
மதுவரித் திணைக்களத்தின் 2018 ஆம் ஆண்டின் அறிக்கையில் 25 மாவட்டங்களிலும் ஆயிரத்து 36 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.
இவற்றில் 246 வழக்குகள் அம்பாறை மாவட்டத்திலும், வவுனியா மாவட்டத்தில் 154 வழக்குகளும், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 147 வழக்குகளும் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.
அவற்றுக்கு அடுத்தபடியாக பதுளையில் 89 வழக்குகளும், நுவரெலியாவில் 85 வழக்குகளும், புத்தளத்தில் 79 வழக்குகளும், கண்டி மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் தலா 51 வழக்குகளும், மாத்தறையில் 48 வழக்குகளும், திருகோணமலையில் 27 வழக்குகளும், அம்பாந்தோட்டையில் 8 வழக்குகளும், இரத்தினபுரியில் 3 வழக்குகளும் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.
அதேநேரம் கொழும்பு, களுத்துறை, கம்பஹா, மாத்தளை, மொனராகலை, காலி, கேகாலை, அநுராதபுரம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய 10 மாவட்டங்களில் இருந்தும் எந்தவொரு வழக்குகளும் தாக்கல் செய்யப்படவில்லை. (க-105)

## மரண அறிவித்தல்



### காந்தராசா விஜிதா

புலவர் வீதி, நவாலி வடக்கை பிறப்பிடமாகவும், ஏழாலையை வசிப்பிடமாகவும் கொண்ட காந்தராசா விஜிதா நேற்று **(03.02.2020)** திங்கட்கிழமை **4.30** மணியளவில் காலமானார்.


அன்னார் காந்தராசாவின் அன்பு மனைவியும் கந்தசாமி தங்கரத்தினம் அவர்களின் அன்பு மகளும் கேசவராசாவின் அன்பு சகோதரியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள்அவரது இல்லத்தில் இன்று **(04.02.2020)** செவ்வாய்க்கிழமை முற்பகல் **11.00** மணியளவில் நடைபெற்று நவாலி வழுக்கையாறு ஆரியம்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



### சவரிமுத்து ஆரோக்கியநாதன்

சில்லாலையை பிறப்பிடமாகவும் கிளிநொச்சி செல்வா நகரை வசிப்பிடமாகவும் தற்போது புலோலியில் வசித்தவருமான யாழ் மறை மாவட்ட மூத்தமறை ஆசிரியர் சவரிமுத்து ஆரோக்கியநாதர் 03.02.2020 இல் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சில்லால்லையை சேர்ந்த காலஞ்சென்றவர்களான திரு,திருமதி சவரிமுத்து பார்பரா தம்பதிகளின் புதல்வரும், திருமதி மேரிகலிஸ்ரா (ரஞ்சி) அவர்களின் அன்பு கணவரும் மேரி அன்ரனிற்றா (யோகா-ஆசிரியர், பருத்தித்துறை St.தோமஸ் றோ.க.த.பெண்கள் பாடசாலை) அவர்களின் சிறிய தந்தையாரும்,அ.டொ.அரியரஞ்சன் (ஆசிரியர்-யாழ்.அல்வாய் வடக்கு றோ.க.த.க.பாடசாலை) அவர்களுடைய மாமனாரும், அ.குட்வின், அ.யோய்ஸ் ஆகியோரின் அன்பு பேரனும் நீக்கிலாபிள்ளை, காலஞ்சென்ற கிறிஸ்தோப்பர், மேரி மாக்ரேட் (தங்கமணி) ஆகியோரின் அன்பு சகோதரரும் காலஞ்சென்றவர்களான றெஜினா-லோரன்ஸ் செல்லத்துரை அவர்களின் அன்பு மைத்துனரும் ஸ்டெலின்(லண்டன்), விஜிதா (கனடா), கவிதா (இத்தாலி), ரஜிதா(லண்டன்) அருட்சகோதரி அஜந்தா (காமல் இல்லம் அடம்பன்) ஆகியோரின் அன்பு சிறிய தந்தையும் ஜெராட் ஜெயேந்திரன், அருட்பணி.றெனால்ட் றெமிந்திரன் அ.ம.தி (பாகிஸ்தான்), கொன்றால்ட் கொலிந்திரன், கரோலின் றெனா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை 05.02.2020இல் காலை 10மணிக்கு புலோலி புனித சூசையப்பர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித சூசையப்பர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:- குடும்பத்தினர்.* **0779352925**

இல.76, மருதன்கேணி வீதி, புலோலி தெற்கு, பருத்தித்துறை

British BUSINESS COLLEGE
Where Students Come First

BBCஇன் புதிய அனுமதிகள்

B.BC பாடசாலையின் அனைத்து வளாகங்களிலும் தைப்பூசம் அன்று (08.02.2020) சனிக்கிழமை காலை 8.00 மணிமுதல் ஏடு தொடக்கிவைக்கப்படும்.

BBC Early Learning Schools

சர்வதேச தரத்தினாலான Canada கல்லூரியின் பயிற்றுவிப்பாளர்களினால் பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியர்கள்

20 வது ஆண்டை நோக்கி BBC

- சர்வதேச அங்கீகாரம் பெற்ற நவீன கல்வித்திட்டம்
- ஆங்கிலமொழி மூல கற்கை வகுப்புக்கள்
- தமிழ் கட்டாய பாடம்
- மாதந்தோறும் செயற்பாட்டுத் திறனையும் அறிவையும் வெளிக்கொணரும் விஷேட சமூகம் சார் நிகழ்வுகள்
- விளையாட்டுடன் கூடிய கற்கைநெறிகள்

2 முதல் 5 வயது குழந்தைகளுக்கான கற்கைநெறிகள்

| பிரிவு | Play Group | Montessori | Pre School |
|---|---|---|---|
| வயது | 2⁺ முதல் 3 வரை | 3⁺ முதல் 4 வரை | 3⁺ முதல் 5 வரை |
| காலம் | 1 வருடம் | 1 வருடம் | 1 வருடம் |



வளாகங்கள்
நல்லூர் | யாழ்ப்பாணம் | மானிப்பாய் 1 | மானிப்பாய் 2 | சங்கானை
அளவெட்டி | மல்லாகம் | கோப்பாய் | பருத்தித்துறை | சாவகச்சேரி

British Business College
077 408 3656 / 077 468 2951

# செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வு

கொடிகாமம்,பெப்.4
மிருசுவில் அ.த.க.பாடசாலையின் வருடாந்த செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வுகடந்தவியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.
பாடசாலை அதிபர் க.கஜேந்திரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி கோட்டக் கல்வி பணிப்பாளர் வ. நடராசா, தென்மராட்சி கல்வி வலய ஓய்வு நிலை ஆசிரிய ஆலோசகர் செல்வி இ.இராமலிங்கம், தென்மராட்சி கல்வி வலய ஆசிரிய ஆலோசகர்கள், அயற்பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மாணவர்கள்,பெற்றோர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.
போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. (ஐ-159)





லா லிகா தொடரில் இன்று இடம்பெறும் ஆட்ட மொன்றில் பார்சி லோனா அணியை எதிர்த்து லவன்டே அணி மோதவுள்ளது. இந்த ஆட்டத்துக்கான பார்சிலோனா அணி வீரர்கள் நேற்றுப் பயிற்சியில் ஈடுபட்டனர். (ம)

# பார்முலா கார்ப்பந்தயம் ஒத்தி வைக்கப்பட்டது

சீனாவில் நடைபெறவிருந்த சம்பியன்ஷிப் பார்முலா கார்ப்பந்தயப் போட்டி கொரோனா வைரஸ் தாக்கத்தின் காரணமாக ஒத்தி வைக்கப்பட்டது.
6ஆவது சம்பியன்ஷிப் பார்முலா கார்ப்பந்தயப் போட்டி வுஹானில் இருந்து 1000 மைல் தொலைவில் உள்ள சான்யா நகரில் எதிர்வரும் மார்ச் மாதம் ஆரம்பமாகவிருந்தது.
கொரோனா வைரஸின் தாக்கம் உலகம் முழுவதும் பரவியதால் உலக சுகாதார நிறுவனம் அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்தியது. இந்த நிலையில் வீரர்கள் மற்றும் ரசிகர்களின் நலன் கருதி இந்த பார்முலா கார்ப்பந்தயப் போட்டி ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக அதன் நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர்.

# உமர் அக்மலுக்கு தடை விதிக்க வாய்ப்பு

பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர் உமர் அக்மல் உடற்தகுதி தேர்வில் தோல்வியடைந்த விரக்தியில் ஜேர்சியை கழற்றி கொழுப்பு எங்கே இருக்கிறது? என்று கேட்டதால் தடைக்கு உள்ளாக இருக்கிறார்.
பாகிஸ்தான் அணியின் முன்னணி விக்கெட் கீப்பர், துடுப்பாட்ட வீரராகத் திகழ்ந்தவர் உமர் அக்மல். ஒழுங்கீனம் மற்றும் உடற்தகுதி போன்ற பிரச்சனைகளால் சர்வதேச அணியில் விளையாட முடியாமல் உள்ளார்.
தற்போது உள்ளூர் கிரிக்கெட்டில் விளையாடி வருகிறார். பாகிஸ்தான் கிரிக்கெட் சபை உள்ளூர் தொடர்களில் விளையாடும் வீரர்களும் உடற்தகுதியை நிரூபிக்க வேண்டும் என்பதை கட்டாயமாக்கியுள்ளது.
உமர் அக்மல் பாகிஸ்தான் தேசிய கிரிக்கெட் அகாடமியில் உடற்தகுதியை நிரூபிக்க சென்றார். அப்போது சில தேர்வில் தோல்வியடைந்ததாக கூறப்படுகிறது. இதனால் கோபம் அடைந்த அவர் ஜேர்சியை கழற்றிவிட்டு கொழுப்பு எங்கே இருக்கிறது? என்று கோபத்தை வெளிப்படுத்தியுள்ளார்.
இதனால் ஒழுங்கீனமாக நடந்து கொண்டதற்கு பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அவருக்கு தடைவிதிக்கலாம் எனக் கூறப்படுகிறது.



# க்ரானடா அணி வெற்றி

ஐரோப்பிய கழகங்களுக்கிடையில் இடம்பெற்று வரும் லாலிகா தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற போட்டி யொன்றில் க்ரானடா அணி 2:1 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.
க்ரானடா - எஸ்பன்ஜோல் அணிகள் மோதிய போட்டியின் முதல் பாதியாட்டத்தில் 27ஆவது நிமிடத்தில் கிடைத்த பெனால்டி வாய்ப்பை அந்த அணி வீரர் தோமஸ் கோலாக மாற்றினார். பதிலுக்கு எஸ்பன்ஜோல் அணியின் வீரர் றோவின் மஜிஸ் ஒரு கோலைப் பதிவு செய்ய முதல் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் 1:1 என்ற கணக்கில் சமநிலையில் காணப்பட்டனர்.
இதனால் இரண்டாம் பாதி ஆட்டம் விறுவிறுப்பாகக் காணப்பட்டது. இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பித்து முதலாவது நிமிடத்தில் கிரானடா அணி வீரர் கார்லஸ் ஒரு கோலைப் போட ஆட்டம் இன்னும் விறு விறுப்பானது. எதிரணியினர் மேலுமொரு கோலைப் போட முயற்சிகள் க்ரானடா அணி வீரர்களால் முறியடிக்கப்பட இறுதியில் க்ரானடா அணி 2:1 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.



# லா லிகா பட்டியலில் ரியல்மட்ரிட் முன்னிலை

ஸ்பானியக் கழகங்களுக்கு இடையிலான லா லிகா தொடரில் புள்ளிப் பட்டியலில் ரியல் மட்ரிட் அணி முன்னிலையில் உள்ளது.
49 புள்ளிகளுடன் ரியல்மட்ரிட் முதலிடத்தில் உள்ளது. 43 புள்ளிகளுடன் பார்சிலோனா இரண்டாவது இடத்தில் உள்ளது.
செவில்லா 38 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்தில் உள்ளது. வலென்சியா 37 புள்ளிகளுடன் நான்காவது இடத்திலும், கடாபி 36 புள்ளிகளுடன் ஐந்தாவது இடத்திலும் உள்ளன. (ம)




**விற்பனைக்கு**

மணல், சல்லி, கிறவல்,
கண்டகற்கள் மலிவான விலையில்
எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்

**077 263 9302, 076 760 3066**

**வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை**

11 kg மேற்பட்ட பொதிகளுக்கு விஷேட சலுகை

UK - 550/= Germany - 650/= France - 650/=

திருமுருகன் கொம் நெற் (Pvt) Ltd.
No.321, K.K.S Road Jaffna. T.P 077 755 4528

**Spoken English, சிங்களம்**
**With Grammar**

அடிப்படை அலகிலிருந்து எழுத, வாசிக்க, பேச்சுப் பயிற்சியுடன்
▼ ஆங்கிலம் - 3 - 6 மாதம் ▼ சிங்களம் - 2 - 3 மாதம்
வேலைக்குச் செல்வோர், வெளிநாடு செல்ல உள்ளோருக்குப் பிரத்தியேக வகுப்பு.
சிறு குழுவாயின் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்.
▼ யாழ்.நகர் ▼ அச்சுவேலி. (CS/30989)(11,17)

lect by - SKB - மனோகரன் - 077 725 4627

**பணிப்பெண்கள் தேவை**

யாழ்.நகரில் உள்ள குளிர்பான நிலையமொன்றுக்கு விநியோக பகுதியில் வேலைசெய்வதற்கு தகுதி வாய்ந்த பணிப் பெண்கள் தேவை. ஆர்வமுள்ளவர்கள் கீழ்வரும் தொலைபேசி எண்ணுக்குத் தொடர்பு கொள்ளவும். யாழ்.நகரை அண்மித்த பகுதிகளில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

**077 618 2725** (CS/31003)(11,17)

**பணியாளர்கள் தேவை**

யாழ். ஸ்ரான்லி வீதியில் ஸ்ரீ நாக விகாரைக்கு முன்பாக அமைந்திருக்கும் அக்ஷதை / நிலா உணவகத்தில் கீழ்வரும் பணி வெற்றிடங்கள் உண்டு.

01. சமையல் உதவியாளர் - பெண் (50 வயதுக்குள்)
02. மரக்கறிகளை வெட்டித் துப்புரவு செய்யும் பணி
03. உணவு பரிமாறும் பணி - பெண் பிள்ளைகள்

சுறுசுறுப்பு, சுத்தம், நற்பண்பு மற்றும் முன்னனுபவம் உடையவர்களாக இருத்தல் வேண்டும்.

**வாராந்த விடுமுறை, EPF, ETF ஏற்பாடுகள் உண்டு.**

அக்ஷதை / நிலா
நிர்வாகம். (CS/31012)(11,17)




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 04.02.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.